16பக்கங்கள் 30/-

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2020 ஒக்டோபர் 17 சனிக்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 88 இல. 247

October 17,Saturday, 2020

கொரோனா வைரஸ்; பிரான்சில் உச்சம் 02

வளமான நிலத்தில் வசதியற்ற மக்கள் 08

தோட்டக் காணிக்குள் மோட்டார் குண்டு 10

கடைசி பந்தில் சிக்சர்; பஞ்சாப் திரில் வெற்றி 16

சட்டத்தை மலினப்படுத்த இடமளிக்காதீர்;

ரிஷாட் கைதாகாமை குறித்து சட்ட மாஅதிபர் பொலிஸார் மீது கடும் சீற்றம்

உத்தரவுகள் பலவும் மீளவும் பிறப்பிப்பித்தார்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தொடர்பில் சட்ட மாஅதிபர் டப்புல டி லிவேரா, பொலிஸாருக்கு கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளார். அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் ரிஷாட்டை கைது செய்யுமாறு சட்ட மாஅதிபர், பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில், ரிஷாத் பதியுதீனை இதுவரையில் பொலிஸார் கைது செய்யவில்லை. சட்டத்தை மலினப்படுத்தும் வகையில் பொலிஸார் 06

20 ஆவது திருத்தச் சட்டத்தினால் தமிழ் மக்களுக்கு பாதிப்பில்லை

கனேடிய தூதுவரிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

உத்தேச 20 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படப்போவதில்லையென்பதுடன் 13 ஆவது திருத்தத்தை சரியாக கையாள்வதே தமிழ் மக்களின் அபிலாஷைகளை பெற்றுக் கொள்வதற்கான ஆரம்பம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் 06

கைது செய்யப்படப் போவதை அறிந்து தப்பிச் சென்ற ரிஷாட்

CID விசாரணையில் தகவல்; மனைவியிடம் வாக்குமூலம் பதிவு

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தான் விரைவில் கைது செய்யப்படுவேன் என்பதை தனது வாகனத்திலுள்ள வானொலிச் செய்தி மூலம் அறிந்து புத்தளம் – சிலாபம் வீதியில் வாகனத்தைக் கைவிட்டு விட்டு தப்பித்தாரென குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ரிஷாட் கடந்த 13ஆம் திகதி புத்தளத்திலிருந்து கொழும்புக்கு வந்துள்ளார். பயணத்தின் போது தனது வாகனத்திலுள்ள வானொலியில் ஒலிபரப்பான தனியார் வானொலி அலைவரிசை 06

அரசியலிலிருந்து

ஓய்வுபெறவுள்ள ஜோன் அமரதுங்க

ஐக்கிய தேசியக் கட்சியில் தனக்குரிய தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லையென்றால் அரசியலிலிருந்து ஓய்வு பெற முன்னாள் 06

பிரபல நடிகை அனுலா புலத்சிங்கள காலமானார்

மேடை மற்றும் தொலைக்காட்சி நாடக நடிகை அனுலா புலத்சிங்கள காலமானார். உடல்நலக் குறைவு காரணமாக ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் நேற்று காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 73. 06

விஜய்சேதுபதி, முரளி திரைப்பட பிரச்சினை பெருசா போகுது, பூர்வீகத் தமிழன் பற்றிப் பேசின ஐயா அமைதியா இருக்கிறார்.....?
அவர் பஜனை பாடல்கள் அடங்கிய பக்தி படங்கள் மட்டும்தானாம் பார்ப்பார்....!!!

கொரோனா பாதுகாப்பு மருத்துவ உதவிகளை வழங்கியது அமெரிக்கா

கொரோனா தொற்றுப் பரவலை தடுக்கும் பாதுகாப்பு அங்கிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களடங்கிய ஒருதொகுதி பொருட்களை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ளது. சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம் 06

மின்தூக்கி அறுந்து வீழ்ந்து இருவர் பலி

கண்டியில் பரிதாப சம்பவம்

கண்டி லேவெல்ல பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றின் மின்தூக்கி (லிஃப்ட்) அறுந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

லேவெல்ல தர்மா அசோக மாவத்தையிலுள்ள தொழிற்சாலையின் மின் தூக்கியே 06

பிரதமரின் அலுவலக பிரதானியாக யோஷித்த

யோஷித்த ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலக பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார். யோஷித்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந் நிலையில் கடந்த 13 ஆம் திகதி பதில் சீன தூதுவர் யோசித்த ராஜபக்ஷவை சந்தித்து வாழ்த்து தெரிவித்ததாகவும் அண்மையில் இலங்கை வந்த சீனக் 06

முழு நாடும் கொரோனா தொற்று வலயமாக அறிவிப்பு

நாட்டின் தற்போதைய நிலையில் முழு நாட்டையும் கொரோனா தொற்று வலயமாக அறிவிக்க நேரிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவித்தாலும் இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார். அரச மற்றும் தனியார் நிறுவனங்களை வழமை போல் இயக்க முடியும். சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமைய நடவடிக்கைகளை 06

தங்களை தாங்களே பாதுகாத்து கொள்ளும் நிலையில் மக்கள்

எதிர்வரும் நாட்கள் தீர்மானமிக்கது என்கிறார் இராணுவத் தளபதி

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் எதிர்வரும் நாட்கள் மிகவும் தீர்மானமிக்கதென இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளாகாமல் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் கொரோனா வைரஸ் 06

கைதிகள் தொலைபேசி மூலமாக உறவினர்களுடன் பேச வசதி

கொரோனா பயம் காரணமாக தற்காலிக ஏற்பாடு

கொரோனா தொற்று பரவல் காரணமாக சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் தங்களுடைய உறவினர்களுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்வதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை கைதிகளை பார்ப்பதற்காக அவர்களது குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு கொரோனா தொற்று காரணமாக தற்காலிமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அதற்கு சலுகை வழங்கும் விதமாக இந்த நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டம் மீது

பாராளுமன்றில் 21, 22ஆம் திகதிகளில் விவாதம்

20ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்வரும் 21ஆம் 22ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் 20ஆவது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எதிர்வரும் 20ஆம் திகதி சபாநாயகரினால் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படும்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 06

ரியாஜ் பதியுதீன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை 20 இல்!

அவசர தேவை என்பதால் உடனடியாக எடுக்க இணக்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தான் கைது செய்யப்படுவதை தடுக்குமாறு கோரி உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன் தாக்கல் செய்த ரிட் மனு எதிர்வரும் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் 06

போதைப்பொருள் கடத்தல் மன்னன் 'கட்ட காமினி' இந்தியாவில் கைது

காஞ்சிபுரம் கியூபிரிவு பொலிஸார் நடவடிக்கை

இலங்கையைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல் மன்னன் சுனில் ஜெமினி பொன்சேகா என்கிற 'கட்ட காமினி' பெங்களூரில் தலைமறைவாகி இருந்த வேளை 06

லேக் ஹவுஸ் ஆகிய நாம் உங்கள் பாதுகாப்பின் முக்கியத்துவம் கருதி பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்



சர்வதேச செய்திகள்

கொவிட்-19: பிரான்ஸில் நோய்த் தொற்று உச்சம்

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் மற்றும் மேலும் எட்டு நகரங்களில் இன்று தொடக்கம் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படும் நிலையில் அந்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலில் பெரும் பாய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

அந்நாட்டில் கடந்த வியாழக்கிழமை மேலும் 30,621 நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதற்கு முந்திய தினத்தில் 22,591 நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையிலேயே புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

உயிர்களை காப்பதற்கு கடும் கட்டுப்பாடுகள் அவசியம் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

ஐரோப்பாவில் இரண்டாம் அலை கொரோனா தாக்கம் தீவிரம் கண்டிருக்கும் நிலையில் அங்கு மில்லியன் கணக்கான மக்கள் புதிய கட்டுப்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர்.

இன்று சனிக்கிழமை தொடக்கம் பிரிட்டன் தலைநகர் லண்டனில் உட்புறங்களில் சமூக ஒன்றிணைவுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் ஏனைய பகுதிகளிலும் கொவிட்–19 அபாய நிலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பிரான்ஸ், இத்தாலி, போலந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் கடந்த வியாழக்கிழமை தினசரி நோய்த் தொற்று எண்ணிக்கை சாதனை அளவுக்கு உச்சம் பெற்றிருந்தது.

இந்த பெருந்தொற்று ஆரம்பித்தது தொடக்கம் இல்லாத அளவுக்கு ரஷ்யாவில் ஒருநாளில் அதிகபட்சம் 286 பேர் உயிரிழந்தனர்.

இந்த பிராந்தியத்தில் தினசரி 1,000 உயிரிழப்புகள் என்ற கட்டத்தை தாண்டி இருப்பதால் கடும் கட்டுப்பாடுகளை கொண்டுவரும்படி உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

புர்கினாவில் 3 கிராமங்களில் தாக்குதல்: 20 பேர் உயிரிழப்பு

ஜிஹாதிக்களின் மையமாக மாறியுள்ள வடக்கு புர்கினா பாசோவில் மூன்று கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 20 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

செனோ மாகாணத்தில் மூன்று கிராமங்களே கடந்த புதன்கிழமை ஜிஹாதிக்களால் தாக்கப்பட்டிருப்பதாக ஆளுநகரின் பேச்சாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. சந்தைகள் மற்றும் கிராமங்களிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றாக உள்ள புர்கினா பாசோ கடந்த 2015இல் அண்டை நாடான மாலியில் இருந்து வந்த ஜிஹாதிக்களின் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்து வருகிறது. இந்த ஆண்டில் இடம்பெற்ற தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு பலரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்திலும் இடம்பெயர்ந்தவர்கள் பயணித்த வாகனத்தை இடைமறித்து நடத்தப்பட்ட தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

டிரம்ப், பைடன் தனித்தனியே தொலைக்காட்சியில் பிரசாரம்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பும் அவரை எதிர்த்து போட்டியிடும் ஜோ பைடனும் இரண்டு வெவ்வேறு பிரசார ஒளிபரப்புகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

என்.பி.சி தொலைக்காட்சியில் ஒரு மணி நேரத்துக்கு டிரம்ப்பும், ஏ.பி.சி. தொலைக்காட்சியில் ஒன்றரை மணிநேரத்துக்கு பைடனும் பிரசாரம் செய்யவுள்ளனர்.

வாக்காளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அவர்கள் இருவரும் பதிலளிப்பர்.

கருத்து கணிப்புகளில் பைடன் தொடர்ந்து முன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் மூன்றாம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. ஆரம்பக்கட்ட வாக்களிப்பில் 14 மில்லியன் பேர் வாக்களித்துவிட்டனர். 8 வீத வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்து இன்னமும் முடிவெடுக்கவில்லை.

அத்தகையோரின் மனத்தில் இடம்பிடிக்க, இரு வேட்பாளர்களும் கடுமையாக முயன்று வருகின்றனர்.

உலகெங்கும் ட்விட்டர் சேவையில் தடங்கல்

ட்விட்டரின் உட்கட்டமைப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தால் உலக அளவில் அதன் சேவையில் தடை நேர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்விட்டர் தளத்தின் சேவை கடந்த வியாழக்கிழமை இரவு முதல் பாதிக்கப்பட்டது. சமூக ஊடகத் தளத்தில் செய்தி அனுப்புவதற்கு பயனீட்டாளர்கள் சிரமத்தை எதிர்நோக்கினர்.

அந்தப் பிரச்சினை தொடர்பில் அனைத்துக் கண்டங்களிலும் புகார் அளிக்கப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது. ட்விட்டரின் உட்கட்டமைப்புகளில் மாற்றம் ஒன்று செய்யப்பட்டதால் சேவையில் தடை ஏற்பட்டது என்று நிறுவனம் கூறியது.

இருப்பினும், ஊடுருவல் ஏதும் நேரவில்லை என்று உறுதியளிக்கப்பட்டது. பல பகுதிகளிலும் சில மணி நேரத்திற்குள் சேவை வழமைக்கு திரும்பியது.

கடந்த ஜூலையில் ட்விட்டர் உள்ளக அமைப்புக்குள் இடம்பெற்ற ஊடுருவலில் பராக் ஒபாமா, பில்கேட்ஸ் போன்ற முன்னணி பயனீட்டாளர்களின் கணக்குகள் ஊடுருவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஷேக்ஸ்பியரின் புத்தகம் 10 மில். டொலருக்கு ஏலம்

புகழ்பெற்ற பிரிட்டிஷ் எழுத்தாளர் ஷேக்ஸ்பியரின் 1623 ஆம் ஆண்டுப் படைப்பின் முதல் தொகுப்பு நூல் சுமார் 10 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

அந்த அரிய தொகுப்பில் ஷேக்ஸ்பியரின் 36 படைப்புகள் உள்ளன.

உலகில் அந்த நாடகத் தொகுப்பிற்கு 6 பிரதிகளே உள்ளன என நம்பப்படுகிறது. அது சுமார் 6 மில்லியன் டொலர் வரை ஏலம் போகும் என முன்னதாக ஊகிக்கப்பட்டது. நாடகத் தொகுப்பு நூலை வாங்கியவரின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

தொகுப்பில் நகைச்சுவை, வரலாறு, சோகக்கதைகள் போன்றவை சேர்க்கப்பட்டன. ஷேக்ஸ்பியர் இறந்த 7 ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது நண்பர்கள் அதனைத் தொகுத்தனர். அதில் இதுவரை பதிப்பிடாத 18 நாடகங்களும் உள்ளன.

அந்த நூலை ஓக்லாந்தில் உள்ள மில்ஸ் கல்லூரி ஏலத்திற்கு வைத்தது. ஏல விற்பனை கடந்த கடந்த வியாழனன்று நடைபெற்றது.

20 ஆண்டுகளில் முதல்முறையாக ஷேக்ஸ்பியரின் முதல் நாடகத்தொகுப்பு முழுமையான வடிவில் விற்பனைக்கு வந்தது.

அமெரிக்காவில் கொரோனா பாதிப்பு 8 மில்லியனாக உயர்வு

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 8 மில்லியனைத் தாண்டியுள்ளது. அங்கு புதிதாக 60,000 பேருக்கு வைரஸ் தொற்று உறுதியானது.

கடந்த ஓகஸ்ட் மாத நடுப்பகுதிக்குப் பின்னர் இப்போது, ஒரே நாளில் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில், ஒரு மாதத்திற்குள் சுமார் 1 மில்லியன் பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய்ப்பரவல் ஆரம்பித்ததில் இருந்து 217,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

குளிர்காலம் ஆரம்பித்ததில் இருந்து வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குளிர்காலத்தில் அதிகமானோர் வீட்டிலே இருப்பதால் நோய்ப்பரவல் மோசமாகக்கூடுமென சுகாதார வல்லுநர்கள் எச்சரித்தனர்.

மாணவர்கள் மீண்டும் பாடசாலைகள், கல்லூரிகளுக்குத் திரும்புவதாலும், கட்டுப்பாடுகளால் மக்கள் சோர்வடைந்திருப்பதாலும் நோய்ப்பரவல் மோசமாகியுள்ளதை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசின் புதிய தடையை மீறி தாய்லாந்தில் ஆர்ப்பாட்டம்

தாய்லாந்து ஆர்ப்பாட்டங்களுக்கு தடை விதிக்கும் அரசின் ஆணையை மீறி ஆயிரக்கணக்கான ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைநகர் பாக்கொக்கில் ஒன்றுதிரண்டனர்.

அமைதியான முறையில் கோசங்கள் எழுப்பி திரண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் புதிய ஊரடங்கு சட்டத்தால் சில மணி நேரத்தின் பின் கலைந்து சென்றனர். எனினும் தாம் ஆர்ப்பாட்டங்களை தொடர்வதாக அவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட 20 செயற்பாட்டாளர்களையும் விடுவிக்கும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

மன்னர் மகாவஜ்ஜிரலொங்கோன், பிரதமர் பிரயூத் சான் ஓ சா ஆகியோரைக் குறிவைத்து கடந்த 3 மாதங்களாக நடத்தப்படும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு திணிக்கப்படும் தடைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டத்தில் தாய்லாந்து மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மூன்று விரல்களில் வணக்கம் செலுத்தி தங்களது எதிர்ப்பை ஆர்ப்பாட்டக்காரர்கள் பதிவு செய்தனர்.

பிரயூத் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, கடந்த ஆண்டு அங்கு நடைபெற்ற தேர்தல் முடிவுகளை சூழ்ச்சித் திறனுடன் கையாண்டதாகக் குறிப்பிட்டு அவரைப் பதவியிலிருந்து நீக்கும் பொருட்டு இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

ஆனால், தேர்தல் நியாயமான முறையில் நடைபெற்றதாக முன்னாள் இராணுவ சதிப்புரட்சித் தலைவரான பிரயூத் குறிப்பிடுகிறார்.

மேலும், அரசருக்கான அதிகாரங்களைக் குறைத்து புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அவசர ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட அரை மணி நேரத்துக்குள், பிரயூத்தின் அலுவலகத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தவர்களை கலவரத் தடுப்பு பொலிஸார் கலைத்தனர். ஆணைகளை ஏற்க மறுத்த 20க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெரும் விண்வெளிக் குப்பைகள் மோதும் அச்சுறுத்தல் விலகியது

மோதும் அபாயம் இருந்த இரு விண்வெளி குப்பைகள் ஆபத்து இன்றி விலகிச் சென்றிருப்பதாக விண்வெளி ரேடார் இயக்குபவர்களான லியோலெப்ஸ் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் செயலிழந்த செய்மதி மற்றும் சீன ரொக்கெட் உடல் ஒன்றே மோதும் வகையில் நெருங்கி வந்தன. எனினும் இந்த இரண்டும் 25 மீற்றர் வரை நெருங்கி வந்து விலகிச் சென்றிருப்பதாக லியோலெப்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டும் மோதியிருந்தால் ஆயிரக்கணக்காக விண்வெளிக் குப்பைகள் உருவாக்கி விடும் என்று முன்னதாக எச்சரிக்கப்பட்டிருந்தது. எனினும் அன்டார்டிகாவுக்கு மேலால் விண்வெளி குப்பைகளுக்கான எந்த அடையாளமும் தெரியவில்லை என லியோலெப்ஸ் நிறுவனம் நேற்றுக் காலை தெரிவித்தது.

இந்த இரண்டு பொருட்களின் மொத்த எடை 2.5 தொன்களுக்கு மேல் இருக்கும் நிலையில் வினாடிக்கு 14.66 கிலோமீற்றர் வேகத்தில் மோதினால் பெரும் அழிவு ஏற்படும் என்றும் விண்வெளி குப்பை மழை ஒன்று உருவாகும் என்று முன்னர் எச்சரிக்கப்பட்டிருந்தது. அது செய்மதிகளின் செயற்பாடுகளுக்கும் தடங்கலை ஏற்படுத்த வாய்ப்பு இருந்தது.

அமெரிக்க தேர்தல்: வாக்களிப்பு தீவிரம்

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

இந்த மாநிலத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் கூட்டியே வாக்களிக்கும் முறை கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. வாக்காளர்கள் அதிகாலையிலேயே திரண்டு வந்து தனிமனித இடைவெளியை கடைபிடித்தபடி வாக்கு அளித்தனர்.

இந்த மாகாணத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் சௌட் உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வாக்களிக்கின்றனர். இதுவரை அமெரிக்காவில் 14.6 மில்லியன் மக்கள் அஞ்சல் மூலமாகவும், நேரிலும் வந்து வாக்களித்துள்ளனர்.

நியூசிலாந்தில் இன்று தேர்தல்

நியூசிலாந்தில் இன்று சனிக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

எதிர்த்தரப்புத் தேசியக் கட்சியைக் காட்டிலும், பிரதமர் ஜசிண்டா ஆர்டனின் தொழிலாளர் கட்சி 15 புள்ளிகள் முன்னிலை வகிப்பதாக கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன.

கொரோனா வைரஸ் பரவலைச் சமாளிப்பது, கிரைஸ்ட்சர்ச் பள்ளிவாசல் துப்பாக்கிச் சூட்டைக் கையாண்ட விதம் ஆகியன பற்றிப் பல தரப்பினரும் ஆர்டனைப் பாராட்டினர்.

தேசியக் கட்சித் தலைவர் ஜுடித் கோலின்ஸுடன் நடத்தப்பட்ட தேர்தல் நேரடி விவாதத்தில் பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டது.

நியூசிலாந்தில் சொத்து வரி அறிமுகம் செய்யப்படலாம் என்று கோலின்ஸ் கூறியதற்கு, அவ்வாறு இல்லை என்று ஆர்டன் உறுதியாய் மறுத்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2020 ஒக்டோபர் 17 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

இன்றைய சுபதினம்
சார்வரி வருடம் ஐப்பசி 1
ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: மரணஅமிர்த யோகம்
நட்சத்திரம்: சித்திரை பகல் 2.14
திதி: சூன்ய

தொழுகை நேரம்
17 முதல் 22 வரை
சுபஹ் - 04.41
லுஹர் - 11.57
அஸர் - 03.16
மஃரிப் - 05.55
இஷா - 07.05

காணி அபகரிப்பை தடுக்க கடும் சட்ட நடவடிக்கை

பாதுகாப்புச் செயலாளர்

ஸாதிக் ஷிஹான்

நாட்டில் எதிர்காலத்தில் காணி அபகரிப்புக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதச் செயல்களுக்கு வாய்ப்புள்ள தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்கள் தொடர்பில் மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்த பாதுகாப்புச் செயலாளர் காணி விவகாரத்தில், தங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வலியுறுத்தினார்.

நாரேஹென்பிட்டியிலுள்ள உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் நேற்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக கருத்துவெளியிட்ட பாதுகாப்பு செயலாளர், "கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவும் நிலைமை தொடர்பாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

06

20ஆவது திருத்தம்;

ஜனாதிபதி கோட்டாபய மீண்டும் சிந்தித்து பார்ப்பது அவசியம்

தேரர்கள் கூட்டாக வேண்டுகோள்

சுப்பிரமணியம் நிஷாந்தன்

20ஆவது திருத்தச் சட்டம் ஸ்திரமற்ற அரச பொறிமுறையொன்றை உருவாக்கும். நாட்டில் குழப்பகரமான சூழ்நிலையை தோற்றுவித்துள்ள 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவது குறித்து ஜனாதிபதி மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு பெங்கமுவே நாலக தேரர், எல்லே குணவங்ச தேரர், முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று கூட்டாக அனுப்பியுள்ள விசேட கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

கடிதத்தில் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது,

20ஆவது திருத்தச் சட்டத்தில் தான்தோன்றித்தனாக நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படுவதை உறுதிசெய்வதால் சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறையை கட்டுப்படுத்தக்கூடிய சூழல் உருவாகும். சர்வாதிகாரப் போக்கிலான ஜனாதிபதி ஒருவரும் பலவீனமான அமைச்சரவையொன்றும் உருவாகக்கூடும்.

மக்களின் அமோக ஆதரவை பெற்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரம் குறைக்கப்படுவதும் நாட்டின் ஸ்திரத்தமையை பலவீனப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ள 20ஆவது திருத்தச்சட்டம் அமைச்சர்கள் மற்றும் அவர்களின் விடயதானங்கள் ஜனாதிபதியின் தேவைக்கேற்ப எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றியமைக்க அதிகாரம் கிடைக்கப்பெறும். 30 இற்குள் வரையறுக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை மாற்றக்கூடிய பின்புலமும் உள்ளது.

அரசியலமைப்பினூடாக ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் நீக்கப்பட்டுள்ளதால் ஜனாதிபதியாக பதவி வகிப்பவர்களால் அரசியலமைப்புக்கு முரணாக மக்களுக்கு விரோதமாக செய்யப்படும் சந்தர்ப்பங்களை தடுத்து நிறுத்த முடியாது போகும் வகையில் நீதிமன்றத்துக்கு பொறுப்புக்கூறும் நிலை இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நோக்கில் 20ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் சட்டத்தின் ஆட்சிக்கு பதிலாக ஸ்திரமற்ற ஓர் ஆட்சிமுறை உருவாக்கப்படுவதற்கான சூழ்நிலையே அதிகமாக உள்ளது. இது குறித்து மீண்டும் ஜனாதிபதி சிந்தித்துப் பார்க்க வேண்டுமெனவும் தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கொரோனா தொற்று பன்னலையில் 11 பேர் கண்டுபிடிப்பு

மாவத்தகம தினகரன் நிருபர்

பன்னல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரிவில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் 11 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் தொற்றுக்குள்ளானர்வர்களுடன் தொடர்புடையவர்களென்ற வகையில் 100 குடும்பங்களுக்கு மேல் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பன்னல நகரில் ஒரு சட்டத்தரணியின் அலுவலகத்தில் சேவையாற்றிய பெண்ணொருவர் கொரோனா தொற்றுக்குள்ளானரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

06

தனியார் துறையில் தொழில் புரியும்

ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது எல்லையில் மாற்றம்?

தனியார் துறையில் தொழில் புரியும் ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 60 வயது வரை அதிகரிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளளார்.

எதிர்காலத்தில் தனியார் துறை ஊழியர்களிடமிருந்து நாட்டிற்கு மேலதிக சேவைகளைப் பெறும் நோக்கில் இதனை முன்னெடுக்க உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

தொழில் திணைக்களத்தில் (14) நடைபெற்ற தொழிலாளர் ஆலோசனைக் குழு கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட இந்த திட்டத்திற்கு பணியாளர் சபை மற்றும் தொழிற்சங்கங்களின் முழு ஆதரவும் கிடைத்துள்ளது.

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 397 பேர் வெளியேற்றம்

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 397 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 53,011 பேர் இதுவரையில் மொத்தமாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 84 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 9,556 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை நேற்றுக் காலை அவுஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து வருகை தந்த 12 பேர், பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சீனத்தூதரகத்தின் பதில் தூதுவர் Hu Wei நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தியபோது பிடிக்கப்பட்ட படம். இச்சந்திப்பில் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மனும் கலந்து கொண்டார்.

குடிநீருக்கு மூலாதாரமாக விளங்கும்

நதிகள் கட்டமைப்பை பாதுகாக்க விசேட திட்டம்

சுப்பிரமணியம் நிஷாந்தன்

நாட்டு மக்களுக்கும், விவசாயம் மற்றும் பிற நோக்கங்களுக்காக தண்ணீரை பெற்றுக்கொள்ளும் முக்கிய மூலாதாரமாக விளங்கும் நதிகள் கட்டமைப்பைப் பாதுகாக்க சுற்றுச்சூழல் அமைச்சு விசேட திட்டமொன்றை தயாரித்துள்ளது சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

'நதிகளை பாதுகாப்போம்' என்ற கருப்பொருளில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் 103 நதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அதற்காக 2,300 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நம் நாட்டின் முழு நதிகள் கட்டமைப்பும் மக்களின் பல்வேறு நடவடிக்கைகளால் மாசுபடுத்தப்பட்டுள்ளன.

சில நதிகளுக்கு அருகாமையிலுள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளும் பாதிப்படைந்துள்ளன. இதனால் ஆறுகளுக்கு நீர் வழங்கும் நீர் மூலாதாரங்கள் கூட இழக்கப்படுகின்றன.

குடிநீர் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் நீர் மாசுபடுவதால் பல்வேறு நோய்களாலும் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். ஆறுகளுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் காரணமாகவும் ஆறுகள் மிகவும் மாசுபட்டுள்ளன.

குறிப்பாக கடுவெலை முதல் பேலியாகொடை பாலம் வரையான களனி ஆற்றின் குறுக்கே 7,000 தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் சுற்றுச் சூழல் அறிக்கைகளை 3,000 தொழிற்சாலைகள் மட்டுமே பெற்றுக்கொண்டுள்ளன. எஞ்சிய 4,000 தொழிற்சாலைகள் சுற்றுச்சூழல் அறிக்கையை பெற்றுக்கொள்ளவில்லை.

06

கொரோனாவால் பாதிக்கப்பட்ட

மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசிடம் சஜித் கோரிக்கை

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நிவாரணத் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் இதனை கூறியுள்ளார். கொரோனா வைரஸ் பரவலினால் பாதிக்கப்பட்ட மினுவாங்கொடை மற்றும் பிற பகுதி மக்களுக்கு எந்தவிதமான கொடுப்பனவும் அல்லது பொருள் நிவாரணமும் வழங்கப்படவில்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அலட்சியம் காரணமாக நாட்டில் இரண்டாவது கொரோனா அலை ஏற்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

சந்தேக நபர் உயிரிழப்பு; இரு பொலிஸார் இடைநீக்கம்

பூகொடை பொலிஸாரின் தடுப்புக் காவலிலிருந்த சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரும் சார்ஜென்ட் ஒருவருமே இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த உத்தரவு கம்பஹா உப பொலிஸ் அத்தியட்சகர் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி தலைமையில் வலுவான புலனாய்வு கட்டமைப்பு உருவாக்கம்

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

சுப்பிரமணியம் நிஷாந்தன்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய பாதுகாப்பு மற்றும் உள்ளக விவகாரங்கள் மீதான சர்வதேச தலையீடுகள் நீக்கப்பட்டு வலுவான ஒரு புலனாய்வு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

என்றாலும் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தேசியப் பாதுகாப்பும் புலனாய்வுத்துறையும் வலுவிழந்து காணப்பட்டதுடன், நாட்டில் சர்வதேச தலையீடுகளும் அதிகமாக காணப்பட்டிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

'தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் அபிவிருத்தி' என்ற தொனிப்பொருளில் கொத்தலாவல தேசியப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 13ஆவது ஆராய்ச்சி மாநாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தேசியப் பாதுகாப்பு குறித்து ஏற்பட்ட குழப்பகரமான சூழ்நிலை காரணமாக நாடு இன்னமும் பீதியில்தான் உள்ளது. 2015 முதல் 2019 வரை நாட்டின் தேசியப் பாதுகாப்பு மீது சர்வதேச அழுத்தம் இருந்தது. ஏறக்குறைய 30 ஆண்டுகளாக நாட்டைச் சூழ்ந்திருந்த எல்.டி.டி.ஈயின் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை காப்பாற்றும் நடவடிக்கையின் போது அப்போதைய பாதுகாப்பு

06

விரைவில் வெளிவருகிறது!
மாணவச் செல்வங்களுக்காக
வார நாட்களில்...

உங்கள் தினகரனுடன்
தரம்-5 மாணவருக்கான
புலமைப் பரிசில் பரீட்சை
முன்னோடி மாதிரி வினாத்தாள்கள்
மற்றும்
கொழும்பு உட்பட நாடெங்குமுள்ள
பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட
புலமைப் பரிசில் மாணவர்களுக்கான
வழிகாட்டல் பயிற்சிகள்...
மாணவர் அறிவுத் தேடலுக்காக
தினகரன் வழங்கும் வாய்ப்பு

மட்டு. பறவைகள் சரணாலயத்தில் பாரிய அழிவை ஏற்படுத்தும் தீ

கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஊழியர் தீவிரம்

மட்டக்களப்பு, பறவைகள் சரணாலயமுள்ள பகுதியில் ஏற்பட்ட காட்டு தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் நுழைவாயிலில் பிள்ளையாரடி கொக்குவில் பகுதியிலுள்ள பறவைகள் சரணாலயம் பகுதியிலேயே இந்த காட்டு தீ பரவியுள்ளது

இப் பகுதி, பெரும் நிலப்பரப்பைக் கொண்டதுடன் சதுப்பு நிலங்களையும் கொண்ட பகுதியாகவும் உலகின் பல பாகங்களிலிருந்தும் ஒவ்வொரு காலநிலைக்கும் இங்கு பலவிதமான பறவைகள் வந்து செல்கின்றன.

அண்மைக் காலமாக இப்பகுதியை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அரசாங்கத்தினால் இப்பகுதி பறவைகள் சரணாலயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அதனையும் மீறி அப்பகுதியில் அத்தமீறிய செயற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில் இந்த காட்டு தீ பரவியுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ காரணமாக சுமார் நான்கு ஏக்கருக்கு அதிகமான காடுகள் அழிந்துள்ளதுடன் தொடர்ந்து பரவும் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

தீ பரவலின் போது பறவைகள் வேறு பகுதிகளை நோக்கிச் சென்றுள்ளன. தொடர்ந்தும் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பரீட்சைகள் நடத்துவதில் வெற்றி

ஆசிரியர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யவும் திட்டம்

நாட்டின் தற்போதைய கொவிட் 19 சூழ்நிலையை எதிர்கொண்டு மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கடந்த 12ஆம் திகதி தொடங்கிய க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. நவம்பர் 06ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பரீட்சைகள் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொவிட் 19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகளில் காணப்படும் பரீட்சை மத்திய நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் முகங்கொடுத்துள்ள போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பில் திறைசேரியுடன் பேசி சலுகைகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் அவர் இந்த ஊடகச்சந்திப்பில் கூறியுள்ளார்.

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	120.37	126.14
கனடியன் டொலர்	132.20	138.18
யூரோ	201.26	209.00
ஜப்பான் யென்	1.6887	1.7628
சிங்கப்பூர் டொலர்	128.46	133.83
ஸ்டேலிங் பவுன்ஸ்	224.45	232.40
சுவிஸ் பிராங்க்	187.86	195.81
அமெரிக்க டொலர்	183.51	188.61

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	492.89	கட்டார் ரியால்	50.73
குவைத் டினார்	603.09	சவூதி ரியால்	49.54
ஓமான் ரியால்	483.42	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	50.66

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஐப்பசி மாதம் 01ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 29

குறள் தரும் சிந்தனை

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்

விருந்தினரைப் பேணுவதும் ஒரு யாகமே. அதைச் செய்வதால் வரும் நன்மை இவ்வளவு என்று அளவிட முடியாது; வரும் விருந்தினரின் தகுதி அளவுதான் நன்மையின் அளவாகும்.

இளைய சமுதாயத்தை சீராக வழிநடத்த வேண்டிய பொறுப்பில் ஊடகங்கள்

ஊடகத் துறையானது நம்பகத் தன்மையும் நடுநிலைமையும் கொண்டதாக அமைய வேண்டுமென்பதே பொதுவான எதிர்பார்ப்பாகும். அச்சு ஊடகமாகட்டும், இல்லையேல் இலத்திரனியல் ஊடகமாகட்டும், அவை நம்பகத் தன்மையுடன் செயல்பட்டால் மாத்திரமே மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியும். இல்லையேல் காலப் போக்கில் மக்களால் தானாகவே புறக்கணிக்கப்பட்டு விடுமென்பதுதான் யதார்த்தம்.

ஊடகக் கலாசாரம் புனிதம் நிறைந்ததாக முன்னொரு காலத்தில் திகழ்ந்தது. செய்திகள், கட்டுரைகள் உட்பட அனைத்துமே நடுநிலையாகவும், நம்பகத் தன்மையாகவும் விளங்கின. அதேசமயம் மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் ஊடகங்கள் பெரும் பங்காற்றின. ஆனால் காலப் போக்கில் படிப்படியாக ஊடகங்கள் தங்களது நேரிய பாதையில் இருந்து பிறழ்வடையத் தொடங்கின. அவ்வாறான வேகமான மாற்றத்தின் விளைவாக ஊடகங்களில் பெருமளவானவை தறிகெட்டுச் சென்று இன்று தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்கள் பலவற்றில் இவ்விதமான தவறான கலாசாரம் தொடர்வதை பரவலாக அவதானிக்க முடிகின்றது. இந்த நிகழ்வுப் போக்கு இலங்கையில் மாத்திரமன்றி உலகெங்கும் தொடர்ந்து கொண்டு செல்கிறது. ஆகவே ஊடகங்களின் தரத்தை மக்களே தீர்மானிக்க வேண்டியவர்களாக உள்ளனர். தரமானவற்றை ஏற்பதுடன், தரங்கெட்டதை புறக்கணிக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு. மக்களின் இவ்வாறான தீர்மானம் காரணமாக சில ஊடகங்கள் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கின்றன. கூடுதலான பத்திரிகைகள் காலப்போக்கில் புறக்கணிக்கப்பட்டுப் போகின்றன.

தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி ஒரு புறம் பலவிதமான நன்மைகளைத் தந்துள்ள போதிலும், மறுபுறத்தில் ஊடகத்துறையில் நவீன தொழில்நுட்பமானது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது எனலாம். கணினி, கைத்தொலைபேசி போன்ற இலத்திரனியல் சாதனங்கள் வாயிலாக உலகம் இப்போது நமது உள்ளங்கைக்குள் வந்துள்ளமை ஒருபுறமிருக்க, ஊடகத்தை மோசமான கலாசாரத்துக்கு இட்டுச் சென்றதற்கும் நவீன தொழில்நுட்ப சாதனங்களே காரணமாக அமைந்துள்ளன.

முகநூல் போன்ற சமூகவலைத் தளங்களைப் பயன்படுத்துகின்ற பயனுநர் ஒவ்வொருவருமே இன்று தங்களை ஒரு ஊடகவியலாளராகவே உருவகப்படுத்திக் கொள்கின்றனர். முகநூலில் அவர்கள் பதிவிடுகின்ற தகவல்களைப் பார்க்கின்ற போது, அது புரிகின்றது. ஊடகத் துறை கொண்டிருக்க வேண்டிய ஒழுக்கக் கோவைகள், வரம்பு நெறிகள் போன்றவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாதவர்களாக அவர்கள் மனம் போன போக்கிலே செய்திகளைப் பதிவிட்டு வருகின்றனர். இணையத்தளங்களில் கூடுதலானவையும் இவ்வாறுதான் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஊடகங்கள் இவ்வாறு சமூகப் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவது மக்கள் மத்தியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தத் தவறுவதில்லை. அதாவது இனங்களுக்கிடையிலான குரோதங்கள் வளர்வதற்கு சில ஊடகங்களும் பங்களிப்புச் செய்து வருகின்றன. இளவயதினரை நேரான பாதையில் வழிநடத்த வேண்டிய ஊடகங்கள் தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது ஆரோக்கியமானதல்ல. அவை தமது போக்கை மாற்றிக் கொள்வது தார்மிகப் பொறுப்பாகும்.

எண்பத்தெட்டு ஆண்டு காலப் பயணத்தைத் தாண்டி இன்றும் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் தினகரன் பத்திரிகையின் 'வடக்கின் உதயம்' சிறப்பிதழ் வெளியீட்டு விழா சமீபத்தில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற போது உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகம் சம்பந்தமாகத் தெரிவித்திருந்த கருத்து இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கமே நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாகுமெனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இளைய சமூகத்தினரை சரியான முறையில் வழிநடத்த ஊடகங்கள் பங்களிப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார். இனமுரண்பாடுகளால் பல தசாப்த காலமாக பாதிக்கப்பட்டுள்ள எமது நாட்டில் அமைச்சர் தெரிவித்துள்ள கருத்தானது ஊடகங்களால் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

எமது நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஊடகங்களில் பெரும்பாலானவை சமூகப் பொறுப்பை மறந்த நிலையிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இனரீதியிலான நச்சுக் கருத்துகளை விதைப்பதிலும், மக்களை இனரீதியில் உருவேற்றுவதிலும் சில ஊடகங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய ஊடகங்களால் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதென்பது முடியாத காரியமாகிப் போகின்றது. சில ஊடகங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறும் நோக்குடன் எப்போதும் முரண்பாடுகளை விதைப்பதிலேயே குறியாக உள்ளன.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ள கருத்து இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகின்றது. செய்திகளை வழங்குவது மாத்திரமே ஊடகங்களின் பணியென்று நினைத்து விடலாகாது. மக்களை சீராக வழிநடத்த பொறுப்பும் ஊடகங்களுக்கு உண்டு.

editor.tkn@lakehouse.lk

உலக உணவுத் திட்டத்துக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டமை சிறப்பான அங்கீகாரம்

ரோம் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைதிக்கான நோபிள் பரிசு வழங்கப்பட்டமையானது ஒரு பணிவான, கனிவான அங்கீகாரமாகும். இது உலகம் முழுவதும் பட்டினியால் வாடும் 100 மில்லியன் குழந்தைகளுக்கு, பெண்களுக்கு மற்றும் ஆண்களுக்கு உணவு மற்றும் உதவிகளைக் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு நாளும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கும் WFP ஊழியர்களின் பணியை அங்கீகரிக்கிறது என்று அமைதிக்கான நோபல் விருது வென்ற உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் (WFP) நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் பீஸ்லியின் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உறுதியற்ற தன்மை, பாதுகாப்பின்மை மற்றும் மோதல்கள் காரணமாக பெரும்பாலான மக்களின் வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இன்று உலகில் பசியுடன் வாழும் 690 மில்லியன் மக்களில் ஒவ்வொருவருக்கும் அமைதியாகவும் பசியின்றி வாழவும் உரிமை உண்டு. இன்று, நோர்வேயின் நோபல் குழு அவர்கள் மீதும், மோதலின் பேரழிவு விளைவுகளின் மீதும் உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது. காலநிலை அதிர்ச்சிகள் மற்றும் பொருளாதார அழுத்தங்கள் அவர்களின் அவல நிலையை மேலும் அதிகப்படுத்தியுள்ளன. இப்போது, பொருளாதாரம் மற்றும் சமூகங்கள் மீது அதன் மிருகத்தனமான தாக்கத்தைக் கொண்ட ஒரு உலகளாவிய தொற்றுநோய், மில்லியன் கணக்கானவர்களை பட்டினியின் விளிம்பிற்குத் தள்ளுகிறது.

அமைதிக்கான நோபல் விருது உலக உணவுத் திட்டத்திற்கானது மாத்திரம் அல்ல. அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை கூட்டாளர்களுடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றுகிறோம், பசி மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு உதவுவதில் எங்களுடைய ஆர்வத்திற்கு நிகரானதாக அவர்களது ஆர்வம் உள்ளது. அவர்கள் இல்லாமல் யாருக்கும் உதவ முடியாது. நாங்கள் ஒரு செயல்பாட்டு நிறுவனம் என்பதுடன், ஒவ்வொரு நாளும் எங்கள் ஊழியர்களின் அன்றாட வேலை எங்கள் ஒருமைப்பாடு, மனிதநேயம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றின் முக்கிய மதிப்புகளால் இயக்கப்படுகிறது.

மோதல் இருக்கும் இடத்தில் பசி இருக்கிறது. மேலும் பசி இருக்கும் இடத்தில் பெரும்பாலும் மோதல்கள் இருக்கும். உணவுப் பாதுகாப்பு, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவை ஒன்றாகச் செல்கின்றன என்பதை இன்று இது நினைவூட்டுகிறது. அமைதி இல்லாமல், பசியின்மை என்ற உலகளாவிய இலக்கை எங்களால் அடைய முடியாது. பட்டினி இருக்கும் போது நமக்கு ஒரு போதும் அமைதியான உலகம் இருக்காது.

இலங்கையின் அறிக்கை:

உலக உணவுத் திட்டம் என்பது உலகின் மிகப் பெரிய மனிதாபிமான அமைப்பு. கடந்த ஆண்டு, இது 88 நாடுகளில் 97 மில்லியன் மக்களுக்கு உதவியது. அதன் மூன்றில் இரண்டு பங்கு பணிகள் மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ளன. அங்கு மக்கள் மோதல்கள் இல்லாத நாடுகளில் வசிப்பவர்களை விட மூன்று மடங்கு ஊட்டச்சத்து குறைபாடு அதிகமுள்ளவர்களாக இருக்கிறார்கள். சிறுவர்கள் பட்டினியுடன் இருக்கும் போது நீடித்த அமைதி இருக்க முடியாது. நெருக்கடி காலங்களில் உயிர்களைக் காப்பாற்றுவதன் மூலமும், சமாதான காலங்களில் வாழ்க்கையை மாற்றுவதன் மூலமும், உலக உணவுத் திட்டம் மனிதகுலத்திற்கு விலைமதிப்பற்ற சேவையை வழங்கி வருகிறது.

உலக உணவுத் திட்டம் பட்டினியை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் முயற்சிகளுக்காகவும், மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதிக்கான நிலைமைகளை மேம்படுத்துவதில் அதன் பங்களிப்பிற்காகவும், யுத்தம் மற்றும் மோதல்களின் ஆயுதமாக பட்டினி பயன்படுத்தப்படுவதைத் தடுக்க ஒரு உந்து சக்தியாக செயல்பட்டதற்காகவும் அங்கீகரிக்கப்பட்டது' என்று நோர்வே நோபல் குழுவின் தலைவர் பெரிட் ரைஸ் அன்டர்சன் கூறினார்.

கொவிட்-19 நெருக்கடி உலகளாவிய உணவுப் பாதுகாப்பின்மையை அதிகரித்துள்ளது, அதிகரித்த எண்ணிக்கையில் மக்கள் பட்டினியுடன் உள்ளனர். தொற்றுநோய், பொருளாதாரம் மற்றும் சமூகங்கள் மீது அதன் மிருகத்தனமான தாக்கத்துடன், உலகளவில் மில்லியன் கணக்கான மக்களை பட்டினியின் விளிம்பிற்கு தள்ளுகிறது.

உலகளவில் மற்றும் இலங்கையில் அவசர உதவி, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு, மேம்பாட்டு உதவி மற்றும் சிறப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் உலக உணவுத் திட்டம் கவனம் செலுத்துகிறது. இலங்கையில் உயிர்களையும் வாழ்வாதாரங்களையும் காப்பாற்றவும், உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கு மக்கள் சிறந்த அணுகலை கொண்டிருப்பதனை உறுதி செய்வதற்காக ஆழ்ந்த மாற்றங்களைச் செய்யவும் இது அரசு மற்றும் பிற கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளது.

'அரை நூற்றாண்டுக்கும் அதிகமாக, சுனாமி மற்றும் முரண்பாட்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் இருந்து உதவுதல் முதல், மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மிக்க பாடசாலை உணவுகளை வழங்குவது வரை இலங்கையில் சமூகங்களுக்கு உதவுவதற்கு ஊழியர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர்' என இலங்கைக்கான உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் பிரென்டா பார்டன் தெரிவித்தார்.

'எல்லா இடங்களிலும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைக்கும் இலங்கை உட்பட உலகெங்கிலும் உள்ள உலக உணவுத் திட்ட ஊழியர்களை அங்கீகரிப்பதற்காக இந்த விருதைப் பெற்றுள்ளமை தொடர்பில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் உலகின் மிகப் பெரிய மனிதாபிமான அமைப்பாகும், இது அவசர காலங்களில் உயிர்களைக் காப்பாற்றுகிறது, செழிப்பைக் கட்டியெழுப்புகிறது. அத்துடன் மோதல்கள், பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்திலிருந்து மீண்டு வருபவர்களுக்கு நிலையான எதிர்காலத்தை ஆதரிக்கிறது.

மேலதிக தகவல்களுக்கு:
தான்யா ஜான்ஷ், WFP,
தொ.பே. 0094 769 102462

Twitter, Facebook மற்றும் Instagram ShWFPSriLanka

குடிநீருக்காக அல்லலுறும் ரிதிதென்ன மக்களுக்கு அல்-நூர் பவுண்டேசன் வழங்கும் பாரிய உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் தற்போது வரட்சியின் காரணமாக பாரிய குடிநீர் பற்றாக்குறை நிலவுகின்றது. குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான அல் நூர் பவுண்டேசன் குடிநீர் வழங்கும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற் கட்டமாக கல்குடா தொகுதியிலுள்ள பின்தங்கிய மீள்குடியேற்றக் கிராமமான ரிதிதென்ன கிராமத்தில் 50000 லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த் தாங்கி அமைத்து அப்பகுதி மக்களுக்கு குடிநீரை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வேலைத் திட்டமானது பிரதேச சபை உறுப்பினர் முஹமட் தாஹிர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும், பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்தும் அல்நூர் பவுண்டேசனால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ரிதிதென்ன கிராமத்தில் ரிதிதென்ன அல்இக்ரஹ் மகாவித்தியாலய மாணவர்களும் பாரிய குடிநீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாக அண்மையில் பாடசாலை அதிபர் நாகூர் சஹாப்தீன் பிரதேச சபை உறுப்பினர் மொஹமட் தாஹிரிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

இப்பிரதேசத்திலுள்ள முன்பள்ளி மாணவர்களின் வரவு குடிநீர் பிரச்சினை காரணமாக மந்தமான நிலையில் உள்ளதாகவும், சேனைப்பயிர்ச் செய்கையாளர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து வருவதாகவும் கால்நடை வளர்ப்பு கேள்விக்குறியாகி வருவதாகவும் அப்பகுதி மக்கள் பிரதேச சபை உறுப்பினர் ஊடாகவும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் ஊடாகவும் அல்நூர் பவுண்டேசனுக்கு தெரியப்படுத்தியதை அடுத்தே இந்த குடிநீர் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மகாவலி எச் வலய பிரதேசத்தில் குறித்த ரிதிதென்ன பிரதேசம் அமையப் பெற்றிருந்தாலும் கிறவல் பாறைகள் அமைந்த மேட்டு நிலப்பகுதிக்குள் இப்பகுதிகள் அமையப் பெற்றிருப்பதால் வருடந்தோறும் குடிநீர் பிரச்சினையை இப்பகுதி மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்களால் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு பலதடவை நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அவை எதிர்பார்த்த பலனளிக்கவில்லை என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இக்கிராமத்தில் குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பாக அண்மையில் ஊர்ப்பிரமுகர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

யு.எல்.எம்.ஹரீஸ்...✍
(வாழைச்சேனை விசேட நிருபர்)

கடலரிப்பால் காவு கொள்ளப்படும் மாளிகைக்காடு கரையோர பிரதேசம்

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கடற்கரைப் பிரதேசம் அண்மைக் காலமாக பாரிய கடலரிப்பை எதிர்கொண்டுள்ளது. இதனால் மாளிகைக்காடு மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்படும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை மாளிகைக்காடு கடற்கரைப் பிரதேசத்தில் மக்களின் பயன்பாட்டில் இருந்த சுமார் 50 மீற்றர் நிலப் பகுதியை கடல் காவு கொண்டுள்ளது. அப்பகுதியிலிருந்த தென்னைமரங்கள், வாடிகள், கிணறுகள் என பல கடலுக்குள் சென்றுள்ளன.

தற்போது தொடர்ந்தும் கடலரிப்பு இடம்பெற்று வருவதால் மீனவர்களின் வாடிகள், கிணறுகள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்படும் அபாயம் நிலவுவதோடு, மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக மீனவர் சங்கப் பிரதிநிதி ஏ.பி.ஏ.ஜப்பார் தெரிவித்தார்.

மாளிகைக்காடு கடற்கரையில் சுமார் 20 மீன்வாடிகள் உள்ளன. 100 ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப் படகுகள் உள்ளன. இத்தொழிலில் நேரடியாக 4000 பேர் ஈடுபட்டுள்ளனர். மறைமுகமாக மீன்வியாபாரிகள், தரகர்கள், மீன்வெட்டுபவர்கள், கடைக்காரர் என சுமார் 10 ஆயிரம் பேர் இத்தொழிலை நம்பியிருக்கின்றனர்.

கடலில் பிடிபடும் மீன்களை மொத்தமாக கடற்கரையில் வைத்து விலை கூறி விற்பது வழக்கம். தற்போது அப்பிரதேசம் கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் மீன்களை மிகவும் குறுகிய பரப்பிற்குள் விற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. மேலும் படகுகளை, தோணிகளை கரையில் இழுத்து கரைசேர்ப்பதும் நிறுத்தி வைப்பதும் ஆபத்தாக உள்ளதாக ஜப்பார் மேலும் தெரிவித்தார்.

மாளிகைக்காடு கடற்கரைப் பிரதேசத்தில் கடற்றொழிலை ஜீவனோபாயமாகக் கொண்ட சுமார் 10ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர் சங்கப் பிரதிநிதி ஜப்பார் மேலும் தெரிவிக்கிறார்.

"ஒலுவில் துறைமுகத்தில் மண்மேடு மூடியதால் 2 வருடங்களாக அங்கு எமது இயந்திரப் படகுகளை உள்கொண்டுசெல்லமுடியாதுள்ளது. அதைத் தோண்டி வகை செய்தால் ஓரளவாவது படகுகளைக் காப்பாற்ற முடியும்" என்றார் அவர். கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்றொழில் திணைக்களம் எமது அவல நிலையை வந்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை அருகிலுள்ள அந்நூர் ஜூம்மா பள்ளிவாசலின் மயானத்தின் (ஜனாசா மையவாடி) சுற்றுமதில் கடலரிப்பால் இடிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அங்கு புதைக்கப்பட்டிருந்த பிரேதங்களின் பகுதிகள்(ஜனாசாக்கள்) வெளியில் தள்ளப்பட்டு வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்தி கல்வேலி அல்லது மண்மூடைகள் அடுக்கப்பட வேண்டும் என பள்ளிவாசல் நிருவாகத்தினர் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வி.ரி.சகாதேவராஜா...✍
(காரைதீவு குறூப் நிருபர்)

பாலியல் இலஞ்சம் கோருதல் முற்றுமுழுதான ஊழல் குற்றம்

மக்கள் மத்தியில் புரிதலும் விழிப்புணர்வும் அவசியம்

அரச அதிகாரிகள் தமது கடமையை நிறைவேற்றுவதற்காக பணம் அல்லது சலுகைகளைக் கோரும் போது, அவை இலஞ்ச வடிவிலான கோரலாக அமைந்திருக்கின்றன. அதேவேளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஊழலில் ஈடுபடுபவர்கள் என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம். அவ்வாறான சலுகைக் கோரல் பாலியல் சார்ந்ததாக அமைந்திருந்தால் என்னாவது? அது ஊழலா? பாலியல் சுரண்டலாக அமையுமா? இலஞ்சமாக அதை வகைப்படுத்த முடியுமா?

பணம் சார்ந்த இலஞ்சம் மற்றும் இதர ஊழல்களைப் போன்று பாலியல் இலஞ்சமும் கொடுக்கல் வாங்கல்களில் இடம் பெற்றதாக நாம் ஊடகங்களில் பல செய்திகளை அறிந்துள்ளோம். எவ்வாறாயினும் இது அதிகம் பரிச்சயமில்லாத சொற்பதம் ஆகும். தெளிவற்ற விளக்கத்தின் காரணமாக இது அரிதளவில்தான் பேசப்படுகின்றது. இதன் காரணமாக அவ்வாறான சம்பவங்களை இனங்காண்பது மற்றும் புரிந்து கொள்வது போன்றன கடினமான விடயங்களாக அமைந்திருக்கின்றன.

இவ்வகையான மிகவும் குறைந்தளவு குற்றச் செயல்கள் மாத்திரமே அறிக்கையிடப்படுகின்றன. இலங்கையில் 2010 – 2019 வரையான காலப் பகுதியில் இவ்வகையான 13 சம்பவங்கள் மாத்திரமே இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதில் 6 சம்பவங்களுக்கு மாத்திரமே வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் இந்த விடயம் தொடர்பில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண் குடும்பத் தலைவர்கள் மத்தியில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பாலியல் இலஞ்சமானது பதவியிலுள்ள நபர்களால் ஒரு சேவைக்கு ஈடாக பாலியல் ரீதியில் கண்டிப்பாக கோரப்படும் ஒரு 'முறையற்ற அனுகூலம்' என்று சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் பயன்பாட்டு வரைவிலக்கணமாக்கியுள்ளது.

தெளிவற்ற தன்மை மற்றும் விழிப்புணர்வின்மை காரணமாக பாலியல் இலஞ்சம் என்பது எப்போதும் இதர மோசடிகளின் பின்புலத்தில் ஒன்றாக அமைந்து இருந்துள்ளது. பாலியல் இலஞ்சத்தைச் சூழ்ந்து காணப்படும் கலாசார, சமூகசார் கண்ணோட்டம் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் நடத்தப்படும் விதம் காரணமாகவும், தமக்கு நேர்ந்த நிலையைப் பற்றி தெளிவுபடுத்த அவர்கள் முன்வருவதில் பெரும் சவாலாக அமைந்திப்பதுடன், நீதி கிடைப்பதையும் தடுக்கின்றது.

அரசாங்க அதிகாரி ஒருவரால் பாலியல் ரீதியில் இலஞ்சம் கோரப்பட்ட அனுபவத்துக்கு முகங்கொடுத்திருந்தமை தொடர்பில் மதுரியின் (உண்மைப் பெயர் மாற்றப்பட்டுள்ளது) அயலவர்கள் உள்ளூர் அதிகாரியால் அவர் பாலியல் ரீதியில் எதிர்நோக்கியிருந்த நிலைமை தொடர்பில் தெரிவிக்கையில், 'அவர் அவளை கட்டாயப்படுத்தவில்லை. அவர் ஆலோசனையை மாத்திரமே மேற்கொண்டார்' என்றனர்.

தமது குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் பெண்கள் அல்லது ஆண் துணையின்றி வசிக்கும் பெண்கள் அதிகளவு பாலியல் இலஞ்சக் கோரலுக்கு ஆளாவதை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் இனங்கண்டுள்ளது. சமூக மற்றும் சமுதாயத்தின் விமர்சனங்கள், பாரம்பரிய ஆணாதிக்க பெறுமதிகள் மற்றும் இலகுவில் பாதிப்படையக் கூடிய அவர்களின் நிலை போன்றன அவ்வாறான முயற்சிகளுக்கு பெண்களே காரணமாக அமைந்து விடுகின்றனர் எனும் நிலையை அல்லது அவ்வாறான கோரல்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனும் நிலையை தோற்றுவிக்கின்றன.

பாலியல் இலஞ்சம் என்பது இரண்டாம் தர துஷ்பிரயோகமாக அமைந்திருப்பதுடன் சட்டம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றுக்கு எதிராகவும் அமைந்துள்ளது. பலராலும் உணர்ந்து கொள்ள முடியாத தெளிவற்ற ஊழலாக அது அமைந்துள்ளது. மதுரியை பொறுத்தமட்டில், அவரின் நிலைமை சிக்கல் நிறைந்ததாகவும், குழப்பகரமானதாகவும் அமைந்திருந்தது. அந்த அதிகாரியின் கோரிக்கை தவறானது மற்றும் சட்டவிரோதமானது என்பதை அறிந்திருந்த போதிலும், தமது குடும்பத்துக்கு அத்தியாவசியமான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு குறித்த அதிகாரியில் தங்கியிருக்க வேண்டிய நிலை காரணமாக அவரைப் பகைத்துக் கொள்ளாமல் தமது உரிமையை எவ்வாறு உறுதி செய்து கொள்வது என்பது தொடர்பில் மதுரி தெளிவற்றிருந்தார்.

இந்தக் குற்றம் தொடர்பில் தமது உரிமைகள் மற்றும் சட்டபூர்வமான விளைவுகள் பற்றி பல இலங்கையர்கள் அறிந்திருப்பதில்லை. பாலியல் இலஞ்சம் என்பது இலஞ்ச சட்டமூலத்தில் (1965 ஆம் ஆண்டின் இல.2) உள்வாங்கப்படலாம். ஆனாலும், அதற்கு எவ்விதமான ஏற்பாடுகளும் இல்லை. சட்டத்தில் அவா நிறைவு தொடர்பான வரைவிலக்கணத்தில் பணம், கடன்கள், அன்பளிப்புகள் போன்ற இதர இலஞ்சம் தொடர்பான அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும், பாலியல் சார் அம்சங்கள் உள்வாங்கப்படவில்லை.

அண்மைக் காலப் பகுதியில் இந்த சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், பாலியல் ரீதியான அவா நிறைவு தொடர்பான பயன்பாட்டு வரைவிலக்கணத்தை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலைய பரிந்துரை செயற்பாடுகள் உருவாக்கியுள்ளதுடன், இதனை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புக்கு எதிரான தேசிய செயற்திட்டத்தில் இந்த தொழிற்படு வரைவிலக்கணம் உள்வாங்கப்பட்டுள்ளது.

மேலும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை கையாள்வதற்கான அறிக்கையிடல் பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது. இதனூடாக தனிநபர்களுக்கு அவர்களின் அவசர அழைப்பு இலக்கமான 1954 உடன் தொடர்பு கொண்டு அல்லது இணையத் தளமான https://www.ciaboc.gov.lk/contact/complaints ஊடாக தமது முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், பாலியல் இலஞ்சம் தொடர்பில் ஒரு போதும் துணைபோகாத வழிமுறையை ஏற்படுத்துவதற்கு, அவ்வாறான உணர்திறன் மிக்க நபர்களுடன் பணியாற்றுவதற்கு முறையான பயிற்சிகளைப் பெற்ற அதிகாரிகளுடனான, அறிக்கையிடக் கூடிய கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதனூடாக, பொது சேவைத் துறையில் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதுடன், பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

2019 ஆம் ஆண்டில், இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பாரியளவில் இடம்பெறுவதை தடுக்கும் நோக்கில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தேசிய செயற்திட்டமொன்று வகுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்வாங்கப்பட்டு, மோசடியற்ற பொது சேவைத் துறையை முன்னெடுப்பது மற்றும் தமது அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவோருக்கெதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பயிற்சிகளை வழங்கும் அமைப்புகளான இலங்கை மன்றக் கல்லூரி (Sri Lanka Foundation Institute) மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (Sri Lanka Institute of Development Administration) ஆகியன தமது ஊழல் தவிர்ப்பு பயிற்சித் திட்டங்களில் பாலியல் இலஞ்சத்துக்கு எதிராக எவ்வாறு செயலாற்றுவது தொடர்பான பாடவிதானங்களையும் உள்வாங்க வேண்டும்.

பொறுப்புக் கூறலுடனான அரச துறையைப் பேணுவதற்கும், சகல விதமான மோசடிகளையும் இனங்கண்டு அவற்றைத் தடுப்பதற்கு முக்கியமானதாக அமைந்திருப்பதுடன், இலங்கையில் பாலியல் இலஞ்சம் தொடர்பில் புரிந்து கொள்ளல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்றன இந்தப் பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்கு முக்கியமான விடயங்களாக அமைந்திருக்கின்றன. 'ஊழல்' எனும் தலைப்பின் கீழ் பாலியல் இலஞ்சம் என்பது உள்வாங்கப்படும் வரையில், ஊழல் எனும் புதிரில் தவற விடப்பட்ட அங்கம் எப்போதும் காணப்படும் என்பதுடன், முழுத் தாக்கத்தைப் பற்றி பேசுவதற்கான ஆற்றலையும் மட்டுப்படுத்துவதாக அமைந்திருக்கும்.

சோமன்...

தனிமைப்படுத்தல் சட்டங்களை உள்ளடக்கிய புதிய விசேட வர்த்தமானியின் முழு விபரம்

தனிமைப்படுத்தல் சட்டங்களை உள்ளடக்கிய புதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டது. அவ்வர்த்தமானியின் முழு விபரம்...



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2197/25 - 2020 ඔක්තෝබර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.15

2197/25 - 2020 - 10 - 15

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டம்

பவித்ராதேவி வன்னிஆராச்சி,
சுகாதார அமைச்சர்.

தொழுவிடு,
2020, ஒக்டோபர் 15.

ஒழுங்குவிதிகள்

14 – PG 5815 – 871 (2020/10)

90. கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இப் பிரதேசத்தில் பொது இடமொன்றில் உள்ள ஆளொவ்வொருவரும் அல்லது அத்தகைய ஆள் இன்னோராளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பவராக வரக்கூடிய வேறேதேனும் இடத்திலுள்ள ஆளொவ்வொருவரும்
   (அ) எல்லா நேரங்களிலும் முகக் கவசமொன்றை அணிந்திருத்தல் வேண்டும்: அத்துடன்
   (ஆ) இரு ஆட்களிடையே ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியைப் பேணுதல் வேண்டும்.
91. கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் – 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப் பிரதேசத்தில்
   (அ) ஆட்களின் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவது:
   (ஆ) நோய்க்குட்பட்ட ஆளொருவரை அல்லது நோய்க்குட்பட்டவரெனச் சந்தேகிக்கப்பட்ட ஆளொருவரைச் சிகிச்சை அல்லது தனிமைப்படுத்தல் நோக்கத்துக்காக ஒரு வைத்தியசாலைக்கு, அவதானிப்பிடத்துக்கு அல்லது தனிமைப்படுத்தல் நிலையத்துக்குக் கொண்டு செல்வது அல்லது கொண்டு செல்வதற்கு எவரேனுமாளைத் தேவைப்படுத்துவது, அல்லது
   (இ) ஒரு நோய்க்குட்பட்டவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாளை, இலங்கை முழுவதற்குமான முறையான அதிகாரியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நோயரும்பற் காலப் பகுதியை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அவரது வீட்டில், வளவுகளில் அல்லது வதிவிடத்தில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு பணிப்பதும் அவரது வீட்டில், வளவுகளில் அல்லது வதிவிடத்தில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு பணிப்பதும், முறையான அதிகாரிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.
92. (1) ஆளொவ்வொருவரும், 91 ஆம் பிரிவின் கீழ் ஆட்களின் நடமாட்டம் மட்டுப்படுத்தப்படுவதன் மேல், கொரோனா வைரஸ் தொற்று நோய் 2019 (கொவிட்19) பரவுவதனைத் தடுப்பதற்காக, முறையான அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய காலப் பகுதிக்கு அவரது வீட்டில், வளவுகளில் அல்லது வதிவிடத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.
   (2) உப ஒழுங்கு விதி (1) இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியின் போது, ஆளொருவர்
   (அ) கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்தினுள் பிரவேசித்தலோ அல்லது இடப்பிரசேத்திலிருந்து விட்டு செல்லுதலோ ஆகாது:
   அல்லது
   (ஆ) கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்தினுள் ஏதேனும் பொது இடத்திற்குப் பயணித்தலோ, கொண்டு செல்லுதலோ அல்லது அதனுட் பிரவேசித்தலோ ஆகாது,
   அல்லது
   (இ) கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் – 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப் பிரதேசத்தினுள் பயணித்தலாகாது.

ஆளொருவர், முறையான அதிகாரியினால் அனுமதிக்கப்பட்டாலொழிய, உப ஒழுங்கு விதி (1) இன்கீழ் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியினுள் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்தினுள்ள ஏதேனும் நிறுவனத்தை, தொழிலிடத்தை அல்லது வேறேதேனும் ஒத்து வளவுகளைப் பொது மக்களுக்குத் திறந்து வைத்தலாகாது.

93. கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் – 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்தில் தேசியப் பாதுகாப்பை அல்லது பொதுச் சுகாதாரத்தைப் பேணுவதற்குத் தேவைப்பட்ட அத்தியாவசிய சேவைகளை அல்லது வேறேதேனும் சேவையை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனம், வேலைத் தளம், பல்பொருள் அங்காடி, கடை, விற்பனை நிலையம் அல்லது வேறேதேனும் தொழிலிடம் என்பன தொழிற்படுத்தப்படுவதனை அல்லது பணியாற்றுவதனை முறையான அதிகாரி அனுமதிக்கலாம்.
94. கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இப்பிரதேசத்தில் தேசியப் பாதுகாப்பை, தேசிய பொருளாதாரத்தை, பொதுச் சுகாதாரத்தைப் பேணுவதற்கு அல்லது கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) பரவுவதைத் தடுப்பதற்குத் தேவைப்படுகின்ற அத்தியாவசிய சேவைகளை அல்லது வேறேதேனும் சேவையை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனத்தின் அல்லது வேலைத்தலத்தின் தொழில் தருநர் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள்,
   (அ) முறையான அதிகாரியினால் விதிக்கப்பட்டவொரு நேரத்தில் வளவுகளினுள் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களினதும் வேறு ஆட்களினதும் அதிக பட்ச எண்ணிக்கையை விஞ்சுதலாகாது:
   (ஆ) அத்தகைய நிறுவனத்தினுள் அல்லது வேலைத்தளத்தினுள் பிரவேசிக்கும் ஆள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் முகக் கவசமொன்றை அணிந்திருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்:
   (இ) இரு ஆட்களிடையே ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியை உறுதிப்படுத்தல் வேண்டும்.
   (ஈ) நிறுவனத்தினுள் அல்லது வேலைத்தளத்தினுள் பிரவேசிக்கும் முன்னர் ஆள் ஒவ்வொருவரினதும் உடல் வெப்பநிலை அளவிடப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
   (உ) நிறுவனத்தினுள் அல்லது வேலைத்தளத்தினுள் பிரவேசிக்கின்ற ஆட்களுக்குச் சவர்க்காரம் அல்லது கிருமிநீக்கியுடன் போதிய கைகழுவும் வசதியை அளிக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய நிறுவனத்தினுள் அல்லது வேலைத் தளத்தினுள் பிரவேசிக்கும் ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய நிறுவனத்தினுள் அல்லது வேலைத் தளத்தினுள் பிரவேசிக்கு முன்னர் தமது கைகளைக் கழுவுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும், அத்துடன்
   (ஊ) நிறுவனத்தினுள் அல்லது வேலைத் தளத்தினுள் பிரவேசிக்கின்ற ஆள் ஒவ்வொருவரினதும் பெயர், ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொடர்பு விபரங்கள் பற்றிய பதிவேட்டைப் பேணுதல் வேண்டும், அத்துடன்
   (எ) முறையான அதிகாரியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோய்த்தடுப்பு வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.
95. கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப் பிரதேசத்தில் அத்தியாவசிய அல்லது வேறேதேனும் சேவையை வழங்குகின்ற ஒரு பல்பொருள் அங்காடியின், கடையின் விற்பனை நிலையத்தின் அல்லது வேறேதேனும் தொழிலிடத்தின் சொந்தக்காரராகவுள்ள அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவர்,
   (அ) முறையான அதிகாரியினால் விதிக்கப்பட்டவொரு நேரத்தில் வளவுகளினுள் அனுமதிக்கப்பட்ட ஆட்களின் அதிக பட்ச எண்ணிக்கையை விஞ்சுதலாகாது,
   (ஆ) அத்தகைய வளவுகளினுள் பிரவேசிக்கும் ஆள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் முகக் கவசமொன்று அணிந்திருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
   (இ) இரு ஆட்களிடையே ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
   (ஈ) வளவுகளினுள் பிரவேசிக்கு முன்னர் ஆள் ஒவ்வொருவரினதும் உடல் வெப்பநிலை அளவிடப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
   (உ) வளவுகளினுள் பிரவேசிக்கின்ற ஆட்களுக்குச் சவர்க்காரம் அல்லது கிருமிநீக்கியுடன் போதிய கை கழுவும் வசதியை அளிக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய வளவுகளினுள் பிரவேசிக்கும் ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய வளவுகளினுள் பிரவேசிக்க முன்னர் தமது கைகளைக் கழுவுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்,
   (ஊ) முறையான அதிகாரியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோய்த்தடுப்பு வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.
96. எவரேனுமாளின் உடல் வெப்பநிலையானது, முறையான அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்ட உடல் வெப்பநிலையை விடக் கூடுதலாகவுள்ள விடத்து அத்தகைய ஆள், 94 ஆம், 95 ஆம் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய வேலைத் தளத்தினுள் அல்லது வளவுகளினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.
97. கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசத்தில் பொது மக்களை இடம்பெயர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி, நடத்துநர் மற்றும் சொந்தக்காரர் முறையான அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இரு பயணிகளுக்கிடையே அத்தகைய சமூக இடைவெளியை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் முறையான அதிகாரியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோய்த்தடுப்பு வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.
98. கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட் 19) தொடர்பிலான ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப் பிரதேசத்தில் நடமாட்டத்தின் மீதான மட்டுப்பாடு முறையான அதிகாரியினால் தளர்த்தப்படுமிடத்து, ஒரு பொது இடத்தினுள் அல்லது ஆளொருவர் இன்னோராளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பவராக வரக்கூடிய வேறேதேனும் இடத்தினுள் பிரவேசிக்கின்ற ஒரு கூடத்தை, கருத்தரங்கை அல்லது வேறேதேனும் ஒத்த ஒன்றுகூடுதலை ஒழுங்கேற்பாடு செய்கின்ற அல்லது ஒழுங்குபடுத்துகின்ற அல்லது அத்தியாவசிய சேவைகளுக்குட்பட்ட எல்லாச் சேவைகளையும் பெற்றுக்கொள்கின்ற அத்தகைய ஆள் ஒவ்வொருவரும், முறையான அதிகாரியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோய்த்தடுப்பு வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். ஆகிய சட்ட ஒழுங்கு விதிகளும் இந்த விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சினால் புத்தளம் பிரதேச மீனவர்களுக்கு மீன்களை பழுதடையாமல் பாதுகாக்கும் பொருட்டு வழங்கப்பட்ட குளிர்சாதன பெட்டிகளை கிராமிய நீர் கட்டமைப்பு திட்டங்களின் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா மீனவர்களிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். படம்: புத்தளம் தினகரன் நிருபர்

அரசியல் நோக்கங்களுக்காக காணிகளின் எல்லைகளை மாற்றியமைக்க முடியாது

கூட்டமைப்பினருக்கு கிழக்கு ஆளுநர் விளக்கம்

புளியந்தீவு குறூப் நிருபர்

இனங்களின் அடிப்படைக்கேற்ப நிலங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பது ஆளும் அரசின் நோக்கமாகாதெனவும் அத்தோடு அரசியல் நோக்கங்களுக்காக அவை இடம் பெற ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாதெனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் தெளிவாகக் கூறினார். மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களின் எல்லையின் மத்தியில் அமைந்திருக்கும் "திவுல்பத்தான" எனும் பிரதேசத்தின் நிலங்களை விவசாயச் செய்கைக்காக மக்களுக்கு வழங்குவது சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக (14) காலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலர் கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்திற்கு சென்றனர். அவர்களோடு கலந்துரையாடும் போதே ஆளுநர் அனுராதா யஹம்பத் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக்காணி மட்டக்களப்பு மக்களுடைய கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரை யென்றும் இதனை விவசாயத் தேவைக்காக ஒதுக்கும் தீர்மானத்தை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநரை கூட்டமைப்பினர் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு மறுப்பு தெரிவித்த ஆளுநர், விவசாயச் செய்கை சம்பந்தமாக இந்த நிலங்களை ஒதுக்குவதற்கு பிரதான காரணம் சுய உற்பத்தியை பெருக்குவதுடன் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பண்டங்களை குறைப்பதற்கும் இது உதவுமென தெளிவுபடுத்தினார்.

தங்களை தாங்களே பாதுகாத்து...

தொற்றுக்குள்ளானவர்கள் தொடர்பிலும் நோய் அறிகுறிகள் இருப்பினும் உடனடியாக சுகாதார பிரிவிடம் அறிவித்து ஆலோசனை பெறுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றாளர்கள் மற்றும் நெருங்கி செயற்பட்டவர்களுக்கு தேவையான வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அவசியமான அளவு விரிவுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் நாட்களில் அதன் அவசியம் அதிகரித்தால் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

ஐ.டி.எச் வைத்தியசாலையில் நோயாளிகளின் எண்ணிக்கை வரம்பை எட்டியுள்ளமையினால் பல வைத்தியசாலைகள் சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நிலைமை எதிர்வரும் வாரங்களுக்குள் சீராகுமா? என இராணுவத் தளபதியிடம் வினவிய போது,

இது தொடர்பில் ஒன்றும் கூற முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகாமல் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதே முக்கியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரபல நடிகை அனுலா புலத்சிங்கள...

'ரத்து ஹெட்டகாரி', 'தாராவோ இகிலெத்தி', 'மதுர ஜவனிகா', 'குவேனி', 'மகாசார', 'லெடெக் நெத்தி லெடக்', 'சரித்த தெக்கக்' போன்ற மேடை நாடகங்களிலும் 'நில் திய யஹன' மற்றும் 'கோல்' போன்ற திரைப்படங்களிலும் இவர் நடித்துள்ளார்.

பிரதமரின் அலுவலக பிரதானியாக...

குழுவின் விஜயம் தொடர்பிலும் இருதரப்பு உறவுகள் குறித்தும் பேசப்பட்டதாக சீன தூதரகம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

ஓய்வுபெறவுள்ள ஜோன் அமரதுங்க...

அமைச்சர் ஜோன் அமரதுங்க தயாராகி வருகிறார். தேர்தலில் தோல்வியடைந்தவர்களை தேசிய பட்டியல் ஊடாக நியமிப்பதில்லை யென்பது ஐக்கிய தேசியக் கட்சியின் சம்பிரதாயம் என்பதை ஜோன் அமரதுங்க, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவூட்டியுள்ளதாக தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியலில் ஜோன் அமரதுங்கவின் பெயரே முதலில் இடம்பெற்றுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி மாத்திரமே கிடைத்தது.

பொதுத் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில், அந்த கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமிக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவை போல் ஜோன் அமரதுங்கவும் கடந்த 1977 ஆம் ஆண்டு முதலில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன் 43 ஆண்டுகள் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார்.

முழு நாடும் கொரோனா...

முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நிறுவன பிரதானிகள் கடமை.

அதிகளவான ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனங்களில் தினமும் சேவைக்கு வரக் கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை பிரதேச சுகாதார அதிகாரிகள் தீர்மானிப்பர்.

இவ்வாறு வரும் ஊழியர்கள் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை பேணுவது கட்டாயம் என்பதுடன் அடிக்கடி உடல் உஷ்ணத்தை கண்காணிக்க வேண்டுமெனவும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் மன்னன்...

சென்னை மற்றும் காஞ்சிபுரம் கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் செங்கல்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிபதி உத்தரவின் பேரில் பின்னர் அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து தப்பிய 'கட்ட காமினி' தமிழகத்தில் தஞ்சமடைந்து காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள புதுப்பாக்கம் என்ற இடத்திலுள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 6 மாதங்களாக சட்டவிரோதமாக பதுங்கி இருந்துள்ளார்.

அங்கிருந்தபடியே இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் போதைப் பொருள் கடத்தலுடன் கட்ட காமினி நேரடி தொடர்பு வைத்திருந்தார்.

இந்நிலையில், சர்வதேச நிழலுலக தாதா தாவூத் இப்ராஹிம், இவருக்கு தொடர்புள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் அவருடைய தொலைபேசி எண்ணை வைத்து பொலிஸார் அவரை கைது செய்ய முயன்றனர். இதனை அறிந்த அவர் காஞ்சிபுரத்திலிருந்து பெங்களூருக்கு தப்பிச் சென்றுவிட்டார்.

இதனை அறிந்த காஞ்சிபுரம் கியூ பிரிவு பொலிஸ் தனிப்படையினர் தப்பிச்சென்ற கட்டகாமினியை பெங்களூரில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

மின்தூக்கி அறுந்து வீழ்ந்து...

நேற்றுக் காலை அறுந்து வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் 57 வயதான ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், 55 வயதான மற்றும் ஒரு நபர் கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த இருவரும் தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

21ஆம் 22ஆம் திகதிகளில்...

தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் இரவு 7.30 மணிவரை பாராளுமன்ற விவாதத்தை நடத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 22ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு விவாதம் முடிவடைந்ததும் குழு நிலை ஆரம்பிக்கப்படும்.

இந்த இரண்டு தினங்களும் பாராளுமன்ற ஆரம்பத்தின் போது நடைபெறும் வாய்மூல விடைக்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கும் கேள்விகள் நடைபெறாது என்பதுடன், மதிய போசனத்துக்காக விவாதம் இடைநிறுத்தப்படாது.

அதேநேரம், எதிர்வரும் 20ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான 03 ஒழுங்குவிதிகளை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய தினம் பிற்பகல் 4.30 முதல் 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

மறைந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர் சுரங்கனி எல்லாவல, அமரர் ஆர்.ஆர்.டபிள்யூ. ராஜபக்ஷ, அமரர் கே.பி.சில்வா ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளை 23ஆம் திகதி முன்வைக்கப்படும்.

கொரோனா பாதுகாப்பு...

அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் (Alaina B. Teplitz) இவற்றைக் கையளித்துள்ளார்.

1,91,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களே இவ்வாறு சுகாதார அமைச்சரிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலங்கைக்கு இப் பாதுகாப்பு அங்கிகளின் பயன்பாடு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுமென அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் தனது பங்களிப்பை வழங்குமெனவும் அவர் கூறியுள்ளார்.

கைது செய்யப்படப் போவதை...

ஒன்றின் செய்தியை செவிமடுத்துக் கொண்டிருந்தாரென குற்றப்புலனாய்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சட்ட மாஅதிபர் பொலிஸாருக்கு உடனடியாக பதியுதீனை கைது செய்து காவலில் வைக்குமாறு அறிவித்ததாக அந்தச் செய்தி அமைந்திருந்தது.

உடனே சாரதியிடம் புத்தளம் – சிலாபம் வீதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்துமாறு கூறியதுடன் உடன் அதிலிருந்து வெளியேறி பிறிதொரு வாகனத்தில் புத்தளத்துக்கு தப்பினார்.

இது குற்றப்புலனாய்வு திணைக்கள விசாரணையில் கண்டறியப்பட்டது.

இந்த நேரத்தில் முன்னாள் அமைச்சரின் பாதுகாப்புக்கு வாகனத்திலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சந்தேக நபரான பதியுதீன் தப்பிச் செல்ல உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

பின்பு, முன்னாள் அமைச்சரின் அதிசொகுசு ஜீப்பை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் பறிமுதல் செய்ததுடன் அதிலிருந்த இரு சாரதிகளையும் கைது செய்தனர். வாகனத்தின் உள்ளே கண்டெடுக்கப்பட்ட இரு துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

தற்போது முன்னாள் அமைச்சர் பதியுதீனைத் தேடும் நடவடிக்கையில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஆறு பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு கொழும்பில் பதியுதீனின் மனைவியிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் வாக்குமூலம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரியாஜ் பதியுதீன் தாக்கல் செய்த...

உத்தரவிட்டுள்ளது. இம்மனு நேற்று மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இம்மனு அவசர தேவைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் உடனடியாக விசாரணைக்கு எடுக்குமாறு மனுதாரர் சார்ப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்தார். இதன்படி மனுவை எதிர்வரும் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டத்தினால்...

நேற்று நடைபெற்ற கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மைக்கினனுடனான கலந்துரையாடலின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு அவரிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அறுவடைக்குப் பின்னரான இழப்பு வீதத்தை குறைப்பதற்கு கனாடாவின் அனுபவம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் வரவேற்பதாகவும் அமைச்சர் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் கடற்றொழிலாளர்களினால் அறுவடை செய்யப்படுகின்ற கடலுணவுகளில் சுமார் 35 வீதத்திற்கு மேற்பட்டவை விற்பனைக்கு தரமற்றவையென்ற அடிப்படையில் வீசப்படுகின்றன.

ஆனால், கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த இழப்பு வீதம் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகிறது.

இந்நிலையிலேயே கனேடிய உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கனேடிய உயர் ஸ்தானிகர், அது தொடர்பாக சாதகமாக பரசீலிப்பதாக தெரிவித்ததுடன் இலங்கையின் சமுத்திர பல்கலைக்கழகத்துடன் இணைந்து கனேடிய கடல்சார் கல்வி நிறுவனம் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகளினால் இலங்கை மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

இலங்கையின் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக கனேடிய உயர்ஸ்தானிருடன் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட அமைச்சர், தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிக்கமைய அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்கி வருவதாகவும், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கமைய அரசியலமைப்பில் இத் திருத்தச் சட்டம் உள்வாங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் தென்னிலங்கை மக்களின் ஆதரவினால் தெரிவு செய்யப்பட்ட போதிலும், தற்போது முழுநாட்டு மக்களினதும் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் செயற்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், தமிழ் மக்களின் மத நம்பிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் நவராத்திரி விழாவை கொண்டாடுவதற்கு அண்மையில் அரசாங்கத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளமையையும் கனேடிய உயர்ஸ்தானிகருக்கு சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நதிகள்... (03ஆம் பக்கத் தொடர்)

சில சுற்றுச்சூழல் அதிகாரிகள் கடமைகளைச் செய்யாது பல்வேறு மோசடிகளில் ஈடுபடுவதால் இவ்வாறு ஆறுகள் மாசடைந்துள்ளன.

ஜனாதிபதிக்கு இந்த வேலைத்திட்டம் தொடர்பில் அளித்த விளக்கங்களுக்கு அமையாக இந்த திட்டத்தை உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தினார் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா தொற்று... (03ஆம் பக்கத் தொடர்)

இதன் காரணமாக அவ்வலுகத்திற்கருகிலுள்ள 10 வர்த்தக நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி அபகரிப்பை தடுக்க... (03ஆம் பக்கத் தொடர்)

எடுக்க முடிந்தது.

பாதுகாப்பு படைகள், சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் காணப்பட்ட முன்னைய கொரோனா வைரஸ் மூன்று அலைகளையும் எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில்... (03ஆம் பக்கத் தொடர்)

செயலாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ, புலனாய்வுத்துறையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தார்.

உள்நாட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், வெளிநாட்டினரைக் கையாள்வதற்கான சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. விசாக்கள் வழங்கும் நடைமுறையின் போது இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டினரின் பின்புலங்களை முறையாக ஆய்வுசெய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால் கடந்த காலத்தில் அது செயல்படவில்லை.

எடுத்துக்காட்டாக, உயிர்த் ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளில் இந்த நாட்களில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மாஅதிபர் மற்றும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் கூறிய கருத்துக்கள் மூலம் அவர்கள் தேசிய பாதுகாப்பை எவ்வாறு கையாண்டனர் என்பதை தெளிவாக காட்டுகிறது.

தேசிய பாதுகாப்புக்கும் அபிவிருத்திக்கும் இடையில் பிளவுபடாத தொடர்பு உள்ளதென்பதை நாங்கள் அறிவோம். என்றாலும் இதனை முந்தைய அரசாங்கத்தால் கருதப்பட்டதாகத் தெரியவில்லை. இதன் விளைவாகதான் உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலில் 265 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இன்னும் அதிகமானோர் வாழ்நாள் முழுவதும் அங்கவீனர்களாக மாறியுள்ளனர்.

அதேபோன்று சர்வதேச தலையீடுகள் நம் நாட்டில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திய யுகமாகவும் கடந்த அரசாங்கத்தின் ஆட்சி காணப்பட்டது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் கூட நிறைவேற்றப்பட்டன. மனித உரிமைகள் ஆணையர் இலங்கைக்கு எதிராக தனது கருத்துக்களை பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

நாட்டின் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக செயல்படுவதற்கும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதற்கும் வகையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நாடு பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் நாட்டின் பெரும்பான்மையினரின் விருப்பத்தை அரசாங்கம் மறந்தே செயற்பட்டிருந்தது.

ஆனால் இப்போது நிலைமை வேறு. தேசிய பாதுகாப்பு மீது எழுந்துள்ள நம்பிக்கையின் பிரகாரம்தான் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் 13ஆவது ஆராய்ச்சி அமர்வின் கருப்பொருளாக தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை பற்றி பேசுகிறோம் என்றார்.

ரிஷாட் கைதாகாமை குறித்து சட்ட மாஅதிபர்...

செயற்படக்கூடாதென சட்ட மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் வழங்கும் உத்தரவுகளையும், சட்ட மாஅதிபர் வழங்கும் அறிவுறுத்தல்களையும் பொலிஸார் மெத்தனமாக கருதி விடக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ரிஷாத் கைது செய்யப்படாமை தொடர்பில் சட்ட மாஅதிபர், குற்ற விசாரணைப் பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரசாத் ரணசிங்கவிற்கு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பொது மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பொலிஸார் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தை மீறிச் செயற்படும் முன்னாள் அமைச்சருக்கும், அவருக்கு உதவுவோருக்கும் எதிராக சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சட்ட மாஅதிபர், பொலிஸாருக்கு கடுமையான தொனியில் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, கைது செய்வதற்காக தேடப்பட்டு வரும் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்ந்தும் தலைமறைவான நிலையில் உள்ளதாக பொலிஸ் தலைமையகமும் நேற்று தெரிவித்தது.

நேற்று முன்தினம் மாலை 6.00 மணியாகும்போது 48 மணி நேரம் கடந்துள்ள நிலையிலும் அவரைக் கைது செய்ய முடியவில்லையென பொலிஸ் தலைமையகத்தின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரிஷாத் பதியுதீனை தேடி கொழும்பின் கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இடத்திலும், வெள்ளவத்தை மற்றும் மன்னார் பகுதிகளிலும் விசேட தேடுதல்கள் நடத்தப்பட்டபோதும் அவரைக் கைது செய்ய முடியவில்லை எனவும், அவருடன் நீண்டகாலமாக இடம் பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதற்கான திட்டத்தின் பணிப்பாளர் சம்சுதீன் மொஹம்மட் யாசீனையும் கைது செய்ய முடியவில்லையெனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இவர்கள் இருவரையும் கைது செய்வதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதானி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரசாத் ரணசிங்கவின் கீழ் 6 பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், அதற்கு மேலதிகமாக உளவுத் துறையின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது சுமத்தப்பட்டுள்ள குறித்த குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்த சி.ஐ.டி.யின் வணிக குற்ற விசாரணைப் பிரிவையும் இந்த விசாரணைகளையும் மேற்பார்வை செய்யும் உயர் அதிகாரி ஒருவரை சி.ஐ.டி.யிலிருந்து இடமாற்றுவதற்கான முஸ்தீபுகள் இடம்பெறுவதாக சி.ஐ.டி.யின் உள்ளக தகவல்கள் தெரிவித்தன.

ரிஷாத்தை கைது செய்ய சட்ட மாஅதிபர் ஆலோசனை வழங்கி 48 மணி நேரமும் கடந்துள்ளதன் பின்னணியிலேயே அவரை இடமாற்றுவதற்கான பரிந்துரை அடங்கிய பத்திரம் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்நிலையிலேயே, ரிஷாத் பதியுதீனை கைது செய்ய ஆலோசனை பிறப்பிக்கப்பட்டு இரு நாட்களாகும் நிலையில், அவர் கைது செய்யப்படாமை தொடர்பில் சட்ட மாஅதிபர் டப்புல டி லிவேரா, நேற்று முன்தினம் மாலை சி.ஐ.டி. பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்கவை தனது அலுவலகத்துக்கு அழைத்து விளக்கம் கோரியுள்ளார்.

சட்டத்தின் மீதான ஆட்சியைப் பாதுகாக்குமாறு இதன்போது சட்ட மாஅதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ள நிலையில், சட்ட மாஅதிபரின் ஆலோசனைகளையும் நீதிமன்ற உத்தரவுகளை கால தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை எச்சரித்து தெரிவித்ததாக சட்ட மா அதிபரின் செய்தித் தொடர்பாளர் அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

இதன்போது தாமதாகும் நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு சமம் என்பதையும் சி.ஐ.டி. பிரதானிக்கு சட்ட மா அதிபர் எடுத்துரைத்துள்ளார்.

மலைச்சாரலி

மத்தியமாகாணத்தில் சீரற்ற காலநிலை 345 பேர் பாதிப்பு

கடும் காற்று, அடை மழையுடன்கூடிய சீரற்ற காலநிலையால் மத்திய மாகாணத்தில் 96 குடும்பங்களைச் சேர்ந்த 345 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடும் காற்று, மண் சரிவால் 80 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன என்றும், இரு வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, அடை மழையால் நுவரெலியா மாவட்டத்திலுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை அதிபர் எஸ் சிவகுமார் தலைமையில் நடைபெற்ற சிறுவர் சந்தை நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம். (படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

கிவ்தோட்டம் லயன்குடியிருப்புகளில் பாரிய வெடிப்பு

25 பேர் வெளியேற்றம்

பொகவந்தலாவ கிவ்தோட்டம் மேற்பிரிவு தோட்டத்தில் கடும் மழை காரணமாக குடியிருப்புகள் சரிந்து விழும் அபாயம் நிலவுவதால் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் தமது குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, கிவ் தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

60 வருடங்கள் பழைமை வாய்ந்த லயன் குடியிருப்புகளிலேயே இவர்கள் வசித்துவருகின்றனர். எனினும் தற்சமயம் அக்குடியிருப்புகளில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனால் நிலம் தாழிறங்கும் அபாயம் நிலவுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிவ் தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு அம்பகமுவ பிரதேச செயலகம் தோட்ட இளைஞர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

கிவ் தோட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட மத்திய மாகாணசபையின் உறுப்பினர் கணபதி கனகராஜ் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்துக் கலந்துரையாடியதுடன், இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச் செயலாளரும் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

பதுளை பிரதான அரசினர் மருத்துவமனை பெயர் பலகைகளில் தமிழ் கொலை

பதுளை பிரதான அரசினர் மருத்துவமனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர் பலகைகளில் தமிழ் எழுத்துப் பிழைகள், சொற்பிரயோகங்கள் காணப்படுவதால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

நோயாளர்களின் கவனத்துக்காக பதுளை அரசினர் மருத்துவமனையில் பல்வேறு பெயர் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அவ் அறிவுறுத்தல்களில் தமிழ்எழுத்துபிழைகள் சொற்பிரயோகங்கள் இருப்பதாக நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இதுதொடர்பில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், பதுளை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருக்கும், ஊவா மாகாண ஆளுநருக்கும் அவசரக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில்' ஊவா மாகாணத்தில் மிகப்பிரதான அரசினர் மருத்துமனையாக இருந்து வருவது பதுளை அரசினர் மருத்துவமனையாகும். இம் மருத்துமனையில் பெரும்பாலான நோயாளர்கள் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

அத்துடன் பதுளை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் கணிசமானளவில் வாழ்ந்து வரும் ஒரு பிரதேசமாகும். இம் மாவட்டம் பெருந்தோட்டங்கள் பலவற்றை சூழ்ந்திருப்பதினால் தமிழ் மக்கள் அநேகமானோர் இருந்து வருகின்றனர். இத்தகையவர்களுக்கு சிங்கள மொழியில் போதிய பரிட்ச்சயம் இல்லை. என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பன்னல சுகாதார வைத்திய உத்தியோகஸ்தர் பிரிவில் 19 பேருக்கு கொரோனா

மாவத்தகம நிருபர்)

பன்னல சுகாதார வைத்திய உத்தியோகஸ்தர் அலுவலகத்திற்கு உட்பட்ட பிரிவில் கொவிட் 19 கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் என 11 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற வகையில் 100 குடும்பங்களுக்கு மேல் சுய தனிமைப்படுத்தல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பன்னல நகரில் ஒரு சட்டத்தரணியின் அலுவலகத்தில் சேவையாற்றிய பெண் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளானவர் என இனங்காணப்பட்டுள்ளனர். அதன் காரணமாக அவ் அலுவகத்திற்கு அருகிலுள்ள 10 வர்த்தக நிலையங்கள் மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

பாடசாலைகளில் நவராத்திரி பூஜைகள், விழாக்களை நடத்த வேண்டாம்

மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் அறிவிப்பு

லிந்துலை நிருபர்

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மத்திய மாகாணத்திலுள்ள சகல தமிழ் மொழி மூலமான பாடசாலைகளிலும் நவராத்திரி விழா பூஜைகளையோ அல்லது விழாக்களையோ அது தொடர்பான ஒன்றுகூடல்களையோ நடத்த வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண கல்விச் செயலாளரின் பணிப்புரையில் மத்திய மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சத்தியேந்திரா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அதிபர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அதற்கமைய சகல அதிபர்களும் பாடசாலை நிர்வாகங்களும் செயற்பட வேண்டுமென்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

வருடாந்தம் நாடுமுழுவதுமுள்ள தமிழ் பாடசாலைகளில் நவராத்திரி விழா அனுஷ்டிப்பது வழமையான நடைமுறை எனினும் தற்போது கொரோனா தொற்று பிரச்சினை காரணமாக இவ்வருடம் பெரும்பாலான சமய பண்டிகைகள் மற்றும் விழாக்களை நடத்த வேண்டாமென அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

தற்போது கொரோனா வேகமாக பரவி வரும் நிலையில் சகல பாடசாலைகளுக்கும் இரண்டாம் தவணைக்கான விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது. இன்று முதல் நவராத்திரி விழா பாடசாலைகளில் விமரிசையாக கொண்டாடப்பட இருந்தது.

தற்போது பல்வேறு வகையில் தோற்று பரவி வரும் நிலையில் இவ்வாறான ஒரு தீர்மானத்தை மத்திய மாகாண கல்வியமைச்சு எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மொக்கா தோட்டத்துக்கு வந்தவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை

மஸ்கெலியா , மொக்கா தோட்டத்தில் மிட்லோஜியன் பிரிவைச் சேர்ந்த இளைஞர்கள் இருவருக்கும், யுவதிக்கும் கொரோனா வைரஸ் தொற்றவில்லை என்பது பி.சி.ஆர் பரிசோதனைமூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள குடியிருப்பில் தங்கியிருந்து தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றிய மஸ்கெலியா, மொக்கா தோட்ட மிட்லோஜியன் பிரிவைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும், ஒரு யுவதியும் கடந்த 3ஆம் திகதி தமது வீடுகளுக்கு வந்துள்ளனர்.

மினுவாங்கொட கொரோனா கொத்தணி பரவல் தாக்கத்தையடுத்து,இவர்கள் மூவரும் அவர்களுடைய குடும்பங்களைச்சேர்ந்த 17 பேரும் கடந்த 7 ஆம் திகதி இரவு முதல் வீடுகளுக்குள்ளேயே சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நீரில் மூழ்கி 17வயது இளைஞன் பலி

சியம்பலாண்டுவ முதுகண்டிய நீர்த்தேக்கத்தில் நீராடிக்கொண்டிருந்த 17 வயது சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக கொவிந்துபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் சியம்பலாண்டுவ களுஒபிப பகுதியைச் சேர்ந்த கிஹான் முதுமால் என்பவரே உயிரிழந்துள்ளார். இளைஞன் தனது நண்பர்களுடன் நீர்த்தேக்கத்துக்குச் சென்று நீராடிக்கொண்டிருந்த போது இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்..

அவர்களில் ஒரு இளைஞன் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேதப்பரிசோதனையின் பின்னர் இளைஞனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பலாங்கொடையில் மரம் முறிந்து வீழ்ந்ததில் உயிரிழந்த பெண் தொழிலாளர்களின் திடீர் மரண நிகழ்விற்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட படம்.

தெரணியகல பிரதேச வரவுசெலவு திட்டம் நிறைவேற்றம்

தெரணியகல பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு அறிக்கை, இரண்டு மேலதிக வாக்குகளால், நேற்றுமுன்தினம் (15) நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கை, சபையின் தவிசாளர் லக்ஷ்மன் ராஜகருணா தலைமையில், சபையில் கடந்த புதன்கிழமை (14) சமர்ப்பிக்கப்பட்டது. நிதி அறிக்கைக்கான வாக்களிப்பு நேற்று (16) நடைபெற்ற நிலையில், சபையின் தவிசாளர் உள்ளடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் 8 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டு உறுப்பினர்களும் சுயேச்சை உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 8 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு உறுப்பினரும் எதிராக வாக்களித்துள்ளனர்.

இந்நிலையில் இரண்டு மேலதிக வாக்குகளால் நிதி அறிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண

வாகன அனுமதி பத்திரம் வழங்கும் பிரிவு இருவாரங்களுக்கு பூட்டு

காவத்தை தினகரன் விசேட நிருபர்

கொவிட் 19 தொற்று காரணமாக சப்ரகமுவ மாகாணத்தில் வாகன அனுமதி பத்திரம் வழங்கும் பிரிவு நேற்றுமுன்தினம் (15) முதல் இருவாரங்களுக்கு பூட்டப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார். கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கடந்த புதன்கிழமை (14) கேகாலை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து மாகாண ஆளுநர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கொவிட் 19 தொற்று காரணமாக சப்ரகமுவ மாகாண சபை உட்பட இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களின் பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள அனைத்து வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் பிரிவு நேற்று 15ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி வரை இரு வாரங்களுக்கு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாகாணத்தில் இரு வாரங்களுக்கு வாகன அனுமதி பத்திரம் வழங்கும் பிரிவு மூடப்பட்டுள்ளதால் அந்த காலப்பகுதிக்கு தண்டப்பணம் அறவிடப்படமாட்டது. அத்தோடு தகுதி சான்றிதழ் வழங்குவதற்கான செல்லுபடியாகும் காலத்தை அந்த இரு வாரங்களுக்கு சேர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இணையத்தளத்தின் மூலம் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் இலகு வாகனங்களின் அனுமதிப்பத்திரம் பெற்றுகொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதோடு, கனரக வாகனங்கள் மற்றும் ஓதுக்கப்பட்ட இலகுரக வாகனங்கள் என்பவற்றின் அனுமதி பத்திரம் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியாது.

அத்தோடு சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள நிகழ்வுகள் நடைபெறும் மண்டபங்கள் மற்றும் ஹோட்டல்களில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் திருமண நிகழ்வோ அல்லது வேறு நிகழ்வுகளையோ நடாத்துவதற்கு தடை விதிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுதாகவும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேலும் தெரிவித்தார்.

வளமான நிலத்தில் வசதியற்று வாழும் மக்கள்

தொடரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

'என்ன வளம் இல்லை இந்த மலைநாட்டில் ஏன் கையேந்த வேண்டும் இந்த திருநாட்டில்'.மலையகம் என்றாலே வளம் நிறைந்த பொன் விளையும் பூமியாகும். எந்த மாவட்டத்திலும் இல்லாத இயற்கை வளங்கள் நிறைந்திருந்தாலும் வறுமை கோட்டிக்கு கீழ் வாழும் மக்களும் குறைந்த வறுமானம் பெறும் மக்களும்,பொருளாதார சுமையில் சிக்கி திணறுகின்ற மக்களும், காணி, வீடு, அரச தொழில் வாய்ப்புக்கள் அற்ற மக்களும் இங்கு தான் வாழ்கின்றனர் என்றால் அது மிகையாகாது,

இவற்றிக்கெல்லாம் காரணம் என்ன? என்பது தான் இன்று அனைவர் மத்தியிலும் எழுந்துள்ள ஒரு கேள்வியாகும்?

வாக்குக்காக அரசியல் தலைவர்களும் சலுகைக்காக துணைபோகும் மலையக மக்களும் தான் இவற்றுக்கு காரணம் என்றால் மாற்றுக்கருத்தில்லை.

எவ்வளவோ விமர்சனங்களுடன் கூற வேண்டிய விடயத்தை இவ்வளவு சுருங்க கூறிவிட்டோம் என்று சிந்திக்கலாம். ஒரு கணம் சிந்தித்து பார்க்கவும் உலக சந்தையில் முதலிடத்தில் இருந்தது. சிலோன் தேயிலை ஆனால் இன்றைய நிலை நிச்சயமற்று காணப்படுகிறது.

அரசியலுக்காக தேயிலை செடிகளும் காவுகொள்ளப்பட்டுள்ளது. வருட வருடம் ஆயிரம் ரூபா, 1500 ரூபா என சம்பளத்தை ஏலவிடும் ஒரு துர்ப்பாக்கிய நிலைதான் காணப்படுகின்றது.

அரசாங்கம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு சலுகை வழங்கி அவற்றை அபிவிருத்தி செய்யும் போது ஆனால் பொருந்தோட்ட தேயிலை செய்கையை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க எமது அரசியல் தலைவர்கள் முனைப்பு காட்டுவதில்லை. அதன் விளைவு என்ன?இன்று சுமார் 78 சதவீதமான தேயிலையினை சிறு தோட்ட உரிமையாளர்கள் உற்பத்தி செய்கின்றனர்.

இதனால் இன்று பெருந்தோட்டங்களுக்கு செலவிடப்பட வேண்டிய தேவை குறைந்து கைவிடப்படும் நிலையை அடைந்துள்ளது.

கம்பனிகளுக்கு பெருந் தோட்டங்களை வழங்கியதால் அவை இலாபத்தை மாத்திரமே குறியாக கொண்டு செயற்பட்டனவே தவிர தரமோ,அவற்றினை பாதுகாப்பு தொடர்பா கவோ அவை அக்கறை கொள்ளவில்லை. இதனால் இன்று பெருவாரியான பெருந்தோட்டங்கள் காடுகளாக்கப்பட்டுள்ளன. இதனால் இன்று தேயிலை மலைகளில் வேலை செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

மலையகத்தில் பல தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானோர் வேலையிழந்துள்ளனர். ஆனால் வேலையிழந்தவர்கள் தொடர்பில் தொழிற்சங்கள் சரியான தீர்வை பெற்றுக்கொடுக்கவில்லை.

இதனால் தங்களது குடும்ப வருமானத்தை கருத்தில் கொண்டு பலர் வெளி மாவட்டங்களுக்கு தொழிலுக்காக செல்கின்றனர்.

'மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல' கொரோனா தொற்றால் இன்று பலர் வேலையிழந்து மீண்டும் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். இவர்களின் வாழ்க்கை பயணத்துக்கான பாதையை காட்டுவது யார்? இவர்களின் வாழ்வாதாரத்துக்கு பொறுப்புக் கூறுவது யார்? என்ற வினாக்களே உள்ளது தவிர பதில்கள் இல்லை.

தோட்டங்கள் பராமரிப்பின்றி காடாகியுள்ளதால் விலங்குகளின் நடமாட்டம் அதிகரித்த பிரதேசங்களாக தேயிலை மலைகள் மாறி வருகின்றன. சிறுத்தைகள் தோட்ட குடியிருப்புகள் வரை வந்துள்ளன. அத்தோடு குளவிகள் துரத்தி துரத்தி கொட்டுகின்றன.

இவ்வாறு நாளுக்கு நாள் எமது மக்களின் பிரச்சினைகள் அதிகரித்து கொண்டு தான் செல்கின்றன. ஆனால் தொழிற் சங்கங்கள் மௌனித்துள்ளன. அரசியல் தலைவர்கள் அலட்சிய போக்கில் உள்ளனர். சமூக ஆர்வலர்கள் தலைமறைவாகியுள்ளனர். தொண்டர் நிறுவனங்களும் சில சோரம் போயுள்ளன. இதனால் மக்கள் பாதிப்புக்குள்ளாகும் அவல நிலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

இவற்றை மக்கள் பிரதிநிதிகளிடம் கொண்டு சென்றால் அவர்களிடமும் எந்த பதிலும் இல்லை.

மண்சரிவு திடீர், தீ மற்றும் இதர அனர்த்தங்கள் காரணமாக வீடுகள் இழந்து தற்காலிக குடியிருப்பில் வாழும் பல குடும்பங்கள் வீடுகள் இன்றி பல வருடகாலமாக மழையாலும் வெயிலாலும் இந்த மக்கள் படும் அவலம் சொல்வதற்கரிது. இதனால் மாணவர்களின் கல்வி நிலையும் பாதிக்கப்படுகிறது. ஆனால் எமது தலைவர்கள் தேர்தல் காலங்களில் மாத்திரம் அனைவருக்கும் சொந்த வீடு, சொந்த காணி, அரச தொழில் வாய்ப்பு, சுயதொழில்கள் என வாய் வார்த்தைகளால் வாக்குகளை வாங்கி கொண்டு வெற்றி பெற்று பின்னர் தலைமறைவாகி விடுகின்றனர்.

காலம்காலமாக ஏமாற்றமடைந்து தொடர்ந்தும் ஏமாற்றப்படும் மக்கள் கூட்டமாக இன்னமும் இவர்கள் இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. அற்ப சொற்ப சலுகைகளுக்கு துணைபோகாது நீண்டகால நிரந்தர தீர்வுக்காக மக்கள் அணி திரண்டு ஆதிக்கத்தோடு ஆளும் தரப்புக்கு அழுத்தம் கொடுப்பதே எதிர்கால வளமான வாழ்க்கைக்கு வழி வகுக்கும் என்பது எமது கணிப்பீடாகும்.

கே.சுந்தரலிங்கம்
(ஹற்றன் விசேட நிருபர்)

காலம்காலமாக ஏமாற்றமடைந்து தொடர்ந்தும் ஏமாற்றப்படும் மக்கள் கூட்டமாக இன்னமும் இவர்கள் இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. வளமான மலையகப் பகுதிகளில் இன்றும் வாழ வழியின்றி வறுமையில் தவிக்கும் மக்களின் தொகையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

அரசாங்கம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு சலுகை வழங்கி அவற்றை அபிவிருத்தி செய்யும் போது, பொருந்தோட்ட தேயிலை செய்கையை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க எமது அரசியல் தலைவர்கள் முனைப்பு காட்டுவதில்லை. அதன் விளைவு என்ன? இன்று சுமார் 78 சதவீதமான தேயிலையினை சிறு தோட்ட உரிமையாளர்கள் உற்பத்தி செய்கின்றனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2020 ஒக்டோபர் 17
சனிக்கிழமை

தமிழ் மக்களின் நில அபகரிப்புக்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல்

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்

முல்லைத்தீவில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் அபகரிக்கப்படுதல் மற்றும் அவற்றில் விவசாயம் செய்ய செல்லும் போது வனவள திணைக்களங்களால் தடுக்கப்படுதல் போன்ற பிரச்சினைகளுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் மற்றும் கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பின் தலைவர் கி.சிவகுரு ஆகியோர் அடங்கிய குழுவினர் வவுனியா மாவட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று சுமந்திரனைச் சந்தித்து இக் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக தெரியப்படுத்தி மேற்கொள்ளக்கூடியநடவடிக்கைதொடர்பாக கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலின் போதே சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலே வாழ்ந்த தமிழ் மக்கள், கடந்த 1984ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, பின்னர் 2012ஆம் ஆண்டு மீள் குடியேற்றப்பட்டிருந்தனர். அவர்களின் வயல் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் பேசியிருந்தோம்.

அந்தக் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாமல் தடுக்கப்படுவதும், சிலருடைய காணிகள் அபகரிக்கப்பட்டு வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பிரச்சினை தொடர்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் அப்பகுதி கமக்கார அமைப்பின் தலைவர் அடங்கிய குழுவினர் என்னைச் சந்தித்து முறையிட்டுள்ளனர்.

இப் பிரச்சினை தொடர்பில் வெவ்வேறு பிரிவுகளாக பார்வையிட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதாக தீர்மானித்திருக்கின்றேன் என்றார்.

(விஜயரத்தினம் சரவணன்)

பண்டார வன்னியன் சதுக்கம் என வீதிக்கு பெயர் மாற்றம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் இருந்து மன்னார், யாழ் செல்லும் பண்டார வன்னியனின் சிலை அமைந்துள்ள பகுதி பண்டார வன்னியன் சதுக்கமாக பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப் பகுதி இதுவரை காலமும் பெற்றோல் செட் சந்தி என அழைக்கப்பட்டு வந்த நிலையில் இதற்கு பண்டாரவன்னியன் சதுக்கம் என பெயர் சூட்டுமாறு பண்டார வன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தின் கோரிக்கையை ஏற்று நகரசபை உறுப்பினர் ரி.கே.இராசலிங்கம் நகரசபை அமர்வில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மண் அகழ்வின் போது மதில் வீழ்ந்து ஒருவர் பலி

பருத்தித்துறை விசேட நிருபர்

அரியாலை கிழக்கு உதயபுரம் பகுதியில் மதில் இடிந்துவிழுந்து ஒருவர் பலியாகியுள்ளார். சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் நீண்ட காலமாக சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை நான்கு முப்பது மணியளவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட போது மதில் இடிந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஹெரோயினுடன் ஒருவர் கைது

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஹெரோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த ஒருவரை வவுனியா பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிசார் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற நபர் ஒருவரை சோதனையிட்டனர். இதன்போது அவரது உடமையில் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் இருப்பதை அவதானித்ததுடன், அந்நபரை கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். சம்பவத்தில் அவுசதபிட்டிய பகுதியை சேர்ந்த 31 வயது இளைஞரே பொலிசாரால் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் வழக்கு; 20ம் திகதி வரை ஒத்திவைப்பு

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

சட்டவிரோத மரக்கடத்தல்காரர்களால் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேகநபர்களை எதிர்வரும் 20ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

நேற்று இவ் வழக்கானது முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது ஊடகவியலாளர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், இச் சம்பவத்தால் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களது சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் வாதிட்டனர்.

இதனைத் தொடர்ந்து இவ் வழக்கு விசாரணையை எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீதவான் ஒத்திவைத்து கட்டளையிட்டார்.

வடக்கில் 2722 டெங்கு நோயாளர்; யாழில் அதிகம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்டத்தில் நேற்று முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் டெங்கு ஒழிப்பு தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வவுனியா சுகாதாரப் பிரிவினரும் பொலிசாரும் இணைந்து வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படும் பகுதிகளில் வாழும் மக்கள், தமது சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வட மாகாணத்தில் 2,722 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் சுமார் 2,200 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 105 பேரும் மன்னார் மாவட்டத்தில் 119 பேரும் வவுனியா மாவட்டத்தில் 233 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 65 பேரும் இந்த வருடத்தில் டெங்கினால் பீடிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

மணிவண்ணனை மாநகரசபை உறுப்பினரில் இருந்து நீக்குக

தமிழ் காங்கிரஸ் தேர்தல் திணைக்களத்துக்கு கடிதம்

பருத்திதுறை விசேட நிருபர்

யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை நீக்குமாறு கோரி தேர்தல் திணைக்களத்திற்கு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கடிதம் அனுப்பியுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினராக இருந்த மணிவண்ணனிற்கு எதிராக நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் சபை அமர்வுகளுக்கு செல்வதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் முன்னணியிலிருந்து மணிவண்ணனை நீக்குவதாக அக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் அறிவித்திருந்தார். இவ்வாறான நிலையில் மணிவண்ணனுக்கு எதிரான வழக்கு சில நாட்களுக்கு முன்னர் வழக்குதாரர்களால் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இதனையடுத்து மணிவண்ணன் சபைக்கு செல்லலாம் என்றிருந்த நிலையில் அவரை மாநகர உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு தேர்தல் ஆணையகத்திற்கு முன்னணி கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அங்காடியில் திருடியவர் கைது

நாகர்கோவில் விஷேட நிருபர்

நெல்லியடியில் உள்ள அங்காடி விற்பனை நிலையம் ஒன்றில் இலாபகமான முறையில் பொருட்களை திருடி வந்த நபர் ஒருவர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி சந்தைக்கு முன்பாக உள்ள அங்காடி விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை நபரொருவர் பால்மா அடங்கிய 3 பெட்டிகளை தூக்கி வந்ததை அவதானித்த அங்காடியின் முகாமையாளர் பற்றுச்சீட்டை கேட்டபோது அவர் அதனை திருடி வந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து மேற்படி நபரை பிடித்து நெல்லியடி பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிசார் மேற்கொண்ட விசாரணையில் அவர் அங்காடியில் கடந்த வாரமும் பொருட்களை திருடியமை தெரியவந்தது.

கஞ்சாவுடன் கைதாகியோருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் இரவு கேரளக் கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாவற்குழி மற்றும் கைதடி பகுதிகளில் வைத்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இக் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதில் ஒருவர் 40கிராம் கஞ்சாவினையும், மற்றைய நபர் 20 கிராம் கஞ்சாவினையும் உடைமையில் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியதில் இருவருக்கும் தலா இருபதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

20ஆவது திருத்தம் நாட்டுக்கு ஆபத்து

ஜனநாயகத்திற்கான இளைஞர் அணி

பருத்தித்துறை விசேட நிருபர்

அரசியலமைப்பின் மீது கொண்டு வரப்படவுள்ள 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் நாட்டுக்கு ஆபத்தானது என ஜனநாயகத்திற்கான ஒன்றிணைந்த இளைஞர் அணி தெரிவித்துள்ளது.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர். மேலும் கூறுகையில்,

20 வது திருத்தம் நாட்டிற்கு ஆபத்தானது. இதனை நிறைவேற்றும் பட்சத்தில் சிறுபான்மையின மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அதனை எதிர்ப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக இளைஞர்கள் இந்த விடயத்திற்கு எதிர்ப்பினை வெளியிட முன்வர வேண்டும். அரசியல் தலைவர்கள்

இந்த விடயம் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் தற்போது காணப்படுகின்றது.அதேபோல பாராளுமன்றத்திலும் கட்சி பேதம் பாராது அனைவரும் 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என கோரிக்கை விடுகின்றோம்.

கொரோனா சூழ் நிலையில் மக்களை ஒருங்கிணைத்து 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்வது சாத்தியமற்ற ஒரு விடயம்.

எனினும் மக்கள் மத்தியில் 20ஆவது திருத்த சட்டத்தின் தீமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவது எமது பிரதான நோக்கமாகும். நாங்கள் இளைஞர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து மூன்று விடயங்களை செயற்படுத்தவுள்ளோம்.

1.20ஆவது திருத்தம் தொடர்பாக புதிய முயற்சிகள் அனைத்தையும் கைவிட்டு மக்கள் கருத்து பகிர்வுடன் புதிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டும்.

2.சிறுபான்மை மக்களை இந்த 20ஆவது திருத்தச் சட்டம் அதிகளவில் பாதிக்கும் என்பதனால் சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள் இனம் மொழி மதம் பார்க்காது பாராளுமன்றத்தில் 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக செயற்பட வேண்டும்.

3.மக்கள் தீர்ப்புக்கு இது வருமாக இருந்தால் அனைத்து மக்களும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். போன்ற விடயங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது நமது செயற்பாடாக அமையவுள்ளது என்றனர்.

தமிழ் மக்களை அவர்களது நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதிக்க வேண்டும்

வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரவிகரன்

தமிழ் மக்கள் அவர்களது பூர்வீக நிலங்களில் விவசாயத்தை மேற்கொள்ள உரியவர்கள் வழிவிட வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு தமது பகுதிகளிலிருந்து வெளியேறிய நிலையில் கடந்த 2011ஆம் ஆண்டே தமது பகுதிகளில் அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

இந் நிலையில் நீண்டதொரு இடப் பெயர்வின் பிற்பாடு சொந்த இடத்தில் மீளக்குடியேறிய அவர்களின் பெரும்பாலான பயிர்ச் செய்கைக் காணிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனஜீவராசிகள் மற்றும் வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்களாலும் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் பூமடு கண்டல் விவசாய நிலங்களும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பூமடுகண்டல் பகுதியில் 30 தமிழ் பயனாளிகளுக்குரிய 120 ஏக்கர் நீர்ப்பாசனக் காணிகள் காணப்படுகின்றன.

கடந்த ஆண்டு அப் பகுதியை விவசாய நடவடிக்கைக்காக எமது தமிழ் விவசாயிகள் தயார்ப்படுத்தியிருந்த நிலையில், குறித்த பகுதி தமது பகுதி எனத் தெரிவித்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தது.

இதனால் தமது பூர்வீக விவசாய நிலத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தமிழ் விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

இருப்பினும் குறித்த பூமடுகண்டல் பகுதியை அண்டிய பகுதிகளில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் பண்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கு நெற் பயிர்ச் செய்கை நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலைமைகளை எமது விவசாயிகள் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை உட்பட, உரிய திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்த நிலையிலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பூமடுகண்டல் பகுதியை அண்மித்த இடங்களில், அங்குள்ள விவசாய நிலங்களுடன் எவ்விதத்திலும் தொடர்பில்லாத பெரும்பான்மை இனத்தவர்கள் பண்படுத்தி பயிர்ச் செய்கை நடவடிக்கையில் ஈடுபடுகின்றபோது அவர்களிடம் பாயாத சட்டம், தமது பூர்வீகக் காணிகளில் தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பாய்கின்றது.

காவல்துறையின் இச் செயற்பாடானது, முற்றிலும் பக்கச்சார்பானதாகக் காணப்படுகின்றது. இச் செயற்பாட்டினை வன்மையாக கண்டிப்பதுடன், எமது தமிழ் மக்கள் அவர்களது பூர்வீக விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள உரியவர்கள் என்றார்.

(விஜயரத்தினம் சரவணன்)

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தொகுதி கையளிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

கடற்றொழில் நீர் வளங்கல் அபிவிருத்தி அமைச்சின் வாவியுடனான கிராமம் எனும் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மீனவ குடும்பங்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாமடுவ மீனவக் கிராமத்தில் குறித்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் கடற்றொழில் அமைச்சினுடைய, 36 இலட்சத்து 84 ஆயிரம் ரூபா நிதியில் இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக நேற்று கையளிக்கப்பட்டன.

இதன்மூலம் 68 மீனவ குடும்பங்களின் சுத்தமான குடிநீர்த்தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வவுனியா மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் நிலையத்தின் அதிகாரியோ.நிசாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் தவமலர் மனோகராயா மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் கடந்த சில வருடங்களாக சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் விசேட ரோந்து

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் நேற்று காலை நகர் பகுதி, சுற்று வீதிகள் மற்றும் பிரதான வீதிகளில் திடீர் ரோந்து நடவடிக்கையில் பொலிஸ் விஷேட அதிரடி படையினர் ஈடுபட்டிருந்தனர்.

காலை 10 மணியிலிருந்து பொலிஸ் விஷேட அதிரடி படையினர் வவுனியா நகர் பகுதிகள் மற்றும் பூந்தோட்டம் பகுதிகளிலும் ரோந்தினை மேற்கொண்டிருந்ததுடன் பிரதான வீதி வழியாக ஏ9 வீதி தாண்டிக்குளம் பகுதிக்கு சென்றிருந்தனர். அத்தோடு சந்தேகத்திற்கிடமான வாகனங்களை சோதனைக் குட்படுத்தியிருந்தனர்.

பொலிஸ் விஷேட அதிரடி படையினர் மோட்டார் சைக்கிள்களிலே ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

குளத்தை மூடியமைக்கு மாக்சிச கட்சி கண்டனம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாக் குளத்தின் மூன்று ஏக்கரினுள் ஆயிரத்து நூறு டிப்பர் பெட்டி மண் கொட்டி இரண்டு அடிக்கும் மேலாக நீர்தேங்கி நிற்கக் கூடிய இடத்தை மூடியமைக்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வன்னி மாவட்டச் செயலாளர் பிரதீபன் கடும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வவுனியாவில் பண முதலைகளின் குள ஆக்கிரமிப்பினால் பல ஏக்கர் குள நிலங்கள் அபகரிக்கப்பட்டிருப்பது தெரிந்த விடயமே. பாலை விடவும் குடிநீர் விலையேறியிருக்கக் கூடிய இச் சூழலில் சாதாரண மக்களின் நிலத்தடி நீர் மூலம் பெறும் குடிநீருக்கும் நாசம் விளைவிக்கும் செயற்பாட்டை வவுனியா நகரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன இணைந்து செய்யும் செயல் அருவருக்கத்தக்கதாகவும் எதிர்கால சந்ததி பற்றி எதுவித அக்கறையுயின்றி செய்யப்பட்ட விடயமாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

இதனை எமது கட்சி மிக வன்மையாக எதிர்ப்பதுடன் மக்கள் மத்தியில் குள ஆக்கிரமிப்புக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்து வெகுஜன நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதுடன் எங்களுடைய அமைப்பின் தோழர்கள், இளைஞர் அணி, பெண் அமைப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு மக்கள் விரோத செயற்பாட்டுக்கு எதிராக வவுனியாக் குள மக்கள் செயலணி முன்னெடுக்கும் நடவடிக்கைகளுடன் கைகோர்த்து பலமடையச் செய்வோம் என்பதையும் கூறிக் கொள்கிறோம்.

நெல்லா, குடிநீரா, களியாட்டமா என வந்தால் எதைப் பொதுமக்கள் தெரிவு செய்யவேண்டும் என்பதையும் மக்கள் கவனத்தில் எடுப்பதுடன் இயற்கைச் சூழலை நேசிக்கக் கூடிய ஒவ்வொருவரும் எம்முடன் இணைந்து செயற்பட வருமாறு அழைப்பையும் விடுக்கின்றோம் என்றார்.

அனுமதியின்றி கிரவல் ஏற்றி சென்ற டிப்பரை கைப்பற்றிய பொலிசார்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா நகரில் அனுமதிப்பத்திரமின்றி கிரவல் ஏற்றிச்சென்ற இரண்டு டிப்பர் வாகனத்தை வவுனியா பொலிசார் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

அண்மையில் வவுனியா நகரில் அதிகளவிலான கிரவல் கடத்தல் இடம்பெறுவதாக தெரியவந்த நிலையில் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் முகமாக வவுனியா பொலிசார் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்போது செட்டிக்குளம் நேரியகுளத்தில் இருந்து அனுமதியின்றி கிரவல் ஏற்றி வந்த இரண்டு டிப்பர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த இரண்டு டிப்பர் வாகன சாரதிகளையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

விஷேட அதிரடி படையினரின் சுற்றிவளைப்பில் 10 பேர் கைது

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் தேசிய நீர் உயிரின செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் விஷேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோகநாதன் நிசாந்தன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் மற்றும் மடுகந்தை விஷேட அதிரடிப் படையினரும் இணைந்து வவுனியா பாவற்குளம் பகுதியில் மேற்கொண்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை உபயோகித்து மீன்பிடியில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ரூபா 1 இலட்சம் பெறுமதியான தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளும், கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் ஒவ்வொருவரும் 10 ஆயிரம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (20) ஆம் திகதி வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோ.நிசாந்தன் தெரிவித்தார்.

யாழில் அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை தொடர்பாக 76 முறைப்பாடு

நுகர்வோர் அதிகார சபை உதவி பணிப்பாளர்

சுண்டுக்குளி நிருபர்

யாழ்ப்பாணத்தில் அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்தமை தொடர்பாக 76 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் வடக்கு மாகாண பதில் உதவி பணிப்பாளர் ஏ.எல்.யவ்பர் சாதிக் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

தற்போது உள்ள கொரோனா தொற்று அனர்த்த நிலைமை காரணமாக பருப்பு, சீனி மற்றும் ரின்மீன் ஆகிய பொருட்களின் இறக்குமதி வரி விலக்கப்பட்டு பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் யாழ் மாவட்டத்தில் இப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படவில்லை எனவும், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் யாழ் மாவட்ட செயலகத்தில் இயங்கும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினருக்கு இன்றுவரை 76 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம். அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையங்களிற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சென்று ஆராய்ந்தபோது, வர்த்தகர்கள் தாம் பழைய விலைக்கு கொள்வனவு செய்து இருப்பில் உள்ள பொருட்களை பழைய விலைக்கு விற்பனை செய்வதாகவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய விலைக்கு கொள்வனவு செய்யும் பொருட்களை அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைமைக் காரியாலயத்தினருடன் கலந்தாலோசித்து வருகிறோம் என்றார்.

வவுனியாவில் தனிமையில் இருந்தவர் சடலமாக மீட்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு குறித்த குடும்பஸ்தரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்டவர் உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் சம்பவத்தினத்தன்று, உக்கிளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் தனிமையில் இருந்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் என பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் உயிரிழந்தவரின் வாயில் இருந்து ஒருவகை நுரை வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

பாடசாலையில் திருட்டு

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி மீசாலை கிழக்கு கமலாம்பிகை வித்தியாலயத்தில் புதன்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பாடசாலை அறையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த கதிரைகள் மற்றும் அண்மையில் கொரோனா தனிமைப்படுத்தலுக்காக பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்த மெத்தைகள் ஆகியனவே இவ்வாறு திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையில் காணப்பட்ட நீர் இறைக்கும் மோட்டரும் திருட முயற்சிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருட்டு தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர். குறித்த பாடசாலை வளாகத்திற்குள் அடிக்கடி சிறுவர்களின் நடமாட்டம் காணப்படுவதாக பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலை பகிடிவதை விவகாரம்

4 மாணவருக்கு ஒரு வருட வகுப்பு, விடுதியை பயன்படுத்தவும் தடை

பருத்தித்துறை விசேட, சுண்டுக்குளி நிருபர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் மீது இம்சை வதை புரிந்த சிரேஷ்ட மாணவர்களின் குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரைத்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைப் பிரகாரம், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவர்கள் 4 பேருக்குக்கு ஒரு கல்வி ஆண்டு காலம் கல்வி கற்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், பல்கலைக்கழக அல்லது துறைசார் மாணவர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை துணைவேந்தருக்கு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் குற்றத்தின் பாரதூரத் தன்மை கருதி மாணவி ஒருவருக்குக் கடும் எச்சரிக்கையுடனான விலக்களிப்புக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் இரண்டாவது கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தின் போது, கடந்த மாதம் 03 ஆம் திகதி சித்த மருத்துவத் துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பிலான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சித்த மருத்துவத் துறையில் இடம் பெற்ற இம்சை வதை தொடர்பில் ஆரம்பகட்ட பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதனடிப்படையிலான குற்றப்பத்திரிகை மீதான முறைசார் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

தோட்டக் காணிக்குள் மோட்டார் குண்டு

சுண்டுக்குளி நிருபர்

யாழ்ப்பாணம், நீர்வேலி பகுதியில் வெடிக்காத நிலையில் மேட்டார் குண்டு ஒன்று நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு ஏற்பட்ட, நீர்வேலி ஜே/208 கிராம அலுவலர் பிரிவில் தோட்டக்காணி ஒன்றை துப்புரவாக்கும் போதே இக் குண்டு காணப்பட்டுள்ளது. இதனையயடுத்து, உரிமையாளர் கோப்பாய் பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

கோப்பாய் பொலிசார் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் குண்டை மீட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் திருடனிடம் கை குண்டு

யாழ்ப்பாணம் குறூப், பருத்தித்துறை விசேட நிருபர்கள்

யாழ்ப்பாணத்தில் கைக் குண்டு ஒன்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்றினை திருடுவதற்கு முயன்ற ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து யாழ்ப்பாண பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந் நபரை பொலிசார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து வெடிக்கக் கூடிய நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் மோட்டார் சைக்கிள்களை திருடுவதற்காகவே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததாகவும் திருட்டில் ஈடுபடும் போது கைக்குண்டினை காட்டி மிரட்டி திருட்டில் ஈடுபட்டு வருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திருடிய மோட்டார் சைக்கிள்களில் ஒரு மோட்டார் சைக்கிள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

பாவனைக்கு உதவாத ரின் மீன்களா? ஊடக செய்திக்கு வர்த்தக அமைச்சு மறுப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தரம் குறைந்த பாவனைக்குதவாத டின் மீன் எதனையும் சந்தைக்கு விட வில்லை என்றும் அது தொடர்பில் வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாதெனவும் வர்த்தக அமைச்சு தெரிவித்தது.

கடந்த சில தினங்களுக்கு முன் சீனாவிலிருந்து பாவனைக்கு உதவாத தரமற்ற டின் மீன் இறக்குமதி செய்யப்பட்டு சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக தேசிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்த நிலையில் அதன் உண்மை நிலையை தெளிவுபடுத்தும் வகையில் நேற்று முன்தினம் வர்த்தக அமைச்சு செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது.

வர்த்தக அமைச்சில் நடைபெற்ற மேற்படி செய்தியாளர் மாநாட்டில் அமைச்சின் செயலாளர் திருமதி பத்ரானி ஜயவர்தன, தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சித்திகா சேனாரத்ன ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவிலிருந்து ரின் மீன் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்ததுடன் கடந்த 12ம் திகதி 1000 கொள்கலன் ரின் மீனை இறக்குமதி செய்தது.

அவற்றில் 25 கொள்கலன்களில் இருந்த ரின் மீன் பாவனைக்கு உதவாதது என்பதை தர நிர்ணய நிறுவனம் உறுதி செய்ததையடுத்து அது சந்தைக்கு விடப்படவில்லை. அதனை மீள ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதியாளர்களிடமே அந்த 25 கொள்கலன்களும் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த 12ம் திகதி குறித்த தேசிய பத்திரிகை தரமற்ற பாவனைக்குதவாத ரின் மீன் சந்தைக்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக செய்தியைப் பிரசுரித்துள்ளது. உண்மையில் அவ்வாறு இடம்பெறவில்லை.

இலங்கைக்கு 1000 கொள்கலன்களில் ரின் மீன் இறக்குமதி செய்யப்பட்டதுடன் அவற்றில் 25 கொள்கலன்களில் இருந்த ரின் மீன்களே பாவனைக்கு உதவாததாக இருந்தன. அவை விற்பனைக்காக சந்தைக்கு விடப்படவில்லை என்றும் அவர்கள் உறுதியாகத் தெரிவித்தனர்.

அதேவேளை சந்தையில் ரின் மீனுக்குத் தட்டுப்பாடும் கிடையாது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஸ)

முல்லைத்தீவு, கந்தளாயில் ஊடகவியலாளர்கள் தாக்குதல்

முஸ்லிம் மீடியா போரம் கண்டனம்

திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் ஊடகப் பணியில் ஈடுபட்ட மூன்று ஊடகவியலாளர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிப்பு என்ற காட்டுப்பகுதியில் மோசடி மர வியாபாரம் குறித்து தகவல்களைத் திரட்டச் சென்ற பிராந்திய ஊடகவியலாளர்களான கணபதிப்பிள்ளை குமணன், மற்றும் சண்முகம் தவசீலன் ஆகிய இருவரும் கடந்த 12ஆம் திகதி மோசடி வியாபாரிகளால் தாக்கப்பட்டு காயத்துக்குள்ளாகியுள்ளனர். தாக்குதல்களினால் காயங்களுக்குள்ளான இவர்கள் இருவரும் இப்போது முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம் திருகோணமலை கந்தளாயில் விபத்து ஒன்றை அறிக்கையிடச் சென்ற ஐ.ரீ.என். செய்தியாளர் எம்.எச். யூசுப் அக்போபுற என்ற இடத்தில் காடையர்கள் சிலரது தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு வந்துள்ளார். அவரது புகைப்பட கருவியும் பறிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் தமது கடமையைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு இடையூறு ஏற்படுத்தும் இது போன்ற நபர்கள் தொடர்பில் தராதரம் பாராது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் சார்பில் கேட்டுக் கொள்வதுடன். மேற்படி இரு சம்பவங்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

S&S SINCE 1892 — RDB

பிரதேச அபிவிருத்தி வங்கி
பெறுமதிமிக்க சொத்து
ஏல விற்பனை

இல. 68/B மெதிரிகிரிய கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு 1, கௌதுலுவெவ முதலாம் படிமுறைக் கிராமம் என்ற முகவரியைக், கொண்ட "கஹம்பிலியாவ" எனக் குறிப்பிடப்படும் அளவையியலாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட. F.V.P PO 107 துண்டு 274 என அழைக்கப்படும். வடக்கே துண்டு இல. 286. தெற்கே துண்டு இல. 285, மேற்கே. துண்டு இல. 275 ஆகிய 02 ஏக்கர், 02 ரூட். 03 பேர்ச்சர்ஸ் கொண்ட, மெதிரிகிரிய பிரதேச செயலாளரின் 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் திகதியிடப்பட்ட NCP/MG/L/I ஆம் இலக்க அனுமதிக் கடிதத்தின் மூலம் உத்தரவு பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எச்.எம்.ஆர்.ரீ.கே. ஹேரத் அவர்களால் வரையப்பட்ட, 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் திகதியிடப்பட்ட 4721 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 01 ரம்புக்கன எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு

காணியின் விஸ்தீரணம்: A - 01: R - 00 : P - 25.19

அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் கல்அமுனு கிளை வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.

தீர்மான அறிவித்தலுக்கு
தயவு செய்து 2018 மார்ச் மாதம் 02 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018 மே 03 ஆம் திகதிய தினமின, டெயிலி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

ஆதனத்தைச் சென்றடைதல்
மெதிரிகிரிய நகரில் இருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்று, அங்கிருந்து, வலது பக்கமாக உள்ள நாற் சந்தியில் திய சென்புர வீதிக்குத் திரும்பவும். இந்த வீதி ஊடாக தியசென்புர நகருக்குச் சென்று, அங்குள்ள நாற் சந்தியில் வலது பக்கமாக உள்ள பொலன்னறுவ - கிரிமெட்டியான பாதைக்குத் திரும்பவும். அப்பாதையில் சுமார் (3 கிலோ மீற்றர் தூரம் வரை பயணம் செய்து கஹம்பிலியாவ சந்தியை சென்றடையவும். குறித்த சொத்து உங்களது பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

கொடுப்பனவு செய்யும் முறை:
ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி - (ஒரு சத வீதம்)
(3) ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்) கொள்விலைக்குப் பொருத்தமான வரிகளுடன்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்தியப் பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வட மத்திய மாகாண அலுவலகம், இல. 65/D, 4வது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம் என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.
தொலைபேசி இலக்கம்: 025-2223080, 025-2225214
மேலே கூறப்படும் வகையில் 30 நாட்களுக்குள் கொள்முதல் விலையில் மிகுதி செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25% பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.
உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்
128 வருடகால மகோன்னத சேவை
Like us on facebook

தலைமை அலுவலகமும் காட்சியறையும்
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி: 081-2227593
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு-8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையதளம்: www.sandslanka.com

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D முன் கீழான விற்பனை

S&S SINCE 1892 — PEOPLES BANK

மக்கள் வங்கி
கொடக்கவெல கிளை
பெறுமதிமிக்க சொத்து
பகிரங்க ஏல விற்பனை

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், அட்டகலன் கோரளே, மெத பற்றுவில், கொடக்கவெல பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கொடக்கவெல கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில், கொடக்கவெல பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட, கொடக்கவெல கிராமத்தில் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எம்.எம்.உ.எஸ்.ஷாந்த அவர்களால் வரையப்பட்ட, 2016 செப்டம்பர் 01 ஆம் திகதியிடப்பட்ட 6754 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "வெவேஹேனவத்த அல்லது வெவே வத்த" என அழைக்கப்படும் காணித் துண்டும் அதிலுள்ள கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக வடக்கே பாதையையும், கிழக்கே எஸ். பி. ஏக்கநாயக்கவுக்குச் சொந்தமான காணித் துண்டையும், தெற்கு மற்றும் மேற்கே அரச காணிகளான வரைபட இல. 1817 இல் துண்டு 01 - (பாதை) மற்றும் 04 என்பனவற்றினால் சூழப்பட்ட காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: ஏ - 00: ரூ - 01 : ப- 20

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி
2020 நவம்பர் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
மக்கள் வங்கியின் கொடக்கவெல கிளை வளாகத்தில்
மு.ப 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏலவிற்பனை நடைபெறும்.

தீர்மான அறிவித்தலுக்கு
தீர்மான அறிவித்தலுக்கு, தயவு செய்து 2019 பெப்ரவரி 01 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்

காணியை சென்றடைவதற்கான வழி:
கொடக்கவெல நகர மத்தியிலிருந்து (கடைத் தொகுதிப் பிரதேசம்) பள்ளேகம வீதி வழியாக (பலாங்கொடை வீதி) சுமார் 450 மீற்றர் தூரம் வரை செல்கையில் குறித்த சொத்தை பாதையின் வலது பக்கத்தில் காணக்கூடியதாக இருக்கும்.

கொடுப்பனவு செய்யும் முறை:
ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சத வீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்.
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்.
(6) முத்திரைக் கட்டணம் மற்றும் விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசு கட்டணம்.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி, கொடக்கவெல கிளை என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.
தொலைபேசி இலக்கம்: 045-2240570/ 045-2240170
மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.
காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இரத்தினபுரி.
தொலைபேசி இல.: 045-2223084, 045-2232108

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்
128 வருடகால மகோன்னத சேவை
Like us on facebook

தலைமை அலுவலகமும் காட்சியறையும்
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி: 081-2227593
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு-8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையதளம்: www.sandslanka.com

15.10.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 613,160
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 24,138,140.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 01 ரூ. 100,000.00 பரிசுகள் 19
www.nlb.lk — NLB NATIONAL LOTTERIES

வாசனா சம்பத் Vasana Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1622
திகதி 2020.10.15
வெற்றி இலக்கங்கள் P
அன்றும் இன்றும் வீரன்
வெற்றி இலக்கங்கள் 45 49 52 67

பரிசு	பரிசுக்கட்டமைப்பு	பரிசுத்தொகை	வெற்றியாளர்களின் எண்ணிக்கை
01 ஆம் பரிசு	4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின்	1,000,000/-	-
02 ஆம் பரிசு	3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	100,000/-	-
03 ஆம் பரிசு	3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின்	2,000/-	70
04 ஆம் பரிசு	2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	500/-	125
05 ஆம் பரிசு	2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின்	100/-	3,494
06 ஆம் பரிசு	1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	60/-	2,036
07 ஆம் பரிசு	1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின்	20/-	52,513
08 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின்	20/-	8,653

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,897,380.00
அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு ரூ. 24,499,036.90

ஜாதிக லொதரிய சபை தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
PRIZES OF FIVE LAKHS OR OVER ARE LIABLE TO GOVT TAXES. WINNERS MUST PRODUCE NATIONAL IDENTITY CARD TO RECEIVE PRIZES. WINNING TICKETS ARE VALID FROM THE DAY OF THE DRAW FOR A PERIOD OF SIX MONTHS ONLY.

தரு திரி சம்பத DARU DIRI SAMPATHA
திகதி 2020/10/15
சீட்டிழுப்பு இலக்கம் 023
ஆங்கில எழுத்து S — வெல்லப்பட்ட இலக்கங்கள் 11 14 55 59

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுகள்	வெற்றியாளர் எண்ணிக்கை
1ம் பரிசு	4 இலக்கங்களும் பொருந்துமாயின்	ரூ. 1,000,000/-வீதம்	-
2ம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்துமாயின்	ரூ. 50,000/- வீதம்	03
3ம் பரிசு	3 இலக்கங்கள் பொருந்துமாயின்	ரூ. 1,000/- வீதம்	81
4ம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்களும் பொருந்துமாயின்	ரூ. 500/- வீதம்	132
5ம் பரிசு	2 இலக்கங்கள் பொருந்துமாயின்	ரூ. 100/- வீதம்	3,813
6ம் பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின்	ரூ. 40/- வீதம்	2,011
7ம் பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	ரூ. 20/- வீதம்	51,110
8ம் பரிசு	ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்துமாயின்	ரூ. 20/- வீதம்	7,683

இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டமொத்த பரிசுத் தொகை ரூ. 1,934,600/-
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 7,002,576.60
ரூ.500,000.00 மற்றும் அதற்குக் கூடிய பரிசுகள் அரச வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்படும்.வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை 32, தேசமாளிகை N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2571 சீட்டிழுப்பு திகதி 15.10.2020
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 10 12 18 37

	பரிசு கட்டமைப்பு		பரிசுத்தொகை	வெற்றியாளர் எண்ணிக்கை
1 பரிசு	4 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	1,000,000.00	-
2 பரிசு	ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	100,000.00	06
3 பரிசு	3 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	2,000.00	177
4 பரிசு	ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	1,000.00	387
5 பரிசு	2 இலக்கங்கள் சரியாயின்	ரூ.	100.00	9253
6 பரிசு	ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின்	ரூ.	40.00	6129
7 பரிசு	1 இலக்கம் சரியாயின்	ரூ.	20.00	151096
8 பரிசு	ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின்	ரூ.	20.00	27837

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 194,885
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,090,120.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,019,102.80
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
ஜாதிக லொதரிய சபை தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமாளிகை N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் : 4276 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 15-10-2020
வெற்றி எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 8 4 1 3 7 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

										வெற்றியாளர் எண்ணிக்கை
1ஆம்பரிசு	8	4	1	3	7	9	ரூபா.	2,000,000/-		01
2ஆம் பரிசு		4	1	3	7	9	ரூபா.	100,000/-		11
3ஆம் பரிசு			1	3	7	9	ரூபா.	10,000/-		102
4ஆம் பரிசு				3	7	9	ரூபா.	1,000/-		1,032
5ஆம் பரிசு					7	9	ரூபா.	100/-		10,501
6ஆம் பரிசு						9	ரூபா.	20/-		103,627

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

										வெற்றியாளர் எண்ணிக்கை
7ஆம் பரிசு		8	4	1	3	7		ரூபா.	10,000/-	10
8ஆம் பரிசு		8	4	1	3			ரூபா.	1,000/-	93
9ஆம் பரிசு		8	4	1				ரூபா.	100/-	1,087
10ஆம் பரிசு		8	4					ரூபா.	50/-	10,346
11ஆம்பரிசு	R							ரூபா.	20/-	41,339

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,920,420.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,793,829.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை 32, தேசமாளிகை N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

மெகா பவர் Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 643
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 15/10/2020
ஆங்கில எழுத்து C — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 22 35 40 78

	பரிசுக் கட்டமைப்பு	பரிசுத் தொகை ரூ.	வெற்றி பெற்றோர்
1 ஆம் பரிசு	4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000,000.00	01
2 ஆம் பரிசு	3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	100,000.00	02
3 ஆம் பரிசு	இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	1,000.00	86
4 ஆம் பரிசு	2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	500.00	242
5 ஆம் பரிசு	2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின்	100.00	5,668
6 ஆம் பரிசு	1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	40.00	3,688
7 ஆம் பரிசு	1 இலக்கம் பொருந்துமாயின்	20.00	91,991
8 ஆம் பரிசு	ஆங்கில எழுத்து பொருந்துமாயின்	20.00	16,724

இலங்கையில் மாபெரும் கண்ட பரிசு வழங்கிய மெகா பவர்
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .53,488,902.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.12,759,342.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.20,220,463.60
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,295,620.00
தேசிய லொத்தர் சபை — தேசிய லொத்தர் சபை தேசமாளிகை, கொழும்பு 01 தொலைபேசி: 0112-470662, 0114-607000 இணையம்: www.nlb.lk
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

கிழக்கின் குரல்

கொரோனா அபாயத்தால்

கல்முனை மாநகர சபைக்கு பெருந்தொகை வருமானம் இழப்பு

கொரோனா தொற்று அபாய சூழல் காரணமாக கல்முனை மாநகர சபைக்கு பெருந்தொகை வருமான இழப்பு ஏற்பட்டிருப்பதாக மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் தயாரிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இரவு, மாநகர மேயர் தலைமையில் மாநகர முதல்வர் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

கல்முனை மாநகர வாழ் மக்களின் பிரதிநிதிகளான மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரினதும் ஆலோசனைகளை உள்வாங்கி மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை ஆக்கபூர்வமானதும் சாத்தியமானதுமான முன்மொழிவுகளுடன் சிறப்பாக தயாரிக்கும் நோக்குடனேயே இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாக மேயர் றகீப் தலைமையுரையின்போது தெரிவித்தார்.

இவ்வாறு தயாரிக்கப்படுகின்ற பட்ஜெட், மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு, அவர்களது கருத்துக்களும் பெறப்படும் எனவும் அது தொடர்பில் பத்திரிகை விளம்பரம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எமது இவ்வருட பட்ஜெட்டில் எதிர்பார்க்கப்பட்டிருந்த பல வருமானங்கள் கொரோனா தொற்று அபாய சூழல் காரணமாக கிடைக்கவில்லை. இதனால்தான் மாநகர சபைக்கு பெருந்தொகை வருமான இழப்பு ஏற்பட்டதாகவும் மேயர் இதன்போது சுட்டிக்காட்டினார். கல்முனை மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய உத்தேச வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த அறிக்கையை கணக்காளர் ஏ.எச்.தஸ்தீக் சமர்ப்பித்து விளக்கமளித்தார்.

இதன்போது உறுப்பினர்கள் பலரும் பல்வேறுபட்ட முன்மொழிவுகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் பிரதிநிதிகளும் மாநகர ஆணையாளர், பிரதம சுகாதார வைத்திய அதிகாரி, உள்ளூராட்சி உத்தியோகத்தர் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை வெட்டுவாய்க்கால் சுகாதார சீர்கேட்டால் மக்கள் பெரும் பாதிப்பு

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கிறீன் பீல்ட் சுனாமி வீட்டுத்திட்டம் மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையின் பின்பகுதியில் உள்ள வெட்டுவாய்க்கால் சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். குறித்த சீர்கேட்டினால் தினமும் நுளம்பின் பெருக்கம் ஏற்படுவதுடன் துர்நாற்றமும் வீசுவதாக குற்றஞ்சாட்டுகின்றனர். அத்தோடு நுளம்பு கடிப்பதனால் அரிப்பும் ஏற்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபை கவனயீனமாக செயற்படுவதாகவும் தற்போது டெங்கு அச்சுறுத்தலினால் 3 வயது குழந்தை ஒன்று இப்பகுதியில் இனங்காணப்பட்டுள்ளது.

சுமார் 2ஆயிரம் மக்கள் வசிக்கின்ற இவ்வீட்டுத்திட்டத்திற்கு அருகில் உள்ள குறித்த வெட்டுவாய்க்காலை துப்பரவு செய்து தந்துதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கில் சுகாதார நடைமுறைகளை கடைபிடிப்பதில் மக்கள் மிக ஆர்வம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

சுகாதார அமைச்சின் புதிய சுகாதார நடைமுறைகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினமிரவு வெளியானதையடுத்து முகக்கவசம் அணிவதிலும் சுகாதார நடைமுறைகளைப் பேணுவதிலும் கிழக்கு மக்கள் பெரும் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை சகல தரப்பு மக்களும் முகக்கவசம் அணிந்து வெளியில் நடமாடினர்.

பஸ்தரிப்பு நிலையம், பொதுச் சந்தைகள், மக்கள் கூடும் இடங்களில் சகலரும் முகக்கவசம் அணிந்திருந்ததுடன் சுகாதார நடைமுறைகள் முழுமையாக பின்பற்றப்பட்டதையும் காணமுடிந்தது.

குறுகிய மற்றும் நீண்டதூர பஸ்களில் சமூக இடைவெளி முழுமையாக பேணப்பட்டே பயணிகள் பயணத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடந்த ஜனவரி மாதம் முதல் கடமையாற்றி வந்த திருமதி கலாமதி பத்மராஜாவிற்கான பிரியாவிடை நிகழ்வு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது.

படம் புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கம்பஹா மாவட்டத்துடன் தொடர்புடைய 24 பேர் அட்டாளைச்சேனையில் சுயதனிமைப்படுத்தலில்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படவில்லை என்பதனால், கோவிட் 19 தொற்று அச்சம் முற்றாக நிறைவடைந்து விட்டது என்று அர்த்தமாகாது. அண்மைக்காலத்தில் கம்பஹா மாவட்டப் பிரதேசங்களுடன் தொடர்புடைய சுமார் 24 பேர் அட்டாளைச்சேனையில் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஈ.ரி. சலீம் தெரிவித்தார்.

கோவிட் 19 சுகாதார நடைமுறைகள் தொடர்பில் அட்டாளைச்சேனை ஜூம்மாப் பெரிய பள்ளிவாயலில் விளக்கமளித்த, சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறுகையில்,

நாட்டில் கொடிய கொரோனா வைரஸ் வேகமாகத் தொற்றி வருகின்றது. தொற்றாளர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இது கோவிட் 19 இரண்டாவது அலை எனக் கூறப்படுகின்றது. ஆகையால், பொதுமக்கள் அரசின்; சட்ட திட்டங்கள், சுகாதாரத் துறையினரின் அறிவுரை, ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் என்பனவற்றை முறையாகப் பின்பற்றி வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

ஓட்டமாவடி டெங்கு அபாயம்; வடிகான்கள் அசுத்தமின்மையால் பெரும் அபத்து



கல்குடா தினகரன் நிருபர்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வடிகான்கள் அசுத்தமின்மை காரணமாக டெங்கு தாக்கம் அதிகரித்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலகம், ஓட்டமாவடி தபால் அலுவலகம் மற்றும் ஏனைய இடங்களின் முன்னால் காணப்படும் வடிகான்களின் கழிவுக் குப்பைகள் அதிகமாக காணப்படுவதுடன், நீர் செல்ல வழியின்மையால் டெங்கு பெருக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

இதன் காரணமாக பெரும்பாலான பகுதிகளில் டெங்கு பெருகக் கூடிய அபாய நிலை காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதுடன், ஓட்டமாவடியின் சில பகுதிகளில் டெங்கு அபாயம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் ஓட்டமாவடி பிரதேச செயலகம், ஓட்டமாவடி தபால் அலுவலகம் மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு வரும் மக்கள் டெங்கின் அச்சத்துடன் தங்களது சேவைகளை பெறுவதற்காக செல்கின்றனர். மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு அச்சப்படுவதா அல்லது டெங்கு தாக்கத்திற்கு அச்சப்படுவதா என்ற நிலையில் காணப்படுகின்றனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஓட்டமாவடி பிரதேச சபை உரிய கவனம் செலுத்தி வடிகான்களை துப்பரவு செய்து, வடிகான்களுக்கு மூடி அமைத்து மக்களை டெங்கில் இருந்து காப்பாற்ற முன்வருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வாழைச்சேனையில் ஹெரோயினுடன் ஐந்து பேர் நேற்று கைது

கல்குடா தினகரன் நிருபர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 11 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் வெவ்வேறு இடங்களில் ஐந்து பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய பிரிவில் சட்டவிரோத நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டு சட்டவிரோத நிகழ்வுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கமைய பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் இருந்து 21 வயது மற்றும் 22 வயதுடைய மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து 10 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்தோடு செம்மண் ஓடை கிராமத்தில் 15 வயது மற்றும் 26 வயது இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களிடமிருந்து 980 மில்லி கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய போதை தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜே.எம்.துசித குமார தலைமையில் பொலிஸ் குழு சுற்றிவளைப்பின் போதே பதினொரு கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண நவராத்திரி விழா

திருமலை மாவட்ட விசேட நிருபர்

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள நவராத்திரி விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.நவநீதன் தலைமையில் இடம்பெறும் இவ்வைபவத்தில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முத்துபண்டா உள்ளிட்ட பலர் கலந்து கொள்வர்.

இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை தினமும் காலை 9.00 மணிக்கு பூசைகள் நடைபெறும். 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஏடு தொடக்கல் (விஜயதசமி) இடம்பெறும்.

அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யு டி. வீரசிங்கவை பாராட்டி பொதுஜன பெரமுன கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் எஸ்.எல்.ஏ.அஸீஸ் மற்றும் மத்திய குழுவின் செயலாளர் அன்ஸார் றஸ்மி ஆகியோர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தனர். படம் அட்டாளைச்சேனை விசேட நிருபர்

அக்கரைப்பற்று, களவெட்டியாவில் 'நெல் நாற்று நடுகை' பயிற்சி

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

கிழக்கின் நெற் களஞ்சியமாக கருதப்படும் அமபாறை மாவட்டத்தில் அதிக விளைச்சலையும் மிக உச்சக்கட்ட பயனையும் தரக் கூடிய "நெல் நாற்று நடுகை" மூலமாக நெற்செய்கையை விவசாயிகள் மத்தியில் உற்சாகப்படுத்தும் விரிவுரைகளையும் களப்பயிற்சிகளையும் விவசாய திணைக்களம் நடத்தி வருகின்றது.

இதற்கமைவாக அக்கரைப்பற்று, களவெட்டியா கண்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட களப்பயிற்சி யொன்று (15) ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகஸ்தர் (விதை நெல்) எம்.ஐ. நசீர் தலைமையில் நடைபெற்றது. விவசாய திணைக்கைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப்பாளர் எம்.எப்.எ சணீர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் விவசாய உத்தியோகஸ்தர்கள், விவசயப்பாட விதான உத்தியோகஸ்தர்கள், விவிவசாய போதனாசிரியர்கள் மற்றும் முன்னணி விவசாயிகளும் கலந்து கொண்டனர். நாற்றுமேடை தயாரித்தல், விதை நெல் அளவிடு, பராமரித்தல், அவைகளைக் கையாளும் முறை, நெல்நாற்று நடுகை இயந்திரத்தை எவ்வாறு பயன்படுத்துவது அதனது தொழில் நுட்பமுறைகள் போன்ற விளக்கங்கள் அளிக்கப்பட்டதோடு செய்கை முறைப் பயிசிகளும் காண்பிக்கப்பட்டன.

இச்செய்கை மூலம் பன்றிச் சம்பா களைக்கட்டுப்பாடு, பூச்சி பீடைகள் கட்டுப்பாடு போன்றவைகள் நிர்வகிக்கப்படுவதோடு இரசாயனப் பயன்பாடு போன்றவைகளை குறைப்பதற்கும் இந்த முறை நல்ல பயனுள்ளதாக அமையுமெனவும் இங்கு விவசாயிகளுக்கு தெளிவாக்கப்பட்டது.

பெறுகை அறிவித்தல்

போதனா வைத்தியசாலை – குருநாகல்

இவ்வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையை நீடித்தல் - மிகுதி வேலைகளை பூர்த்தி செய்யும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காக ICTAD/CIDA செல்லுபடியாகும் அங்கத்துவத்தைக் கொண்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2020.11.04 மு.ப. 10.00 வரை கேள்விகள் கோரப்படுவதுடன், கேள்விகள் திறத்தல் அன்றே அந்த நேரத்திலேயே பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் இடம்பெறும். அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

2020.11.02 பி.ப. 3.00 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களை பரீட்சிக்க முடிவதுடன், அன்றே அந்த நேரத்திலேயே கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குருநாகல் என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூல விண்ணப்பம்.
2. ஒரு வேலை விடயம் சார்பாக மீளளிக்கப்படாத ரூ. 2500 தொகையை வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு.
3. உறுதி செய்யப்பட்ட பிரதியுடன் ICTAD/CIDA பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி.

கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு உங்களது கேள்விப் பத்திரங்களை தலைவர், பிரதேச பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது பிரதம கணக்காளரின் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிட முடியும். அத்துடன் இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் 037-2233906 மூலம் இலக்கம் 2800 ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
போதனா வைத்தியசாலை,
குருநாகல்.

பொது அறிவித்தல்

2007 ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **∴பெஷன் என்ட் இவென்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: **பிவீ 00228832**
கூட்டிணைக்கப்பட்ட திகதி : **2020.10.12**
பதிவு முகவரி: **இல.136/4, உடுவன, ஹோமாகம**

கம்பனி செயலாளர்
2020.10.15

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

S&S SINCE 1892

பிரதேச அபிவிருத்தி வங்கி
பெறுமதிமிக்க சொத்து
ஏல விற்பனை

RDB

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நாச்சதுவ பிரதேச செயலகப் பிரிவு நுவரகம் கோரளே, 265 குடா நெலுபெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டதும், உரிமம் கொள்ளப்பட்டதுமான, கள பத்திர இல. 15. I.S.P.P 03 இல் துண்டு 91 எனக் குறிப்பிடப்பட்டுள்ள, (A-00 R-01 P-39) விஸ்தீரணமான அரா காணி.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீள் அளவைக்கு அமைய குறித்த காணி பின்வருமாறு விபரிக்கப்படுகிறது: வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நாச்சதுவ பிரதேச செயலகப் பிரிவு, நுவரகம் கோரளே, குடா நெலுபெவ கிராமத்தில் அமைந்துள்ள, 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதியிடப்பட்ட Anu/Nnp/P/2749 ஆம் இலக்க வழங்கல் இலக்கம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட குடா நெலுவெவ கலே என அழைக்கப்படும், 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் கே.கே.சின்னையா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 59 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: A - 00: R - 01: P - 39

அதிலுள்ள மரங்கள், பழங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி
2020 நவம்பர் 05ஆம் திகதி வியாழக்கிழமை
பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலாவ கிளை வளாகத்தில்
பி.ப. 03.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.
சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏலவிற்பனை நடைபெறும்.

தீர்மான அறிவித்தலுக்கு
தயவு செய்து 2019 ஆகஸ்ட் 16ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019 செப்டம்பர் 17ஆம் திகதிய, தினமின, டெயிலி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

ஆதனத்தைச் சென்றடைதல்
தலாவ நகரிலிருந்து அநுராதபுரம் வீதி ஊடாக ரத்மலே சந்தி வரை செல்லவும் அங்கிருந்து வைத்தியசாலை வீதி ஊடாக சுமார் 100 மீற்றர் தூரம் வரை செல்கையில், குறித்த காணி பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளதைக் காணலாம்.

கொடுப்பனவு செய்யும் முறை:
ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி - (ஒரு சத வீதம்)
(3) ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்) கொள்விலைக்குப் பொருத்தமான வரிகளுடன்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமத்திய மாகாண அலுவலகம், இல. 65/D, 4வது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம் என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம்: 025-2223080, 025-2225214

மேலே கூறப்படும் வகையில் 30 நாட்களுக்குள் கொள்முதல் விலையில் மிகுதி செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25% பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்
127 வருடகால மகோன்னத சேவை

Find us on facebook

தலைமை அலுவலகமும் காட்சியறையும்
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி: 081-2227593
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு-8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையதளம்: www.sandslanka.com

Repeat Your Ad For Better Offers

பெறுகை அறிவித்தல்

கண்டி மாநகரசபை

இங்கு கீழே காணப்படும் கைத்தொழில்களுக்கு கீழ்க்காணுமாறு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2020.11.09 மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

2020.11.09 மு.ப.10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விகளை 02 பிரதிகளுடன் வேறு வேறு உறைகளில் இட்டு கேள்வி மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி மற்றும் குறித்த கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் பதிவுத்தபாலில் பிரதம மாநகர கணக்காளர், கண்டி மாநகர சபை என்ற முகவரிக்கு தபாலிடலாம் அல்லது கையோடு கொண்டுவந்து கண்டி மாநகர சபையின் பிரதம கணக்காளர் பொறுப்பில் உள்ள பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தொடர் இலக்கம்	கைத்தொழில்	தகைமைகள்	கேள்விப் பத்திர கட்டணம் (ரூ) (VAT இன்றி)
01	டி.எஸ்.சேனாநாயக்க மக்கள் நூலகத்தின் மின்சார அமைப்பை புதுப்பித்தல் மற்றும் சீலினை பழுதுபார்த்தல்	CIDA EM4 அல்லது அதற்கு மேல்	1000.00

கேள்விப்பத்திரங்கள் 2020.10.16 முதல் 2020.11.06 பி.ப.2.45 வரை மட்டுமே விநியோகிக்கப்படும். இக் கைத்தொழிலுக்காக தரப்பட்டுள்ள கேள்விப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி மற்றும் வேண்டுதல் கடிதமொன்றுடன் குறித்த தகைமைகளை சமர்ப்பித்ததன் பின்பு கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதம மாநகர பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் கைத்தொழில் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்வி மாதிரிகளைப் பெற்றுக்கொண்டு கேள்விகளை கோராத விண்ணப்பதாரிகளின் மற்றும் கேள்வி வழங்கப்பட்ட பின்பு ஒப்பந்தமொன்றிற்கு வருவதற்கு தவறுகின்ற கேள்விதாரர்களின் வைப்புத்தொகை சபைக்கு உரியதாக்கப்படும். எந்தகேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சபைக்கு உரியது.

சந்தன தென்னகோன்,
கண்டி மாநகர ஆணையாளர்,
2020.10.15ஆம் திகதி

கேள்வி அறிவித்தல் - 2021ஆம் ஆண்டு

தங்கல்ல நகர சபை

தங்கல்ல நகர சபைக்கு உரித்தான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2021.01.01 முதல் 2021.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக 02 பிரதிகளுடனான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2020.11.06 மு.ப. 10.00 வரை தங்கல்ல நகர சபையில் கேள்வி உள்ளிடுவதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடல் அல்லது அன்று குறித்த நேரத்திற்கு தங்கல்ல நகர சபைக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

கேள்விப் படிவங்கள் 2020.11.05 பி.ப. 3.00 வரை தமது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு அங்கீகரிக்கக்கூடிய அடையாள அட்டையை சமர்ப்பித்து கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு மட்டும் கீழ்க்காணும் கட்டணங்களை அறவிட்டு இவ் அலுவலகத்திலிருந்து விநியோகிக்கப்படும்.

கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு கேள்வி பெறுநரின் ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். நிரந்தர வதிவை உறுதி செய்வதற்கு கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியதுடன், வருடாந்தம் ரூ. 240000/- இற்கு மேற்பட்ட வருமானம் இருக்கின்றமையை பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் வருமான சான்றிதழை கேள்விதாரர்களால் சமர்ப்பித்தல் வேண்டும். வயது 25 இற்கு மேற்பட்டவர்களுக்கு மாத்திரம் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

2020.11.06 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். சகல கேள்விப் பத்திரங்களையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தங்கல்ல நகர சபையின் கேள்விச் சபைக்கு உரித்தாவதுடன், கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 047-4931945 அல்லது 047-4934275

அட்டவணை

தொடர் இல.	விடயம்	விண்ணப்பிக்கக்கூடிய குறைந்த பட்ச கேள்விப் பெறுமதி ரூ.சதம்	கேள்விப் பிணைத் தொகை ரூ.சதம்	கேள்விப் படிவக் கட்டணம் ரூ.சதம்
01	தங்கல்ல மக்கள் சந்தை, மீன் விற்பனை நிலையம் மற்றும் நகர சபை எல்லைக்குள் மேலதிக வரி சேகரிக்கும் உரிமையை குத்தகைக்கு விடல்	4684465.50	25000.00	1500.00
02	தங்கல்ல பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை குத்தகைக்கு விடல்	1231875.00	15000.00	1500.00
03	புதிய பொது மலசலகூடத்தை குத்தகைக்கு விடல்	495375.00	10000.00	500.00

ரவிந்து வெதஆரச்சி
தலைவர்,
தங்கல்ல நகர சபை.

விலைமனு அறிவித்தல்

பிரதேச சபை, மடுல்ல தம்பகல்ல

மடுல்ல பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள, கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள, சபைக்கு சொந்தமான சொத்துக்களின் வரி உரித்துக்களை 2021.01.01 முதல் 2021.12.31 வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக, மொனராகலை மாவட்டத்தில் பதிவுசெய்துகொண்டுள்ள தன்னார்வ நிறுவனங்கள் அல்லது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள தனிப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 2020.11.17 அன்று மு.ப.10.00 வரை என்னால் பொறுப்பேற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படல் 2020.10.19ஆம் திகதி நடைபெறும்.

அன்றைய தினமே மு.ப.10.05 மணிக்கு விலைமனுச் சபை முன்னிலையில் விலைமனு விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்க்கு அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரத்தைக் கொண்டுள்ள பிரதிநிதியொருவருக்கு கலந்துகொள்ளலாம்.

கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாக உரித்தான படிவக் கட்டணம் மற்றும் விலைமனுப்பிணை வைப்புத் தொகையைச் செலுத்தி, 2020.11.16 அன்று பி.ப.2.00 வரை மாத்திரம் மடுல்ல பிரதேச சபையிலிருந்து விலைமனு விண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். விலைமனுப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது விலைமனுதாரரினால் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து அடையாளத்தை உறுதி செய்துகொள்ளல் வேண்டும்.

அட்டவணை 01

தொடர் இலக்கம்	விபரம்	ஆகக்குறைந்த விலைமனு (பெசேவ நீங்கலானது) (ரூபா)	விலைமனுப் பிணை வைப்பு (மீளளிக்கப்படும்) (ரூபா)	விலைமனுப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) (ரூபா)
01	மகுல்ல வாரச்சந்தையுடன் கடை அறை 04	6,000,000.00	60,000.00	10,000.00
02	மகுல்ல வாரச்சந்தை			
i	மீன் விற்பனை நிலையம் இல. 01	45,000.00	15,000.00	4,000.00
ii	மீன் விற்பனை நிலையம் இல. 02	45,000.00	15,000.00	4,000.00
iii	மீன் விற்பனை நிலையம் இல. 03	45,000.00	15,000.00	4,000.00
iv	மீன் விற்பனை நிலையம் இல. 04	45,000.00	15,000.00	4,000.00
v	மீன் விற்பனை நிலையம் இல. 05	45,000.00	15,000.00	4,000.00
vi	மீன் விற்பனை நிலையம் இல. 06	45,000.00	15,000.00	4,000.00
vii	மீன் விற்பனை நிலையம் இல. 07	45,000.00	15,000.00	4,000.00
viii	மீன் விற்பனை நிலையம் இல. 08	45,000.00	15,000.00	4,000.00
03	மாரிஅராவ வாரச்சந்தை	650,000.00	25,000.00	6,000.00
04	மாரிஅராவ வாரச்சந்தை கடை அறை இல. 02	27,500.00	7,000.00	2,500.00

விலைமனு தொடர்பான மேலதிக விபரங்களை, விலைமனு படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, மடுல்ல பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2020.10.12
மடுல்ல பிரதேச சபை,
தொடர்பு : 0552275186/0712565067

டீ.எம். சமிந்த புஷ்பகுமார,
தலைவர்,
பிரதேச சபை, மடுல்ல

இந்த சேவை தற்போது நாடு பூராகவும் செயற்படுத்தப்படுகிறது.

லேக்ஹவுஸ் சமூக சேவை

இலங்கை களனிப் பல்கலைக்கழகம்

பதவி வெற்றிடங்கள்

இலங்கை களனி பல்கலைக்கழகத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

01. பதவி: மார்ஷல் (தரம் II)

தகைமைகள்:

1. i. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ உயர் கல்வி நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டதாரியொருவர்.
   ii. வயது : 30-45 இற்குமிடைப்பட்டது.
   iii. தேகக்கட்டு : ஆண் உயரம் : 5' 5" மார்பு : 32" (விரிவடையாதநிலை) பெண் உயரம் : 5' 4"

குறிப்பு: பொலிஸ்/ ஆயுதப்படைகளில் அனுபவமுள்ளவர்கள் மற்றும் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய மட்டத்தில் விளையாட்டுத்துறை செயற்பாடுகள், சமூக நலனோம்பு செயற்பாடுகள் ஆகியவற்றில் தீவிர ஈடுபாடுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அல்லது

2. இலங்கையின் ஆயுதப்படைகளின் மேஜர் பதவிக்கு குறையாத அனுபவம் அல்லது இலங்கை பொலிஸில் நிகரான பதவிக்கு குறையாத நிலையிலுள்ள அனுபவம்.

தெரிவு செய்தல் முறை : நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம்.

சம்பள அளவுத்திட்டம் : [17/2016 மற்றும் 17/2016 (v) ஆகிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2020.01.01 ஆம் திகதியன்று மாதாந்தம் 42885-18x660-54765 ரூபா UMN 3(II)]

சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு படி மற்றும் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட படிகளும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும்.

02. பதவி: பாதுகாப்பு பரிசோதகர் (தரம் II)

தகைமைகள்:

i. அ) இரு அமர்வுகளுக்கு மேற்படாதவகையில் க.பொ.த. (சா-த) பரீட்சையில் 5 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி. திறமைச் சித்திகள் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/ கணிதம் ஆகியவற்றை அடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆ) பல்கலைக்கழக முறையின் ஊழியர்கள் 5 வருட திருப்திகரமான சேவையுடன் 3 அமர்வுகளுக்கு குறையாத வகையில் க.பொ.த. (சா-த) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. சித்தியடைந்த பாடங்கள் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ கணிதம் ஆகியவற்றை அடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. பொலிஸ் அல்லது ஆயுதப்படைகள் அல்லது பல்கலைக்கழக பாதுகாப்பு முறைமை அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு அமைப்புக்களில் 5 வருடங்களுக்கு குறையாத சேவை.

iii. விளையாட்டுத்துறையில் தீவிரமான ஈடுபாடு.

iv. உயரம் : 5 அடி மற்றும் 4 அங்குலத்திற்கு குறையாதது.
மார்பு : 34 அங்குலத்திற்கு குறையாதது (சாதாரண நிலையில்)

தெரிவு செய்தல் : நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக.

சம்பள அளவுத்திட்டம் : 17/ 2016 என்ற ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020.01.01 ஆம் திகதியில் மாதாந்தம் 30,725 - 17 x 300 - 35,825 ரூபா - [UMN 1 (IIIஏ)]

சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு படி மற்றும் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட படிகளும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும்.

03. பதவி: மேசன் (தரம் II)

தகைமைகள்:

i. 8 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ii. பின்வருவனவற்றில் தேர்ச்சியுடையவராகவிருத்தல் வேண்டும்.
(a) Brick work and the different types of courses used in the construction of all footings, wall arches, taper pillars, chimneys, sewer chambers etc.,
(b) All types of plaster, mixing and laying of reinforced concrete.
(c) Reading plans and setting out foundations for simple construction.
(d) Colour washing including use of emulsion paint.

iii. மேசன் வேலையில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் சேவை சான்றிதழ்கள் இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு தகைமையற்றதென கருதப்படும்.

வயது : 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : 17/ 2016 என்ற ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் மாதாந்தம் 29915-16 x 270 - 34235 ரூபா - [U-PL3(III)]

சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு படி மற்றும் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட படிகளும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும்.

தெரிவு செய்தல் முறைமை : தொழில் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையொன்று.

04. பதவி: மின்னியலாளர் (தரம் II)

தகைமைகள்:

(i) வாசிக்கவும் எழுதவும் தெரிந்திருத்தல் வேண்டும்.

(ii) Should be conversant with –
(a) Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instruments and their uses, various types of wiring , joining, testing meters and small transformers.
(b) Reading and understanding drawings and diagrams. Reading scales and record fractional dimensions.
(c) Care and the use of the tools in the trade.

(iii) அரசாங்க திணைக்களமொன்றில், அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் 2 வருடத்திற்கு குறையாத மின்னியலாளராக அனுபவம்.

சேவை சான்றிதழ்கள் இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு தகைமையற்றதென கருதப்படும்.

வயது : 40 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : 17/ 2016 என்ற ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் மாதாந்தம் 29915-16 x 270 - 34235 ரூபா - [U-PL3(III)]

சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு படி மற்றும் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட படிகளும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும்.

தெரிவு செய்தல் முறைமை : தொழில் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையொன்று.

05. மெக்கானிக் (தரம் II)

தகைமைகள்:

(i) 8 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) Should be conversant with –
(a) Reading scales, micrometers and recording fractional dimensions.
(b) Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines; and

(iii) Reading and understanding drawings.

(iv) Not less than 2 years experience as a Mechanic or Machine Operator.

சேவை சான்றிதழ்கள் இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு தகைமையற்றதென கருதப்படும்.

வயது : 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : 17/ 2016 என்ற ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் மாதாந்தம் 29915-16 x 270 - 34235 ரூபா - [U-PL3(III)]

சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு படி மற்றும் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட படிகளும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும்.

தெரிவு செய்தல் முறைமை : தொழில் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையொன்று.

விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:

www.kln.ac.lk என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விண்ணப்ப படிவங்களை பதிவிறக்கம் செய்யலாம். விதிக்கப்பட்ட படிவங்களில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரித்தான சான்றிதழ்களுடன் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 2020 நவம்பர் 2 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உதவி பதிவாளர்/ கல்விசார்பற்ற தாபனப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், தளுகம, களனி என்ற முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

உயர் கல்வி நிறுவகங்கள், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகளின் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது என்பதுடன் அவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமையூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் உரிமையை பல்கலைக்கழகமானது கொண்டுள்ளது.

தேவைப்படும் தகைமைகளை பூர்த்தி செய்யாத, பூர்த்தி செய்யப்படாத மற்றும் தெளிவற்ற விண்ணப்பங்கள் மற்றும் மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படுபவைகள் நிராகரிக்கப்படுவதுடன் எவ்வித சூழ்நிலைகளிலும் மீண்டும் அவைகள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

பதிவாளர்,
களனி பல்கலைக்கழகம்.

14.10.2020

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி

சுற்று மதிலின் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்துள்ளது

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி சுற்று மதிலின் ஒரு பகுதி வீழ்ந்து சேதமாகியுள்ளது. புதன்கிழமை (14) இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அதிகரித்த நீரூற்று மற்றும் பலத்த காற்றின் காரணமாக இந்த மதில் சுவர் உடைந்து வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் பகா பள்ளிக்கும் பாடசாலைக்கும் பொதுவாக காணப்படும் இந்த பழைமை வாய்ந்த மதில் மஸ்ஜித் வீதியிலிருந்து ஆரம்பிக்கின்ற மதிலாகும். சுமார் 65 மீற்றர் நீளமான சுற்று மதிலின் ஒரு பகுதியே இவ்வாறு உடைந்து சேதமாகியுள்ளது.

அமைச்சர் டக்ளஸின் வழிகாட்டலில்

புத்தெழுச்சி பெற்றுவரும் கடற்றொழில் கூட்டுத்தாபனம்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் கடந்த காலங்களில் நட்டத்தில் இயங்கி வந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலில் தற்போது வெற்றிகரமாக செயற்பட்டு வருவதை புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறிப்பாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த வருடம் நவம்பர் மாதம் கடற்றொழில் அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டபோது, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 19 பிரதான விற்பனைக் கிளைகளில் பெரும்பாலானவை நட்டத்திலேயே இயங்கி வந்தன.

இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீர்க்கமான வழி நடத்தல்கள் உரிய முறையில் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகாரிகளினால் செயற்படுத்தப்பட்டதன் விளைவாக தற்போது சுமார் 13 பிரதான விற்பனை நிலையங்கள் இலாபமீட்டும் நிலைக்கு மாறியுள்ளன. அத்துடன் ஒரு கிளையில் ஏற்படுகின்ற நட்டம் குறைக்கப்பட்டுள்ளதுடன் 05 விற்பனை நிலையங்கள் மாத்திரமே தற்போது நட்டத்தில் இயங்கி வருவதாகவும் அவற்றையும் இலாபமீட்டும் நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிருஸாந்த ரத்ன வீர தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மொத்த மீன் விற்பனை 317 மெ.தொன்னாக இருந்தது. இது தற்போது 100 மெ.தொன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதுமுள்ள மீன் விநியோகத்தை மேலும் இலகுபடுத்துவதற்காக 05 லொறிகளை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன் இதுவரை 11 விற்பனை நிலையங்களும் புதிதாக திறக்கப்பட்டுள்ளன. கருவாடு இறக்குமதி தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தேசிய கருவாடு உற்பத்தியை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்வதற்கு கருவாடு தயாரிக்கும் பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கும் அதற்குத் தேவையான இயந்திரமொன்றை 04 மில்லியன் ரூபாவிற்கு கொள்வனவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அறிவித்தல்

திருத்தம் செய்யப்பட்டுள்ளவாறு, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்படவுள்ளதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்
நுவன்டிக்க சிறிவர்தன, ∴பவுன்டேஷன்

பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:
இல.1046/3/B, பொத்து அராவ வீதி, மாலம்பே

சபை சார்பாக,
கிறகரிஸ் பார்ட்னர்ஸ்
கம்பனி செயலாளர்
53/3, கிறகரிஸ் வீதி, கொழும்பு - 07.

கம்பனி பதிவாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் பிரேரிக்கப்பட்ட குறிக்கோள்கள் பின்வருமாறு

- குறைந்த வருமானமுள்ள புற்றுநோயாளர்களுக்கு மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கல்
- அவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு சுகாதாரம், கல்வி மற்றும் பிற தேவைகளுக்கான அவசிய உதவிகளை வழங்குவது உள்ளிட்ட அவர்களின் நாளாந்த பராமரிப்பு தேவைப்பாடுகள் தொடர்பாக, குறைந்த வருமானமுள்ள புற்றுநோயாளர்களின் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கல்
- புற்றுநோயால் அல்லலுறும் நோயாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனைச் சேவையை வழங்கல்
- புற்றுநோயால் வாடும் நோயாளர்களுக்கெதிரான வெறுப்புணர்வைத் தடுப்பதற்காக, ஊடகங்களை களமாகக் கொண்ட விழிப்புணர்வு கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்
- இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பிரசைகளது அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேலோங்கச் செய்வதற்குமாக, அரசியல் நிகழ்ச்சிநிரல் மற்றும் செல்வாக்குகளின்றிய ஒரு பரந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்தல்
- மத விழுமியங்களுடன் கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு சன்மார்க்க பெறுமானங்கள் மற்றும் அறிவு மீதான சமூகத்தை வலுவூட்டல்
- குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தத் தேவைப்படும் நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கல்
- நாட்டில் கிராமிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதை நோக்காக கொண்டு மருத்துவ சிகிச்சை பிரிவுகளை (Clinics) ஏற்பாடு செய்தல்
- நாட்டின் கிராமப் புறங்களில் புனிதத் தலங்கள் மற்றும் மத வழிபாட்டுத்தலங்களை மேம்படுத்துவதற்கு உதவிகளை வழங்கல்
- அநாதை இல்லங்களிலுள்ள சிறுவர்களினதும் முதியோர் இல்லங்களில் வாழும் வயோதிபர்களினதும் நல்வாழ்விற்காக உதவிகளை வழங்கல்
- வேண்டப்படும் உதவிகளை வழங்குவதன் மூலம், சூழல் நிலைத்திருக்கவும், பாதுகாக்கப்படவும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்

மாநகர சபை - கடுவெல

இறைச்சிக்கடை மற்றும் சந்தை பெறுகை அறிவித்தல் — வருடம் 2021

கடுவெல மாநகர சபைக்குரிய கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறைச்சிக்கடை மற்றும் சந்தையை 2021.01.01 முதல் 2021.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக, 2020.11.06 அன்று மு.ப. 10.00 வரை முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பெறுகை விண்ணப்படிவங்களை 2020.10.19 முதல் 2020.11.05 வரை (வார நாட்களில் மட்டும்) மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை இந்த அலுவலகத்தின் மாநகர நிதித் திணைக்களத்தில் வழங்கப்படும். 2020.11.06 அன்று மு.ப. 10.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் பெறுகை விலைமனு திறக்கப்படுவதுடன் மேலதிக விபரங்களை அலுவலக தினங்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 3.00 வரை, மாநகர கணக்காளரைத் (வரவு) தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் 0112-539562) பெறுகை விலைமனு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் பெறுகை விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரத்தைக்கொண்டுள்ள பிரதிநிதியொருவருக்குக் கலந்து கொள்ளலாம்.

கவனிக்கப்பட வேண்டியவை.

1. பெறுகை விலைமனு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச் சீட்டு கட்டாயம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. கடுவெல மாநகர சபைக்கு நிலுவையாகவுள்ள கடைவாடகைத் தொகையைச் செலுத்த வேண்டியுள்ள அல்லது பெறுகை விலைமனு சட்டங்களை மீறியுள்ள எவருக்கும் பெறுகை விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.
3. சமர்ப்பிக்கப்படும் பெறுகை விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மாநகர ஆணையாளரிற்குரியதாகும்.
4. எவரேனும் ஒன்றிற்கு மேற்பட்ட கடைகளுக்காக விலைமனுக் கோரும் பட்சத்தில், ஒவ்வொரு கடைகளுக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன், அவை வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. விலைமனு விண்ணப்பங்கள் இரண்டு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு 'மூலப் பிரதி' மற்றும் 'நகல்பிரதி' யென குறிப்பிடப்பட்டு, தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்டு 2020.11.06 அன்று மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கடுவெல மாநகர சபை, மாநகர நிதி திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் உங்களால் விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

அமைவிடம்		2021 வருடத்தில் ஆகக் குறைந்த பெறுகை விலைமனு	பெறுகை வைப்புத் தொகை	
		ரூ. சதம்.	மீளளிக்கப்பட முடியுமானது ரூ. சதம்.	மீளளிக்கப்பட முடியாத விலைமனு படிவக் கட்டணம் ரூ. சதம்.
அத்துருகிரிய மாவட்ட அலுவலகம்				
01	மாட்டிறைச்சிக் கடை	293,000.00	23,000.00	4,000.00
02	ஆட்டிறைச்சி மற்றும் கோழியிறைச்சிக்கடை	304,000.00	24,000.00	4,000.00
03	பன்றியிறைச்சிக் கடை	330,000.00	26,000.00	4,000.00
கடுவெல மாவட்ட அலுவலகம்				
01	கடுவல ஆட்டிறைச்சி மற்றும் கோழியிறைச்சி கடை	304,000.00	24,000.00	4,000.00
02	கடுவல மாட்டிறைச்சி கடை	330,000.00	26,000.00	4,000.00
03	கடுவல பன்றியிறைச்சிக் கடை	322,000.00	26,000.00	4,000.00

2020.10.14
கடுவெல மாநகர சபை
கடுவெல

சங்ஜீவ பந்துகீர்த்தி,
மாநகர ஆணையாளர்

மீலாத் தின போட்டிகள்

Zoom செயலி ஊடாக நடத்த ஏற்பாடு

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பை முன்னிட்டு பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை Zoom செயலியூடாக நடத்துவதற்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் உத்தேசித்துள்ளது.

இறைதூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பிறந்த மாதமான ரபியுல் அவ்வல் மாதத்தில் அன்னாரது பிறப்பை முன்னிட்டும் வீடுகளில் விடுமுறையில் இருக்கின்ற மாணவ மாணவிகளது திறமைகளை வெளிக்கொண்டுவருவதற்குமான ஒரு முயற்சியாக போட்டி நிகழ்ச்சிகள் பலதை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுவருகின்றது.

கிராஅத், அல் குர்ஆன் மனனம் போன்றவை மாணவர்களுக்கும் அதான் சொல்லுதல் மற்றும் சிறந்த முஅத்தின் தெரிவுக்காகவும் பகீர் பாவா பாட்டு / கஸீதா பாடல் போன்றவை கலைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டி நிகழ்ச்சிகளை Zoom இல் நடத்தி, வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை திணைக்களம் மேற்கொண்டுள்ளது. போட்டி நிகழ்ச்சிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் மிக விரைவில் அறிவிக்கப்படும்.

பாவப் பூக்கள்

விரிந்து செல்லும் பாரினிலே
வீரியமாய் விரிந்தே செல்கின்றன
இந்த பாவப்பூக்கள்
பாதங்களில் மிதிபடாமல்
அவை மட்டும் பக்குவமாய்
சொரிந்து கிடக்கின்றன

எதற்கும் அசையேன் நானென்று
வீரியமாய்த்தான் மலர்கின்றன
இந்த பாவப்பூக்கள்

இயற்கை அனர்த்தம் வந்தால்
எனக்கென்ன
பயங்கரவாதம் வந்தால்
எனக்கென்ன
கொரோனாவும் வரட்டும்
எனக்கென்ன
நான் அழியா ப்பூ
இறைவனை அஞ்சுபவரைத் தவிர
என்று
ஆணவம் காட்டுகின்றன
இந்த பாவப் பூக்கள்

பார்க்கக்கூடாதவை
பார்வைக்குள்ளும்
பார்க்கூடியவை
பார்வைக்கு வெளியிலும்

கவனக்கலைப்பு நாடகம் மட்டும் சரிவர
அரங்கேறிக் கொண்டிருக்கிறது

திசை மாற்றும் காற்றுகளாலேயே
இவ்வாறான பாவப்பூக்கள்
உதிர்ந்து கொண்டிருக்கின்றன.

மருதமுனை நிஸா

நிஹாராவின் நினைவுகள் 02



வைகறை வெளுத்தால் அவளோ
விழித்துக் கொள்வாள் இறையை
வணங்கி குர்ஆன் சுமப்பாள்
விழியின் ஓரத்தில் என்னைக் காண்பாள்.

பள்ளிச் சீருடையை
பக்குவமாய் அணிந்து நான்
பாதை வழியே உந்து உருளியை
பத்திரமாய்த் தள்ளி வருவேன்.

என் வஞ்சியவள் முண்டியடித்து
என்னைக் காண ஓடி வருவாள்
என் மனமோ திக் என்று
அடித்துக் கொள்ளும்

யாராவது பார்ப்பார்களா ?
சுற்றும் முற்றும் பார்த்தேன்
காலையில் எழுந்த காக்கையை தவிர
வேறு யாருமில்லை அங்கு

ஏதோவொன்றை கையில்
ஏந்தி நின்றாள்
ஏனென்று கேட்க முன்
என் கையில் திணித்தாள்

மனதில் தோன்றியவைகளை
முத்துப் போல் கோர்த்திருந்தாள்
மனதார நம்பியவனை
மெச்சித் தள்ளியிருந்தாள்.

குளிர் காலக் காலையிலும் அவள்
கைகள் வேர்த்திருந்தது.
காகிதத்தை பிடுங்கிய மறுகணமே
காற்றின் வேகத்தில் பறந்தேன்.

காகித வரிகளால் பல நாள் பேசினாள்
காதல் தூரிகையால் என்னை வரைந்தாள்
சுத்தச் சிங்களத்தில் அச்சரம் படைத்தாள்
சற்றுச் சுணங்கினால் அச்சம் அடைந்தாள்

கொச்சைச் சிங்களத்தில் வித்தை படைத்தேன்
கொட்டை எழுத்துக்களால் போட்டு உடைத்தேன்
புரியாத மொழியினை அறிய முனைந்தேன்
புதினமாய் அதில் நான் புலமையடைந்தேன்

மகளிர் கல்லூரி தமிழ் தின விழாவில்
மேடையில் நடந்த நாடகப் போட்டியில்
பிரதான வேடம் நானே ஏற்றேன்
பிரமாத வரவேற்பை என்னவள் தந்தாள்.

உன் அம்மா உனக்குத் தந்த
ஒற்றைக் காசை மிச்சம் வைத்து
அதை பத்திரமாய் முடிச்சிப் போட்டு
என் கையில் வைத்தாயே

ஒன்னொன்னா எண்ணிப் பார்த்தேன்
எல்லாம் சேர்த்து முப்பது ரூபாய்
இப்போது நினைத்துப் பார்த்தால்
அது எனக்கு முப்பது கோடியடி

உன் வாப்பா அனுப்பிய
வெளிநாட்டு மிட்டாய்கள்
வாயூறும் சாக்லெட்டுகள்
ஒன்னொன்னா சேமித்து எனக்காக தந்தாயே

இவ்வளவு செய்த உனக்கு
இந்தப் பாவி என்ன செய்தான்
இன்னொருத்திக்கு வாக்குப் பட்டான் உனக்கு
இன்பம் காட்டி துன்பம் செய்தான்

சூழ்நிலைகளின் சூனியத்தில்
மதி மயங்கிப் போனேன்
என் சூழ்ச்சியின் கொடூரத்தால்
நீ மனம் நொந்து போனாய்

அன்று நான் வெளிநாடு செல்கையில்
என் வாயால் கூறமுடியாத ஒன்றை
வார்த்தைகளால் கோர்த்து
பத்திரிகையில் அச்சிட்டேன்.

அச்சு இயந்திரங்களைப் போலவே
என் இதயத்திற்கும் இரக்கமில்லை
அதைப் படித்து அழுத உன் இதயம்
இவ்வளவு நோகுமென்றிருந்தால்
என் கடந்த காலத்தை
நெருப்பிட்டு கொளுத்தியிருப்பேன்.

பூக்களைப் போலவே உன்மனதும்
மென்மையென்றறிய
வெகு காலம் செல்லவில்லை எனக்கு
எளிதாகவே புரிந்து கொண்டேன்.

என்னை மீண்டும் அழைத்துக் கொள்ள
நீ செய்த வேண்டுதல்கள்
இறைவனுக்கே வேதனை கொடுத்திருக்கும்
அதனால் தான் நான்
உன்னிடமே மீண்டு வந்தேன்.
உன் காதலை வேண்டி நின்றேன்.

மனதார மன்னித்து என்னை
மனமுவந்து ஏற்றுக் கொண்டாய்
மணமேடை வரை செல்ல நீ
மங்கலப் பாலமிட்டாய்

உனைக் காணும் நாளுக்காக
நாட்காட்டியை காதல் கொண்டேன்
செவ்வாய் வந்து விட்டால்
செவ்வானம் போல் மகிழ்வேன்.

காதல் மொழியோடும் மாறாத அன்போடும்
கழிந்து போன ஈராண்டுகளை
நினைத்தாலே இனிக்கும்
நினைவுகளால் நிம்மதி பெறும்.

கலைமணாளன்

எதுவெல்லாம்செய்வானோ

எட்டு மாதங்கள்தான்
என் பேரன் மிஸாரிக்கு
எத்தனை குறும்புகள்தான்
எங்களால் இயலவில்லை.!
உம்மா வாப்பாவென
உரத்துப் பேசுகிறான்
தப்பாய் எதுவும் கூறின்
தடியால் அடிக்கிறான்!
கால்களை இறுக்கிநல்ல
கப்பல்போல் நகருகிறான்
காண்பதையெல்லாம் வாயில்
சடுதியில் போடுகிறான்.
காகம்போல் கத்தவும்
குயில்போல் கூவவும்
நரிபோல் ஊளையிடவும்
கற்றுக் கொடுத்தது யாரோ!
இறைவன் படைப்பின்
இணையற்ற ரகசியங்கள்
இன்னும் ஆச்சரியம்
எதுவெல்லாம் செய்வானோ!

தோப்பூர் எஸ் சிராஜுதீன்

அஞ்சலிக் குறிப்பகள் மூன்று

அஞ்சலிக்கவி எழுத
அடிக்கடி நினைப்பதுண்டு
நெஞ்சத்தில் வலிவந்து
அதனைத் தடுப்பதுண்டு

எதிர்பாரா தருணத்தில்
எத்தனை மரணங்கள்
எது பற்றி எழுதுவது
எதை எண்ணி புலம்புவது

காற்று சுமந்து வந்த
கலையமுத குரலதுவோ
காற்றிலே கரைந்து போன
கவலைதனைப் பாட

பாடும் நிலவாக பவனிவந்த
பால சுப்பிரமணியத்தை
பாரில் இனி நான்
எங்கு போய்த் தேட

மங்காத தரம்கொண்ட
தங்கக்குரலோனின்
மந்திர ராகங்களை
மனசால் மீட்டிக்கொள்வோம்

காலத்தால் அழியாத
கானங்கள் தந்தவனே
வாழத்தான் போகிறது
உன் பாடல் காலத்தைவென்று

ராத்திரி செய்திகள்
நேத்திரா டீ.வியில்
பாத்திராதவர்
யாருமிலர்...

கலீலுல் ரஹ்மான்
கனீரென்ற குரல்
நேர்கொண்ட பார்வை
நெறிதவறா வாசிப்பு

கீர்த்திமிகு மனிதரிவர்
கிழக்கிலங்கைக்காரர்
நேர்த்தியானவர்
நேர்மைக்கு உதாரணம்

காற்று சுமந்துவந்த
கடைசியான செய்தியது
கலீலுல் ரஹ்மான்
காலமாகிப் போனாரென்று

இறப்புச்செய்திகளால்
இடிந்து போன இதயத்தை
இன்னொரு மரணச்செய்தி
மறுபடியும் இடித்துச் சாய்த்தது

நாச்சியாதீவு பைசல்
முப்பந்தைந்துக்குள்
மூர்ச்சையான செய்தி
செரிக்க மனமின்றி
மனம் சோர்ந்துபோய் அழுதது
அதிர்ந்து பேசத்தெரியாதநீ
உதிர்ந்து போன செய்திகேட்டு
உறைந்து போனது
என் உதிரம்.

மந்தாரப் புன்னகையும்
உன்மங்காத புன்சிரிப்பும்
எங்கினிப் பார்ப்பது
யாரிடம் கேட்பது

விக்கித்தவித்து
மனம் விரைத்துப்போய்
வீரிட்டு அழ நினைத்தாலும்
சூல் கொண்ட சூழ்நிலை
வாய்ப்பாக அமையவில்லை

யார் என்ன சொன்னாலும்
ஊர் பேசும்பிள்ளை நீ
அதற்கு என் கன்னத்தில்
வழிந்தோடிய கண்ணீரே சாட்சி

நீரிற்குமிழி போல்தான்
நிலையற்ற வாழ்விதுவே
பாரில் பகட்டெதற்கு
படிப்பிக்கும் மரணங்கள்.

நாச்சியாதீவு பர்வீன்.

(அண்மையில் காலமான திரைஉலக பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம், நேத்ரா செய் திவாசிப்பாளர் மற்றும் ஒளி, ஒலிபரப்பாளர் கலீலுல் ரஹ்மான், எதிர்பாராத விபத்தில் மரணமான எங்களூர் இளைஞன் பைசல் ஆகியோருக்கு சமர்ப்பணம்)

சிந்திக்க நேரமில்லை சிறகடிப்போம்

பந்தயக் குதிரை நாங்கள்
பக்குவம் பார்த்து ஓடுவதா

விழுந்தால் சிரிப்பார்கள்
வீரனா என்று நகைப்பார்கள்

இயல்பாக உள்ளதுதான்
இதற்கேன் தயங்குகிறாய்

சிரிப்பொலி தீர முன்னே
சிறுத்தையாய் விரைந்து

சிகரம் தொட்டுக் காட்டு
சிரித்தவர் வாயினைப் பூட்டு

புலிகள் இருக்கும் இடத்தில்
சிறு புழுக்கள் இருப்பதில்லையா

பருந்து வாழும் காட்டில்
வண்ணப் பட்டாம் பூச்சி இருப்பதில்லையா

நிலவைப் பார்த்து மின்மினி
நிலை தளர்ந்ததா

உறங்கும் உணர்வுகளுக்கு இந்த
உலகம் வெறும்கூடம்

உயர்ந்திட உழைப்பவர்க்கு இந்த
உலகம் பெரும்பாடம்

எனக்கென யார் தான் பிறந்தார்
எனை விட யார் தான் சிறந்தார்

என்ற எண்ணம் வரட்டும்
அது கவலைகள் யாவும் விரட்டும்

ஏளனம் செய்பவர்கள்
என்ன சாதித்தார்கள் என்று பார்

எதுவும் இருக்காது
ஏனென்றால் இலக்கை அடைந்தவன்
அடுத்தவன் போகும் பாதைக்கு
விளக்காக இருப்பான்

ஆளரவமற்ற பாதையில்
அன்றாடம் போகிறோம்
ஆயிரம் தடை வரலாம்

தடுத்திடப் பலர் வரலாம்
தயங்காதேஉன்
தனித்துவத்தை இழக்காதே
தட்டிக் கொடு
தைரியம் சொல்

நரிகள் வாழும் பூமியிது
நல்லதை எதிர்பார்க்காதே

வலிகளின் படிகளில் ஏறு
அது வந்த வழியினை இழுத்து நீ மூடு

நீதான் நாளைய வரலாறு
என்றொரு காலம் வரும் பாரு

பெரியமடு நிஹ்ரி

கடைசி பந்தில் சிக்சர் அடித்து பெங்களூர் அணியை வீழ்த்தியது பஞ்சாப் அணி

பெங்களூர் அணிக்கு எதிரான பரபரப்பான ஆட்டத்தில் பஞ்சாப் அணி கடைசி பந்தில் சிக்சர் அடித்து திரில் வெற்றியை பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பெங்களூர் அணிக்கு எதிரான பரபரப்பான ஆட்டத்தில் பஞ்சாப் அணி கடைசி பந்தில் சிக்சர் அடித்து திரில் வெற்றியை பெற்றது. லோகேஷ் ராகுல், கெய்ல் அரைசதம் விளாசினர்.

13வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள துபாய், சார்ஜா, அபுதாபி ஆகிய நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் மற்ற அணியுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறும். இந்த நிலையில் சார்ஜாவில் நேற்றுமுன்தினம் அரங்கேறிய 31 வது லீக் ஆட்டத்தில் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. பஞ்சாப் அணியில் முதல்முறையாக அதிரடிவீரர் கிறிஸ் கெய்ல் சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் தலைவர் விராட் கோலி தயக்கமின்றி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இதன்படி தேவ்தத் படிக்கல்லும், ஆரோன் பிஞ்சும் பெங்களூர் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக நுழைந்தனர். ஆச்சரியமூட்டும் விதமாக பஞ்சாப் தலைவர் லோகேஷ் ராகுல் முதல் ஓவரில் பகுதி நேர சுழற்பந்து வீச்சாளர் மேக்ஸ்வெல்லை பயன்படுத்தினார். அந்த ஓவரில் பிஞ்ச், ஒரு சிக்சர் அடித்தார். பிஞ்ச் - படிக்கல் கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 38 ஓட்டங்கள் திரட்டி உடைந்தது. தேவ்தத் படிக்கல் (18 ஓட்டங்கள்), அர்ஷ்தீப்சிங் பந்து வீச்சில் கேட்ச் ஆனார். அடுத்து தலைவர் விராட் கோலி வந்தார். 'பவர் பிளே'யான முதல் 6 ஓவர்களில் பெங்களூர் அணி ஒரு விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அதன் பிறகு ஆரோன் பிஞ்ச் (20 ஓட்டங்கள்) முருகன் அஸ்வின் சுழலில் கிளீன் போல்ட் ஆனார்.

3வது விக்கெட்டுக்கு வழக்கத்துக்கு மாறாக வாஷிங்டன் சுந்தர் களம் அனுப்பப்பட்டார். 13 ஓட்டங்கள் எடுத்த அவர் பந்தை சிக்சருக்கு விரட்ட முயற்சித்து ஆட்டம் இழந்தார். இதையடுத்து சகல துறைவீரர் ஷிவம் துபே அடியெடுத்து வைத்தார்.

மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய தலைவர் விராட் கோலியாலும் பெரிய அளவில் அதிரடி காட்ட முடியாமல் தடுமாறினார். இதனால் ஓட்ட வேகம் கொஞ்சம் குறைந்தது. இந்த சூழலில் 14வது ஓவரில் ரவி பிஷ்னோயின் பந்து வீச்சில் தொடர்ந்து 2 சிக்சர்களை பறக்க விட்ட ஷிவம் துபே 23 ஓட்டங்களில் (19 பந்து) பெவிலியன் திரும்பினார்.

இதன் பின்னர் சூறாவளி துடுப்பாட்ட வீரர் டிவில்லியர்ஸ் இறங்கினார். தாம தமாக வந்தாலும் சிறிய மைதானத்தில் வாணவேடிக்கை நிகழ்த்தப்போகிறார் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவர் 2 ஓட்டங்களில் (5 பந்து) ஷமியின் பந்து வீச்சில் பிடி ஆனார். அதே ஓவரில் தலைவர் விராட் கோலியும் (48 ஓட்டங்கள், 39 பந்து, 3 பவுண்டரி) வீழ்ந்தார். இதனால் ஓட்ட விகிதம் மேலும் சரிந்தது.

பெங்களூர் அணிக்கு அதிர்ஷ்டவசமாக சகலதுறை வீரர் கிறிஸ் மோரிஸ் கைகொடுத்தார். 19வது ஓவரில் ஒரு சிக்சர் விளாசிய அவர் முகமது ஷமியின் கடைசி ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி விரட்டினார். உதனாவும் இறுதி ஓவரில் ஒரு சிக்சர் அடிக்க அணி 170 ஓட்டங்களை தாண்டியது. 20 ஓவர்களில் பெங்களூர் அணி 6 விக்கெட்டுக்கு 171 ஓட்டங்கள் சேர்த்தது. மோரிஸ் 25 ஓட்டங்களுடனும், உதனா 10ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். பஞ்சாப் தரப்பில் முகமது ஷமி, முருகன் அஸ்வின் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

அடுத்து 172 ஓட்டங்கள் இலக்கை நோக்கி களம் புகுந்த பஞ்சாப் அணியின் தொடக்க வீரர்கள் மயங்க் அகர்வாலும், தலைவர் லோகேஷ் ராகுலும் கலக்கலாக ஆடினர். முதல் விக்கெட்டுக்கு 78 ஓட்டங்கள் எடுத்து அட்டகாசமான தொடக்கத்தை ஏற்படுத்தி கொடுத்தனர். மயங்க் அகர்வால் 45 ஓட்டங்களில் (25 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்சர்) போல்ட் ஆனார். இதைத் தொடர்ந்து கிறிஸ் கெய்ல் இறங்கினார். இந்த ஆண்டு ஐ.பி.எல்.ல் முதல் முறையாக களம் கண்ட கெய்ல் ஓரிரு ஓவர்களை சமாளித்த பிறகு தனது கைவரிசையை காட்டினார். வாஷிங்டன் சுந்தரின் ஓவரில் 2 சிக்சர்களை கிளப்பினார். இன்னொரு பக்கம் லோகேஷ் ராகுலும் ஏதுவான பந்துகளை தெறிக்க விட்டார். இதனால் பஞ்சாப் அணி வெற்றியை நோக்கி முன்னேறியது. கெய்ல் 36 பந்துகளில் அரைசதத்தை எட்டினார்.

கடைசி ஓவரில் பஞ்சாப் அணிக்கு 2 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது. இறுதி ஓவரை சுழற்பந்து வீச்சாளர் யுஸ்வேந்திர சாஹல் வீசினார். எளிதில் வெற்றி பெற்று விடும் என்ற நினைத்த வேளையில் பஞ்சாப் வீரர்கள் இந்த அளவுக்கு பரபரப்பாக்குவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. முதல் 2 பந்துகளை வீணடித்த கெய்ல் 3வது பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார். 4வது பந்தில் ஓட்டம் எடுக்காத லோகேஷ் ராகுல் 5வது பந்தில் ஒரு ஓட்டத்துக்கு முயற்சித்த போது கெய்ல் (53 ஓட்டங்கள், 45 பந்து, ஒரு பவுண்டரி, 5 சிக்சர்) ரன்அவுட் ஆனார். இதனால் பதற்றம் தொற்றியது.

கடைசி பந்தில் பஞ்சாப்புக்கு ஒரு ஓட்டம் தேவையாக இருந்தது. ஓட்டம் கொடுக்காமல் மடக்கினால் ஆட்டத்தை சூப்பர் ஓவருக்கு நகர்த்தலாம் என்ற எண்ணத்துடன் பெங்களூர் தலைவர் கோலி களத்தடுப்பாளர்களை நெருக்கமாக நிறுத்தினார். ஆனால் புல்டாசாக வந்த கடைசி பந்தை சந்தித்த நிகோலஸ் பூரன் சிக்சருக்கு தூக்கியடித்து வெற்றிக்கனியை பறித்தார்.

பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 177 ஓட்டங்கள் குவித்து 8 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றியை பெற்றது. லோகேஷ் ராகுல் 61 ஓட்டங்களுடன் (49 பந்து, ஒரு பவுண்டரி, 5 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

6 தோல்விகளால் துவண்டு போய் இருந்த பஞ்சாப் அணி ஒரு வழியாக வெற்றிப்பாதைக்கு திரும்பியிருக்கிறது. இது பஞ்சாப் அணியின் 2வது வெற்றியாகும். முதலாவது வெற்றியும் இதே பெங்களூருக்கு எதிராகத்தான் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் 8வது லீக்கில் ஆடிய பெங்களூர் அணிக்கு இது 3வது தோல்வியாகும்.

SINCE 1978 42nd
OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel

42வது ஒப்சவர்-மொபிடெல்

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : .....
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : .....
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : .....
வாக்களித்தவர் பெயர் : .....
முகவரி : .....
மொபைல் இல. : .....

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-10-17 இல. 32

குளிர்பானம் சுமந்தாலும் அணியின் வெற்றியே முக்கியம் –இம்ரான் தாஹிர்

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சிறந்த சுழற்பந்து வீச்சாளரான இம்ரான் தாஹிர், ஆடும் லெவன் அணியில் இடம் கிடைக்காமல் குளிர்பானம் சுமந்து கொண்டிருக்கிறார்.

கடந்த ஐபிஎல் பருவத்தில் 26 விக்கெட்டுகளை வீழ்த்தி முதன்மை விக்கெட் கைப்பற்றியவராக ஜொலித்தவர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடும் தென்னாபிரிக்காவின் சுழற் பந்து வீச்சாளர் இம்ரான் தாஹிர். துபாயில் நடைபெற்று வரும் நடப்பு ஐபிஎல் பருவத்தில் ஒரே ஒரு ஆட்டத்தில் கூட விளையாடாமல் பெஞ்சில் உட்கார வைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த கரீபியன் பிரிமீயர் லீக் தொடரிலும் 15 விக்கெட்டுகளை தாஹிர் வீழ்த்தியிருந்தார். இருப்பினும் சென்னையின் ஆடும் லெவனில் அவர் இடம் பிடிக்காமல் உள்ளார். அவர் களத்தில் விளையாடும் வீரர்களுக்கு குளிர்பானம் எடுத்துச் செல்லும் பணிகளை அவ்வப்போது கவனித்து வருகிறார்.

இந்நிலையில் இது குறித்து இம்ரான் தாஹிர் தனது டுவிட்டர் பக்கத்தில் ''நான் களத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது பல வீரர்கள் எனக்கு குளிர்பானம் கொண்டு வந்து கொடுத்துள்ளனர். இப்போது நான் அந்த பணியை திரும்ப செய்து வருகிறேன். களத்தில் விளையாடும் வீரர்களுக்கு குளிர்பானம் கொடுத்து வருகிறேன். அது என் கடமையும் கூட. நான் அணியில் விளையாடுகிறேனா? இல்லையா என்பது விஷயமல்ல. எனது அணி வெற்றி பெறுவதுதான் முக்கியம்.

எனக்கு விளையாடும் வாய்ப்பு கிடைக்கும் போது சிறப்பாக செய்வேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தை பச்சை புற்தரையாக மாற்றித் தருவேன்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் அனுர டி சில்வா

பெரியநீலாவணை விசேட நிருபர்

மருதமுனையில் அமைந்துள்ள மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தை உதைபந்தாட்ட வீரர்கள் விளையாடுவதற்கு பொருத்தமான பச்சைப்பசேல் கொண்ட புற்தரையாக விரைவில் மாற்றித் தருவதற்கு வாக்குறுதி அளிக்கிறேன் என்று இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் செயலாளரும் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம். அப்துல் மனாபை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சங்கத்தின் தலைவரும் முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான வை.கே. றஹ்மான் தலைமையில் கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் கடந்த (04ம் திகதி) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றும் போது,

நான் இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் பொறுப்பை பொறுப்பேற்கும் போது அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட துறை ஒரு வீழ்ச்சி நிலையில் இருந்தது. இதனை கருத்தில் கொண்டு இந்த மாவட்டத்திற்கு உபதலைவர் ஒருவரை நியமித்து இருக்கின்றோம். இவர் ஊடாக மாவட்டத்தின் உதைபந்தாட்ட துறையை வளர்ச்சி அடையச் செய்யலாம் என எதிர்பார்க்கின்றேன். இந்தப் பிரதேசத்தைப் பொறுத்த அளவில் இரண்டு மைதானங்கள் இருக்கின்றன. ஒன்று கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானம் மற்றையது மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானம் ஆகும்.

இவற்றில் மசூர் மௌலானா விளையாட்டு மைதானம் எங்களது இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நேரடி பராமரிப்பில் உள்ள மைதானம் ஆகும். இதனால் இந்த மைதானத்தை புனரமைப்பு செய்வது எமக்கு இலகுவாக இருக்கும். மிக விரைவில் இந்த மைதானத்தை புற்கள் நிரம்பிய விளையாடுவதற்கு பொருத்தமான மைதானமாக செப்பனிட்டு தருவேன். என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ள செயற்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதே போன்று மாவட்டத்தின் விளையாட்டு துறையை அபிவிருத்தி செய்வதற்கான 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்ய உள்ளோம். இப்போதைக்கு எனக்கு புதிய தலைவர் ஒருவர் இந்தப் பகுதிக்கு கிடைத்திருப்பதால் இவற்றை இலகுவாக மேற்கொள்ள முடியும் என நம்புகிறேன். புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அப்துல் மனாப் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜஸ்வர் உமர், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உயர் பீட உறுப்பினர்கள், நடுவர் சங்க உறுப்பினர்கள், விளையாட்டு கழகங்களின் நிர்வாக உறுப்பினர்கள், ஊடக வியலாளர்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யு.இ.எஃப்.ஏ நேஷன்ஸ் லீக்: பிரான்ஸ்–போர்த்துக்கல் அணிகள் வெற்றி

யு.இ.எஃப்.ஏ நேஷன்ஸ் லீக் கால்பந்து தொடரின் நான்காவது கட்ட போட்டிகளில், பிரான்ஸ், போர்த்துக்கல், பெல்ஜியம், டென்மார்க் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

இதில் குழு சி பிரிவில் குரோஷியா அணியும் பிரான்ஸ் அணியும் மோதிய போட்டியில், பிரான்ஸ் அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேபோல குழு சி பிரிவில் நடைபெற்ற இன்னொரு போட்டியில், போர்த்துக்கல் அணியும், சுவீடன் அணியும் மோதின. இப்போட்டியில் போர்த்துக்கல் அணி 3-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

குழு பி பிரிவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், பெல்ஜியம் அணியும், ஐஸ்லாந்து அணியும் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் பெல்ஜியம் அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

குழு பி பிரிவில் நடைபெற்ற இன்னொரு போட்டியில், டென்மார்க் அணி, இங்கிலாந்து அணியை எதிர்கொண்டது. இதில் டென்மார்க் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 17ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.